பெப். 14 - பெப். 20, 2010 Feb 14 - Feb 20, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI


வார மலர்

## மாகாணத்திலிருந்து கிராமத்துக்கு...!

## முள்ளி வாய்க்காலும் முள்ளுக் கம்பி வேலியும்



## மஹிந்த சிந்தனைவாதிகள் மஹாதன முத்தர்களா?



# வளைந்து போனதொரு போர்வாளின் கதை!

# மாகாணத்திலிருந்து கிராமத்துக்கு....!

நாடு சுதந்திரம் அடைந்து 62 வருடங்களாகியுள்ள போதும்- நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் தமது உரிமைக்காக 60 வருடங்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

62ஆவது சுதந்திர தின விழாவில் 'குண்டு' ஒன்றைத் தூக்கிப் போட்டுள்ளார் நாட்டின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் 62 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் வழமை போல் காலிமுகத் திடலில் இம்முறை நடைபெறவில்லை. வழமையான படையணிகளின் அணிவகுப்புக்கள், சாகச நிகழ்ச்சிகள், யுத்த டாங்கிகள் பவனி எதுவும் இன்றி அமைதியான முறையில் கண்டியில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொண்டாட்டங்களில் நாட்டின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார். ராஜதந்திரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றுகையில்- ''எமது தாய்நாட்டையும் மக்களையும் குறைத்து மதிப்பிடவேண்டாமெனப் பிரிவினைவாத சக்திகளையும் சர்வதேச சதிகாரர்களையும் பார்த்து கண்டிப்புடன் நான் கூறுகிறேன்.

வடக்கு, கிழக்கு மக்களின் மரண பயத்தை நீக்கிய பின்னர், அப்பகுதியில் பெரும் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். அப்பகுதி மக்கள் கடந்த 30 வருடங்களாக ஜனநாயக உரிமையின்றி துயருற்றனர். என்னால் அவர்களுக்கு ஜனநாயகத்தை வழங்க முடிந்தது. இதுவே நாம் பெற்ற மாபெரும் வெற்றியாகும்.

கிராமங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதன் மூலமா

மூன்று கட்டங்களில் அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்படும் என்று அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் தெரிவுக் குழுவின் தலைவரும், அமைச்சருமான திஸ்ஸ விதாரண கருத்து வெளியிட்டிருந்தார்.

மத்தியில் உள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கு



பரவலாக்குவது; மாவட்ட மட்டத்தில் அதிகாரங்களை பரவலாக்குவது, கிராமமட்டத்துக்கு அதிகாரங்களை பரவலாக்குவது மூன்று கட்டங்களில் அதிகாரங்கள்

அமையமுடியும். அத்தகைய தீர்வு ஒன்றை சிங்களத் தலைமைகள் முன்வைக்கும் போதுதான் நாடு அமைதியடையும்; அபிவிருத் தியடையும்.

அரைகுறையாக முன்வைக்கப்படும் எந்தத்தீர்வும் நிலைத்து நிற்கமாட்டாது. பதிலுக்கு மேலும் அந்த மக்களின் போராட்டங்கள் மீண்டும் தீவிரமாகும் நிலையே ஏற்படும் என்கிறார்கள் நோக்கர்கள். இந்த யதார்த்த நிலையை தெற்குத் தலைமைகள் எப்போது ஏற்கிறார்களோ அப்போதுதான் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லச் சந்தர்ப்பம் கிட்டும்.

அதுநிற்க - ஜனாதிபதித் தேர்தல் களைப்பு ஆறுவதற்கு முன்பாக நாடாளுமன்றத் தேர்தல் வந்துள்ளது. தேர்தல் அறிவிப்பு வந்த கையோடு கட்சிகளுக்கு இடையே பேரம் பேசும் நாடகங்களும் அரங்கேறி வருகின்றன.

யாழ். மாநகர சபைத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் அரசாங்கத்துடன் இணைந்து நின்ற ஈ.பி.டி.பி பொதுத் தேர்தலில் தனது வீணைச் சின்னத்தில தணித்துக் களமிறங்க முனைந்துள்ளது.

அதேபோல் கிழக்கில் அரசுடன் இணைந்து மாகாணசபைத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் நின்ற பிள்ளையான் தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தனித்துப் போட்டியிட முற்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கில் தம்முடன் போட்டியிட்ட ஈ.பி. டி.பி, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஆகியன தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதால் - இருமாகாணங்களிலும் தமது கட்சி சார்பில் வேட்பாளர்களை நிறுத்த அரசுத் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான முன்னோடி ஏற்பாடுகள் யாழ்ப் பாணத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

அரசுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளோட், ஈ.பி.ஆர். எல்.எவ் பத்மநாபா அணி ஆகியன உள்ளடக்கிய முக்கூட்டணியும் களம் இறங்கப் போகின்றது.

இளைஞர்கள்,புத்திஜீவிகள் எனப் பல்வேறு தரப்பினரை உள்வாங்கிப் பலமான அணியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு களம் இறக்கப் போகின்றது. பல்வேறு மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தி அவர்களை உள்வாங்கி பரந்துபட்டவர்களைக் கொண்ட அணியாக அது தேர்தலைக் சந்திக்கப்போகின்றது.



கவும் நாட்டில் அவர்களை முழுமையாகப் பலப்படுத்துவதன் மூலமாகவும் அவர்கள் சொந்தக் காலில் நிற்கும் நிலையை ஏற்படுத்துவோம். இதற்காக அவர்களுடனும் அவர்களுடைய பிரதிநிதிகளுடனும் பேச்சுகள் இடம் பெறவேண்டும் என்று கருதுகிறேன்''.

இப்படித் தனது சுதந்திர தினப் பேச்சில் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி. நடந்து முடிந்த தேர்தலில் 18 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்ற சாதனையைப் பெருமைப்படுத்தும் வகையில் அவரது பேச்சு அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் கடந்த 60 வருடங்களாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அஹிம்சை வழியில் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், பகிஷ்கரிப்பு என 30 வருடங்கள் போராடிய தமிழர் பின்னர் 30 வருடங்கள் ஆயுத வழியில் போராட்டம் நடத்தினர்.

சொந்தத் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு ஒன்றை நோக்கி தமிழர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் லட்சக்கணக்கானவர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பலகோடி ரூபா உடைமைகள் நாசமாக்கப்பட்டன. தமது இலட்சியப் பயணத்தில் பலவிதமான தியாகங்களை, அர்ப்பணிப்புக்களை தமிழர் செய்த போதும் தமது கொள்கையில் இன்னும் இறுக்கமாகவே நிற்கிறார்கள்.

அவர்கள் வேண்டுவது, வடக்கு- கிழக்குத் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலையேயாகும்.

இப்போது நாட்டின் தலைவர் வெளிப்படுத்தும் செய்தி அந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

கிராம மட்டத்துக்கு அதிகாரம் வழங்குவது என்பது முன்னர் நடைமுறையில் இருந்த கிராமச் சங்க நிர்வாக முறையாகும். கிராம சபை, பட்டினசபை என முன்னர் இருந்த நிர்வாக முறை பின்னர் பிரதேச சபையாக மாற்றம் பெற்றது. மீண்டும் கிராமசபை, பட்டினசபை என புதிய நிர்வாக அலகுகள் உருவாக்கப்பட்டு அவற்றுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு அரசு திட்டமிடுகின்றது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவுக்குழு, நிபுணர்குழு போன்றவை கூட கிராம மட்டத்துக்கு அதிகாரத்தைப் பகிர்வது குறித்து ஆராய்ந்துள்ளன.

பகிர்ந்து அளிக்கப்படும் என்று திஸ்ஸ விதாரண கருத்துக் கூறியிருந்தார்.

சகல மக்களும் நிர்வாகங்களில் பங்களிப்பு செய்ய இதன் மூலம் வாய்ப்புக் கிட்டும் என்பது அவரது கருத்து.

எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் தனது வேட்பாளர்களை களம் இறங்கப் போகின்றது. சுயேச்சைக்குழுக்கள் பலவும் களம் இறங்கத் திட்டமிட்டிருக்கின்றன. பேரம் பேசும் சக்தியாக, தமிழ்க்கட்சிகள் யாவும்

## களம் இறங்கத் தயாராகும் பத்து அணிகள்

இந்த வகையிலான தீர்வு யோசனையை தாம் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சகல மக்களும் நிர்வாகங்களில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்பது நியாயமானதுதான். அந்தமக்கள் அவர்களது தாயகத்தில் தம்மைத் தாமே ஆளும் நிலை- அதாவது சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலை தோற்றுவிக்கப்படுமா என்பதே அவர்களிடத்தில் எழுந்துள்ள கேள்வியாகும்.

யாழவன்

கடந்த 60 வருடங்களாக அவர்கள் போராடுவது தங்கள் தாயகத்தில் நிம்மதியான வாழ்வுக்குத்தான். சுயநிர்ணய உரிமையுடன் வாழும் உரிமையைத்தான் அவர்கள் கேட்கிறார்கள்.

அதைவிட்டு கிராம மட்டத்துக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அவர்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் நிலை தோற்றுவிக்கப்படுவதன் மூலம் அவர்களின் பிரச்சினை முடிந்து விடப் போவதில்லை. அந்த மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கும் வகையில் காணப்படும் தீர்வே நிரந்தரத் தீர்வாக

ஓரணியில் நின்று போட்டியிட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

அந்த நிலை ஏற்பட வாய்ப்பு குறைவு எனக் கூறப்படுகின்றது. அவ்வாறு இல்லையாயின்- பத்துக்கு மேற்பட்ட அணிகள் தேர்தல் விளையாட்டில் மோதப் போகின்றன. ✱

## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடங்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர்கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.

*எழுதுங்கள்!*

*உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!*

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

எல்லோருமே எதிர்பார்த்திருந்த நிகழ்வொன்று- எவருமே எதிர்பாராத கணம் ஒன்றில்- நடந்தேறியிருக்கின்றது. முதல் வரியைப் படித்தவுடனேயே உங்களுக்கு என்ன விடயம் என்று சட்டெனப் புரிந்திருக்கும். கைகளிலும் கால்களிலும் பற்றி இழுக்கப்பட்டு தரதரவென கூட்டிச் செல்லப்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகாவின் பரிதாபமான விம்பம் கூட இந்தச் சமயத்தில் உங்கள் மனத்திரையில் ஞாபகத்திற்கு வந்திருக்கலாம். இலங்கையின் அதிகாரமிக்க அதியுயர் பதவியை சில மாதங்களுக்கு முன்னர் வரை வகித்து வந்த ஒருவர் இவ்வாறு தடாலடியாக- இத்தனை நாளும் அவருக்கு கீழே பணிபுரிந்து, அவ ரிட்ட கட்டளைகளை சிரமேற்கொண்டு செய்து வந்த சிப்பாய்களாலேயே - தரதரவென இழுத்துக்கொண்டு செல்லப்பட்ட சம்பவம் இலங்கையில் உள்ள சகல இன

படுகொலை செய்வதற்கான திட்டத்தை குறித்த ஹோட்டலில் இருந்து சரத் பொன்சேகா தீட்டிக்கொண்டிருந்தாலேயே அவர் சுற்றிவளைக்கபட்டிருப்பதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த நானூறு பேர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் எனவும் அவர்களைக் கைது செய்வதற்காகவே ஹோட்டலை இராணுவத்தினர் சுற்றிவளைத்திருப்பதாகவும் பின்னர் அறிவிக்கப்பட்டது. நீண்ட நேர இழுபறிக்குப் பின்னர் நள்ளிரவு நேரத்தில் தன்னந்தனியாக அங்கிருந்து வெளியேறிச் செல்வதற்கு பொன்சேகாவுக்கு அனுமதி கிடைத்தது. அதன் பின்னர் சில நாள்கள் தலைமறைவாகவே பொன்சேகா இருந்தார். ஒரு நாள் எல்லா


வெளியிட்ட தவறான கருத்துக்களே இதற்கு காரணம் எனவும் அரசாங்கம் குற்றஞ்சாட்டியது. இது தவிர இராணுவத்திற்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் வகையில் கருத்துக்களை வெளி யிட்டமைக்காகவும், மஹிந்தவையும் அவரது சகோதரர்களையும் படுகொலை செய்வதற்கான திட்டத்தை தீட்டியமைக்காகவும்



ஒருவாறு 'ஐஸ்' வைத்து தம்பக்கம் இழுப்பதற்கு இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சரும், சட்டமா அதிபரும் ஜெனிவா சென்றுள்ள தருணத்தில் பொன்சேகா வெளியிட்ட கருத்துக்கள் சர்வதேச ரீதியாக அரசுக்கு எதிர்மறை விளைவுகளையே உண்டாக்கும் என்பதால் ஆட்சியாளர்களுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

சில அரசியல் தலைவர்களோடு உரையாடிக்கொண்டிருக்கும் போது எவ்வித யோசனைகளுக்கும் இடங்கொடாது, பொன்சேகா படையினரால் கைதுசெய்யப்பட்டு

# மஹிந்த சிந்தனைவாதிகள் மஹதன முத்தர்களா?



மக்களிடையேயும் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்திருக்கின்றது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகக் களமிறக் கப்பட்டவர் ஜெனரல் சரத்பொன்சேகா. மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் வன்னி மீதான யுத்தத்தை திறம்பட நடத்தியவரும் அவரே. முப்பது வருடங்களுக்கு மேலாக நாட்டில் நிலவிவந்த ஆயுதப்போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் என்ற பெருமையும், யுத்தத்தின் நாயகன் என்ற அடையாளமும் சரத்பொன்சேகாதான் மஹிந்தவின் குடும்ப அரசியலை வீழ்த்தக்கூடிய ஒரேஒரு ஆயுதம் என்ற முடிவுக்கு எதிர்க் கட்சிகளை இட்டுச் சென்றன. ஆனாலும் பிரசாரக் கூட்டங்களின் போதும், கருத்துக் கணிப்புகளின் போதும் பொன்சேகாவுக்கு கிடைத்த ஆதரவலை தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கவில்லை. மீண்டும் அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் மஹிந்தவே ஜனாதிபதித் தேர்தலில் வாகை சூடிக் கொண்டார். தேர்தல் முடிவுகள் வெளிவந்த சூட்டோடு சூடாக தனியார் ஹோட்டல் ஒன்றில் தங்கியி ருந்த பொன்சேகாவும் ஏனைய சில அரசியல் தலைவர்களும் துருப்புகளால் சுற்றிவளைக்கப்பட்டு- ஏறக்குறைய ஒரு வீட்டுக்காவல் நிலையைப் போல- வெளியேற முடியாத அளவுக்கு உள்ளே தடுத்து வைக்கப்பட்டனர். இதற்கு அரசுத்தரப்பில் இருந்து பல்வேறு காரணகாரியங்கள் வகைதொகையின்றி எடுத்துவிடப்பட்டன. மஹிந்தவையும் அவரது சகோதரர்களையும்

மௌனங்களையும் உடைத்துக்கொண்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர், ''மக்களின் ஜனநாயக உரிமைகளை மீட்பதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி யிடவுள்ளேன். அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மோசடியாக மாற்றிய அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் திரட்டி போராடவும் முடிவு செய்துள்ளேன்'' என்று தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு களோடு அடங்கிவிடுவார் என்று நினைத்த பொன்சேகா, சிணங்கொண்ட காளையாக மீளவும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்தமை மஹிந்த அரசுக்கு ஒரு தலையிடியாகவே அமைந்தது. ஏனெனில் விரும்பியோ விரும்பாமலோ பொன்சேகா தேர்தலில் போட்டியிடும் நிலை ஒன்று வந்தால் அது அரசாங்கத்திற்கு சார்பான வாக்களிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். அது மட்டுமன்றி ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மோசடி முறை மூலம் திரிபு படுத்தப்பட்டே வெளியிடப்பட்டது என்ற கருத்தை பொன்சேகா மக்களிடம் பரப்ப முனைந்தால்- தேர்தல் முடிவுகள் எவ்வித மோசடிகளும் அற்று நியாயமான முறையில் வெளியிடப்பட்டிருந்தால் கூட- அது மக்களிடத்தே இன்னொரு வகையான சலசலப்பை உண்டுபண்ணி மக்கள் கிளர்ச்சி ஒன்றுக்கும் வழிவகுக்கக் கூடும். இவற்றையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்த பின்னர் எப்படியாவது பொன்சேகாவின் மதிப்பினை மக்கள் மத்தியில் இருந்து கீழிறக்க வேண்டும் என அரசு தீர்க்கமாக முடிவு செய்தது. அதற்கேற்றால் போல் புறச் சூழ்நிலை களை தன்க்குச் சாதகமாக மாற்றுவதற்காக அவ்வப்போது சில கதையாடல்கள் புழக்கத்திற்கு விடப்பட்டன. இலங்கை இராணுவத் தினருக்கான விஷேட பயிற்சிகளை வழங்க பல வெளிநாடுகள் மறுத்திருப்பதாகவும், பொன்சேகா இராணுவத்தினரைப் பற்றி

**குறுக்காலபோவான்**

இராணுவ நீதி மன்றத்தில் ஜெனரல் சரத்பொன்சேகா ஆஜர்ப் படுத்தப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக அரசுத் தரப்பில் இருந்து அரசல் புரசலாக ஒருசில ஊகங்கள் கசியத்தொடங்கின. இதன் அடிப்படையில் சரத்பொன்சேகா கைதுசெய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் எழுந்திருந் தாலும், இவ்வளவு விரைவாக அதுவும் ஓர் அதிபயங்கரக் குற்றவாளியைக் கைதுசெய்வது போல் கௌரவக் குறைச்சலுடன் பொன்சேகா கைதாகும் படலம் நடக்கும் என்று எவருமே எண்ணியிருக்கவில்லை.

இவ்வளவு அவசர அவசரமாக பொன்சேகா கைது செய்யப்பட்டமைக்கு வேறேதும் பின்னணிக் காரணங்கள் இருக்கக்கூடும் என்றே அனேகர் கருதுகின்றனர். வன்னி மீதான இறுதிக்கட்டப் போரின் போது படையினரிடம் சரணடைவதற்காக வெள்ளைக் கொடியுடன் வந்த புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டளைப்படி, ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டதாக தேர்தல் காலத்தின் போது சரத்பொன்சேகா வெளியிட்ட கருத்தால் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசு மீதான எதிர்ப்பலைகள் என்றுமில்லாத அளவுக்கு மேலெழுந்துள்ளன. இந்த நிலையைச் சரிக்கட்டுவதற்காக- ஐ.நா சபையின் மனித உரிமைக் கவுன்ஸிலிடம் இலங்கை அரசின் விளக்கத்தைக் கூறுவதற்காக இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸும் ஜெனிவாவுக்குப் பயணமாகியுள்ளனர். இவர்கள் பயணமான அதே தினத்தில் போர் தொடர்பான சகல குற்றச்சாட்டு களுக்கும் தான் சர்வதேச நீதிமன்றத்தில் சாட்சியளிக்கத் தயார் என்று பொன்சேகா ஊடகவியலாளர் களுக்குத் தெரிவித்திருந்தார். கோபக் கனலோடு இருக்கும் சர்வதேசத்தை

பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டார். இதனூடாக பொன்சேகாவின் வாய்க்குப் பூட்டுப் போடப்பட்டு, சர்வதேச நீதிமன்றத்தில் அவர் பிரசன்னமாகி இலங்கை அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதில் இருந்து தப்பிக் கொள்ள அரசால் முடிந்திருக்கிறது. ஆனாலும் பொன்சேகாவின் சாட்சியத்தை விடவும் அவரைக் கைது செய்த விடயம் இன்னமும் அரசின் பெயரை சர்வதேச ரீதியில் கீழிறங்கச் செய்வதற்கே உதவப் போகின்றது. தமக்கெதிரானவர்கள் எல்லோரையும் மஹிந்த சிந்தனையாளர்கள் கைது செய்கிறார்கள்; அல்லது அவர்களை வன்முறை மூலம் மௌனிக்கச் செய்கிறார்கள் என்ற கருத்தோட்டமே இதன் மூலம் சர்வதேசத்தின் மனதில் ஆழப்பதியும்.

இது தவிர பொன்சேகாவின் பாதுகாப்பு விடயத்தில் தனக்குள்ள அக்கறையை அமெரிக்கா சில நாள்களுக்கு முன்னர் பகிரங்கமாக வே ஒப்புக்கொண்டிருந்தது. ஏற்கனவே நொந்து நூலாகிக் கிடக்கும் இலங்கை- அமெரிக்கா உறவுகளை சீர்படுத்தும் வகையில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி மார்ட்டின் லூதர் கிங்கின் மகன் மூலமாக அமெரிக்காவிற்கு இலங்கை அரசு தூது விட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் நடந்துள்ள பொன்சேகாவின் கைது, இலங்கை அரசின் எல்லாப் பிரயத் தனங்களையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியுள்ளது. ஒரு பிரச்சினை யில் இருந்து தப்புவதற் காகமுன் பின் யோசிக்காமல் காரியத்தில் இறங்கி அதைவிட பாரிய பின்விளைவை உண்டு பண்ணுகின்ற இன்னொரு பிரச் சினையில் சிக்குகின்ற - மாட்டின் தலையில் சிக்கிய பானையை மீட்க மாட்டின் தலையை அறுத்த- 'மஹதன முத்த' என்ற சிங்களக் கதைதான் அரசின் செயற் பாட்டை பார்க்கும் போது ஞாபகத் திற்கு வருகின்றது. இதன் மூலம் மஹிந்த சிந்தனை வாதிகள் எல்லோ ரும் நவீன மஹதன முத்தர்களோ என்று உங்களுக்கு எண்ணத்தோன்றி னால் அதற்கு யாருமே பொறுப்பல்ல.

***

# சுடர் ஒளி

பெப். 14 - பெப். 20, 2010

85, ஜெயந்தமல் விமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com


## தோல்வியின் இறுதிக் கட்டத்தில்

ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் அல்ஹைடா போராளிகளின் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் தோல்வியின் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூயோர்க் வர்த்தக மையம் மீதான தாக்குதலை அடுத்து தனது படைகளை அமெரிக்கா ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பி பதவியில் இருந்த தலிபான் அரசாங்கத்தைக் கவிழ்த்தது. தற்போது அமெரிக்காவுக்கு ஆதரவான பொம்மை அரசாங்கம் ஒன்று அங்கு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளது. இந்த பொம்மை அரசுக்கு எதிராகவும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளுக்கு எதிராகவும் கடந்த எட்டு வருடங்களாக தலிபான் மற்றும் அல்ஹைடா போராளிகள் போராடி வருகின்றனர். போராளிகளின் தற்கொலைத் தாக்குதல்களிலும் கார்க்குண்டு வெடிப்புக்களிலும் அங்கு ஆயிரக்கணக்கான பொதுமக்களும் நேட்டோப் படையினரும் உயிரிழந்துள்ளனர். தலிபான், அல்ஹைடா போராளிகளுக்கு எதிராக தற்பொழுது ஒரு லட்சத்து 10 ஆயிரம் நேட்டோ படைகள் சண்டையிட்டு வருகின்றன. இன்னும் 40 ஆயிரம் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்ப அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனினும் இந்த மேலதிக படைகள் வந்தாலும் கூட ஆப்கானிஸ்தானில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நம்பிக்கையை அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானில் தற்பொழுது பதவியில் இருந்து வரும் அரசாங்கமும் இழந்து விட்டன.

சமீபத்தில் நேட்டோ அமைப்பின் தலைவர் அன்டெர்ஸ் பொக் ராஸ்முரியன் தெரிவித்த கருத்தும், தலிபான்களையும் அல்ஹைடா போராளிகளையும் சமாதானப் பேச்சுக்கு வரும்படி பதவியில் உள்ள ஆப்கான் அரசு விடுத்துள்ள அழைப்பும் நேட்டோ படைகளின் தோல்வியையே எடுத்துக் காட்டுகின்றன.

ஆப்கானிஸ்தானில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டுமானால் சீனா இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மிகவும் நெருக்கமாகச் செயலாற்ற வேண்டும் என்று நேட்டோ தலைவர் கூறுகிறார்.

சமாதானப் பேச்சுக்கான அழைப்பை தலிபான் தலைவர்கள் நிராகரித்துள்ள நிலைமையிலேயே நேட்டோ தலைவரின் யோசனை வெளிவந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய போராளிகளை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளினால் தோற்கடிக்க முடியாதிருப்பதற்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று ஆப்கான் மக்கள் மத்தியில் தலிபான்களுக்கு இருந்து வரும் செல்வாக்கு. மற்றது பாகிஸ்தான் ஊடாக ஆயுதங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது.

தலிபான் போராளிகளுக்கான வினியோகப்பாதையை தகர்க்கும் நோக்கத்துடனே அமெரிக்கப்படைகள் பாகிஸ்தானுக்குள்ளும் யுத்தத்தை விஸ்தரித்துள்ளன. ஆகவே, தலிபான்களை தோற்கடிப்பதற்கு பாகிஸ்தான் அரசின் உதவியும் அமெரிக்காவுக்கு கட்டாயம் தேவைப்படுகிறது.

பாகிஸ்தானுடன் சீனா, இந்தியா ஆகிய நாடுகளும் நெருங்கிச் செயலாற்றி ஒரு பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்தினால் ஆப்கானிஸ்தானில் தனது நோக்கம் நிறைவேறிவிடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களையும் அல்ஹைடா போராளிகளையும் அடக்கப்போக தற்போது பாகிஸ்தான் மட்டும் அல்ல இந்தியாவும் தாக்குதல்களை எதிர்நோக்குகின்றது. இந்த மோசமான விளைவுகளில் இருந்து தப்பிக் கொள்வதற்காக மேற்கண்ட மூன்று நாடுகளின் நெருங்கிய ஒத்துழைப்பை நேட்டோ கோருவது, தோல்வியின் இறுதிக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி ஆகும்.

# விமான நிலைய வணக்கங்கள் தொடர்கின்றன

விடுதலைப்புலிகளுடனான போர் முடிந்துவிட்டது என்ற தகவலை அறிந்ததும் சிரியாவில் இருந்து வந்து இறங்கி விமான நிலைய தரையை முத்தமிட்டு வெற்றி வீரனானார் மகிந்த ராஜபக்ஷ. இப்போது ரஷ்யாவில் இருந்து வந்திறங்கி மறுபடியும் தரையை முத்தமிட்டுள்ளார். இப்போது அவருடைய முன்னாள் தளபதி கைது செய்யப்பட்டுள்ள செய்தி அவரை வரவேற்றுள்ளது. விமான நிலையத்தில் வந்திறங்கும் போதெல்லாம் வெற்றி வீரனாக வந்திறங்க வேண்டுமென்ற ஜனாதிபதியின் கனவு மீண்டும் அரங்கேறியுள்ளது.

தனது கனவுகளை நிறைவேற்ற வேண்டுமென திருப்பதி வெங்கடா ஜலபதிக்கு யாகம் செய்தார் மகிந்த. பின்பு தேர்தலை சந்தித்து வெற்றி பெற்றார், இப்போது டாக்டர் பட்டத்தையும் பெற்று நாடு திரும்பியுள்ளார். அதுமட்டுமல்லாமல் தனது பிரதான எதிரியை தேர்தலில் தோற்கடித்ததும் அவர் சிறைப்பட்டதும் திருப்பதி வெங்கடாஜலபதிக்கு செய்த யாகத்தின் மகிமைக்கு இன்னொரு சான்று. பாவம் புத்தபிக்குகள் தலதா மாளிகையில் இருந்து வெங்கடாஜலபதியை பொறாமையுடன் பார்க்க வேண்டிய நிலை.

இது மட்டுமா இந்த நிகழ்வு மேலும் பல பழைய சம்பவங்களை நினைவுக்கு கொண்டு வருகிறது. அன்று காட்டிக் கொடுத்ததாக விடுதலைப் புலிகள் தமது தளபதியான தமிழ் மாத்தயா மகேந்திரராஜாவை கைது செய்தனர். அதே போல் இன்று காட்டிக் கொடுத்ததாக சிங்கள மாத்தயாவான சரத் பொன்சேகாவை கைது செய்துள்ளார் மகிந்த ராஜபக்ஷ. அன்று மாத்தயா பின்னால் இந்தியா இருந்ததாக குற்றம் சாட்டினார்கள் புலிகள், இன்று சரத்தின் பின்னால் மேலை நாடுகள் இருந்தாக குற்றம் சாட்டுகிறார்கள் சிங்கள ஆட்சியாளர்கள். வரலாறு ஒரு மாற்றமில்லாத தொடர்கதையாக சுழல்கிறது.

அன்று புலிகளின் இராணுவத் தளபதி கருணாவை அவர்களிடமிருந்து பிளவுபடுத்தி விடுதலைப் புலிகளை தாமே உடைத்ததாக ரணிலின் தேர்தல் பிரசாரத்தில் கூறப்பட்டது. இப்போது அதே ரணில்தான் சிங்கள அரசின் இராணுவத் தளபதியை பிளவு படுத்தி அரசுக்கு எதிராகவே விட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது. ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் ரணிலும், மற்றவர்களும் கழன்று போக சரத் வெறுங்கையுடன் இராணுவப் பாதுகாப்பு இல்லாமலே வீடு போன சம்பவம் நடைபெற்றது.

நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்தவரும் ஜனாதிபதி தேர்தலின் இரண்டாவது இடம் பெற்றவருமான ஒருவரை அவருடைய இராணுவமே இழுத்து சென்று சிறையில் அடைத்தது சாதாரண நிகழ்வல்ல.

இந்தக் கைது நிகழ்வு இரகசியமான முறையில் நடைபெறவில்லை. மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றுள்ளது. சரத் பொன்சேகா இருந்த வீட்டின் முதலாவது மாடியின் அறைக்கதவுகளை உடைத்துத் தகர்த்துக் கொண்டு நுழைந்த இராணுவம் சரத்தை இழுத்துச் சென்றுள்ளது. தனது கணவன் முறைப்படி கைது செய்யப்படவில்லை, கடத்தப்பட்டுள்ளார் என்று சரத் மனைவி கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

ஒரு தவறை மறைக்க ஓராயிரம் தவறுகளை செய்ய நேரும் என்பது அரசியலின் இயங்கியல் விதியாகும். அதிகாரத்தை கையில் வைத்திருக்காதவருக்கு ஸ்ரீலங்காவில் சிறைக்கம்பிகள் தான் பரிசு. அன்று சரத் பொன்சேகா உன்மத்தமேறி அடித்து, சுட்டு, துவம்சம் செய்து சிறையில் போட்ட தமிழ்க் கைதிகளின் நிலையில் இன்று சிறையில் இருக்கிறார்.

கிரிசாந்திகள் வடித்த கண்ணீர் சிங்கள தேசத்திற்குள் பாயத் தொடங்கியுள்ளது.

இதைவிட மேலும் பல காட்சிகள் அரங்கேறப்போகின்றன..

தவறு செய்யும் எல்லோரும் ஏதோ ஓர் இடத்தில் சறுக்கி விடுகிறார்கள். சரத் பொன்சேகாவின் புதல்விகள் அமெரிக்காவுக்கு சென்ற வாரமே போய்விட்டார்கள். புதுமாத்தளனில் கடைசியாக நடைபெற்ற மர்மங்களை அவர்கள் வெளியிட வாய்ப்புள்ளது.

எல்லாவற்றையும் தாங்க இரண்டு ஆட்சி முறைகள் உள்ளன..

1. பர்மிய ஜுந்தா ஆட்சி.
2. றொபேட் முகாபேயின் சிம்பாப்பே ஆட்சி.

ஸ்ரீலங்கா என்ற நாணயத்திற்கு இரண்டே இரண்டு பக்கங்களே இருப்பது தெரிகிறது. புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள். இனி நாணயத்தின் எந்தப் பக்கம் விழுந்தாலும் அது சிங்கள இனத்திற்கே பரிசாக அமையப்போகிறது.

**நன்றி- அலைகள் இணையம்**


## உங்கள் பகுதியில் எமது கையடக்கத் தொலைபேசிகளைச் சந்தைப் படுத்தவும் விற்பனையை ஊக்குவிக்கவும் ஒரு சந்தர்ப்பம்!



### காட்சியறை விற்பனை நிறைவேற்று அதிகாரிகளும் விற்பனை நிறைவேற்று அதிகாரிகளும்

நாம் நன்மதிப்பு வாய்ந்த அபான்ஸ் குருப் கம்பனிகளை சேர்ந்த உறுப்பினர்கள். உலகின் மிகச் சிறந்த தரமான கையடக்கத் தொலைபேசியின் சந்தைத் தலைவர்கள். பல்வேறு வகைகளைச் சேர்ந்த உயர்தர கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனையை ஊக்குவிக்கவும் சந்தைப்படுத்தவும் செயற்றிறனும் அர்ப்பணிப்பும் வாய்ந்த இளம் நிறைவேற்று அதிகாரிகள் தேவை. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியமும் தரகுகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதோடு, தொழிலில் முன்னேற்றத்துக்கான வரையறுக்கப்படாத வாய்ப்புகளும் உண்டு.

[illegible]
18-25 [illegible]
[illegible]

பின்வரும் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| வட மாகாணம் | கிழக்கு மாகாணம் |
|---|---|
| மன்னார்/ செட்டிகுளம்/ பேசாலை<br>மன்னார், 106, கிராண்ட் பஸாரில் 2010 பெப்ரவரி 16ஆம் 17ஆம் திகதிகளில்<br>நேரடியாக நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.<br>மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ள றமீஸ் -077 3279993 | மட்டக்களப்பு/ களுவாஞ்சிக்குடி/ கல்முனை<br>மட்டக்களப்பு 175B திருகோணமலை வீதியில் 2010 பெப்ரவரி 16ஆம் 17ஆம் திகதிகளில் நேரடியாக நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்<br>மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ள றமீஸ் -077 3279993 |

ஒவ்வொரு மாகாணத்திலும் மேலே தரப்பட்ட இடங்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 மணிவரை நேர்முகத் தேர்வு நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கு தரப்பட்டுள்ள முகவரிக்குத் தமது விண்ணப்பங்களைத் தபாலில் அனுப்பிவைக்கலாம்.

Sony Ericsson MOTOROLA LG PHILIPS

Authorized Business Partner Dialog

THE HUMAN RESOURCES MANAGER
ABANS OFFICE AUTOMATION (PVT) LTD.,
498, Galle Road, Colombo 3.
Tel: 0112565251-60 Fax: 0112565693
E-Mail: hrd@abans.lk

Abans Office Automation (Pvt) Ltd. Genuine Products. Genuine Service.

# வளைந்து போனதொரு போர்வாளின் கதை!

எதிர்பாராத ஒரு வேளையில் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளார். ராணுவக் குற்றங்களை அவர் புரிந்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, ராணுவ நீதிமன்றத்தில்தான் அவர் விசாரிக்கப்படுவார் என்கிறது அரச தரப்பு. இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், இராணுவ நீதிமன்றமொன்றில் விசாரணைகள் இடம்பெறும் போது, அவை தொடர்பான விவரங்கள் எவையும் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை!

இந்த நிலையில், பொன்சேகாவின் இந்தக் கைதானது அப்பட்டமானதோர் அரசியல் பழிவாங்கல் என்று எதிர்த்தரப்பினர் கூறுகின்றார்கள். ஆனால் வழமை போல் அரசு அதை அடியோடு மறுக்கிறது!

அப்படியென்றால், ஏன் இந்த கைது நடவடிக்கை என்று கேட்கிறீர்களா? அதாவது, சரத்பொன்சேகா - இராணுவ இரகசியங்களை வெளியே சொல்லியிருக்கின்றார், ஜனாதிபதியை கொல்லத் திட்டமிட்டிருக்கின்றார், இராணுவத்துக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சித்திருக்கின்றார் என - அவர் மீது குற்றங்களை மளிகைக்கடைத் துண்டின் நீளத்துக்கு அடுக்கிக் கொண்டு போகிறது அரசு!

உண்மையாகச் சொன்னால், அரசாங்கத் தரப்புக் கூறுவது போல் - பொன்சேகா குற்றங்களைப் புரிந்திருந்தாலும் கூட, இந்தக் கைதினை பலரும் ஓர் அரசியல் பழிவாங்கலாகவே பார்க்கின்றார்கள். காரணம் - கைது இடம்பெற்ற காலம், நேரம், இடம், சூழல் அனைத்தும் அப்படிப் பார்க்கும் படியாகத்தான் அமைந்து போயிருக்கின்றன.

சரத்பொன்சேகா இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அப்படியென்றால் அவர் சாதாரண பொதுமகன். பிறகு எப்படி அவரை இராணுவப் பொலிஸார் வந்து கைது செய்ய முடியும்? அவரை இராணுவ நீதிமன்றத்தில் எவ்வாறு நிறுத்த முடியும்? இவை எல்லாம் தவறான நடவடிக்கைகள். இவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்கின்றார்கள் பொன்சேகா ஆதரவாளர்கள்.

ஆனால், இராணுவ சேவையிலிருந்து ஒருவர் ஓய்வு பெற்றாலும், அவர் மீது ஆறு மாத காலத்துக்கு இராணுவ சட்டமானது பிரயோகத்தில் இருக்கும் என்கிறார் இராணுவப் பேச்சாளரான மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க!

அதாவது, இராணுவத்தில் கடமையாற்றும் ஒருவர், தன்னுடைய சேவையிலிருந்து நீங்கிக் கொள்கின்றார் என வைத்துக் கொள்வோம். ஆனாலும், அவ்வாறு நீங்கிக் கொண்ட தினத்தைத் தொடர்ந்து வரும் ஆறு மாத காலத்துக்கு அந்நபர் - இராணுவ வீரரொருவருக்குரிய பொறுப்புணர்வுடன் நடந்துகொள்தல் வேண்டும். அல்லாவிடின், அவர் மீது இராணுவ சட்டம் பிரயோகிக்கப்படும் என்பதே இதன் கருத்தாகும்!

இதன்படி பார்த்தால், ஜெனரல் பொன்சேகா அவரின் சேவையிலிருந்து நீங்கி, இன்னும் 03 மாதங்கள் கூட ஆகவில்லை!

இந்த நிலையில் - அரச தரப்புக் கூறுவது போல், ஜெனரல் பொன்சேகா மீது குற்றச்சாட்டுகள் இருந்தாலும் கூட, அவர் கைது செய்யப்பட்ட விதம், நேரம் என்று அனைத்துமே அரசியல் யாப்புக்கு முரணான வகையில் இடம்பெற்றிருக்கின்றன என்கின்றார் ஐ.தே.கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க. இந்தக் கைது இடம்பெறுவதற்கு முன்னர் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

**மப்றூக்**

ஆனால், நடந்தது ஒரு கைது நடவடிக்கையே அல்ல; அது ஆட்கடத்தல் என்கிறார் ஜெனரலின் மனைவியார் அனோமா பொன்சேகா!

இதேவேளை, இந்தக் கைது விவகாரமானது உள்ளூர் முதல் உலகம் வரை ஆத்திரத்தினையும், பொன்சேகா மீது அனுதாபத்தினையும் ஏற்படுத்திவிட்டிருக்கின்றது.



இலங்கையிலுள்ள பௌத்தர்கள் கடவுளின் பிரதிநிதியாக பூஜித்து மதிக்கும் மகாநாயக்கர்களில் ஒருவரான மல்வத்த மகாநாயக்க தேரரே - இந்தக் கைதினை மிகவும் கோபத்துடன் கண்டித்திருக்கின்றார். இந்த நாட்டுக்காக தியாகங்கள் பலவற்றைப் புரிந்துள்ள ஜெனரல் சரத்பொன்சேகாவை கைது செய்திருக்கக் கூடாது என்றும், அவர் மீது குற்றச்சாட்டுகள் இருந்தால் கூட, அவைகளை மன்னித்து, உடனடியாக அவரை விடுவிக்க வேண்டுமென்றும் மகாநாயக்க தேரர் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, ஜெனரல் பொன்சேகா - இரவு வேளையில், அத்தனை அவசரமாகக் கைது செய்யப்பட்டமைக்கு காரணமாக, பலரும் பல விடயங்களைக் கூறிக் கொள்கின்றார்கள். அதில் முக்கியமானது நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குழறுபடிகள் தொடர்பாக, நீதிமன்றத்தில் பொன்சேகா வழக்கொன்றைத் தாக்கல் செய்யவிருந்ததாகவும், அவ்வாறு அவர் வழக்குத் தாக்கல் செய்வதைத் தடுப்பதற்காகத்தான் அரசாங்கம் இப்படி அவசர அவசரமாக அவரைக் கைது செய்துள்ளதாகவும் பேசப்படுகிறது.

ஆனால், அவ்வாறானதொரு வழக்கை ஜெனரல் பொன்சேகாதான் தாக்கல் செய்ய வேண்டுமென்றெல்லாம் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எந்தவொரு வேட்பாளரும் அவ்வாறானதொரு வழக்கினைத் தாக்கல் செய்ய முடியும். அல்லது பொன்சேகா போட்டியிட்ட அன்னச் சின்னத்துக்குரிய கட்சியான புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் கூட, அவ்வாறானதொரு வழக்கைத் தாக்கல் செய்யலாம். சிலவேளை அவ்வாறானதொரு வழக்கினை பொன்சேகாதான் தாக்கல் செய்ய வேண்டுமென விரும்பினால் - அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவரை நியமித்து அதை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

ஆக, ஜனாதிபதித் தேர்தல் முடிவினை ஆட்சேபித்து வழக்கொன்றினைத் தாக்கல் செய்யும் விடயங்களில் - ஜெனரல் பொன்சேகாவின் கைது விவகாரமானது எவ்விதத்திலும் தடைகளை ஏற்படுத்தாது.

இந்த நிலையில், ராணுவ நீதிமன்றமொன்றில் ஜெனரல் பொன்சேகாவை விசாரிப்பதில் சில சிக்கல்கள்

(26 ஆம் பக்கம் பார்க்க)





நாடெங்கும் விஸ்தரித்து காணப்படும்
உலகத்தரத்திலான வங்கிச் சேவைகள் வவுனியாவில்...

NDB வங்கியின் 45வது கிளை பெப்ரவரி 18ம் திகதி காலை 10 மணிக்கு இல. 2, முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா என்ற இடத்தில் ஆரம்பமாகின்றது.

உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்!

வவுனியாக் கிளை. தொ.பே: 024 2225780/1 முகாமையாளர்: 0773 522 528

அழையுங்கள் 011 2 44 88 88.

www.ndbbank.com

NDB வங்கி

# தமிழ்க் கட்சிகள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

-அருள் மனோகரன்-

ஜனநாயக வழிமுறையில் முக்கியமான அம்சம் மக்களின் நலனும் உரிமையும் பேணப்படுவதாகும். இங்கே மக்கள்தான் முதன்மை பெறுகின்றனர். அதாவது மக்களின் தேவைகள், விருப்பங்கள், உணர்வுகள், அவர்களுடைய நலன் மற்றும் எதிர்காலம் போன்ற விஷயங்கள் முதன்மையடைகின்றன.

தேவைகளையும் அவர்களின் விருப்பங்கள், உணர்வுகளையும் இவற்றினால் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கும் இவற்றின் அரசியலாகும்.

மக்களுக்கு வெளியே நின்றுகொண்டு அவர்கள் இதைத்தான் விரும்புவார்கள்.

எனவே மக்களின் பெயரிலான அமைப்புகள், அரசியல் கட்சிகள் போன்றவை,


வீ.ஆனந்த சங்கரி

மக்கள் குறித்த இந்த விசயங்களில்தான் முழுக் கவனத்தை கொண்டிருக்க வேண்டும். ஆனால், ஜனநாயகத்தின் இந்த முக்கிய விஷயங்கள் இப்போது இந்த அமைப்புகளினாலும், அரசியல் கட்சிகளினாலும் பின்பற்றப் பட்டு வருகின்றனவா என்ற கேள்வியுண்டு. இவை தனியே அரசியல் கட்சிகள், அமைப்புகள் ஆகியவற்றுக்கு மட்டும் உரியனவல்ல; ஊடகங்களுக்கும் கூடப் பொருந்தும்.

மக்களின் வாழ் சூழலுக்கும் அவர்


டக்ளஸ் தேவானந்தா

களுடைய மனங்களுக்கும் வெளியே. தான்-இந்தக் கட்சிகள், அமைப்புகள், ஊடகங்கள் ஆகியவற்றின் தீர்மானங்களும் செயற்பாடுகளும் இருக்கின்றன. அதாவது மக்களுக்கு வெளியேதான் இந்தத் தரப்புகள் நிற்கின்றன. எனவே மக்களுக்கு அப்பால்தான் இவர்கள் சிந்திக்க முடியும். அப்படிச் சிந்திப்பதால் மக்களின் பிரச்சினைகளையும் அவர்களுடைய

அவர்களுக்கு இதுவே தேவை என இந்தக் கட்சிகளும் ஊடகங்களும் சொல்கின்றன. அதாவது தமது நிலைப்பட்ட விருப்பு வெறுப்புகள், தீர்மானங்களை மக்களின் பெயரால் வெளிப்படுத்துகின்றன, மக்களின் பேரால் நிறைவேற்றுகின்றன. உண்மையில் இது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். அவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கையில் ஒருபோதுமே மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. பதிலாக அது, இன்னுமின்னும் அதிகரித்தே செல்லும். இதில் சிங்களக் கட்சிகள், தமிழ்க் கட்சிகள் என்ற பேதமில்லை. இல்ங்கையில் எல்லாக் கட்சிகளிலும் இந்தக் குறைபாடுகள் தாராளமாக உண்டு. ஆனால், சிலவற்றில் விகித வேறுபாடுகள் மட்டும் இருக்கின்றன. தமிழ்க் கட்சிகளில் இந்தக் குறைபாடுகள் மிக உயர்வாக உண்டு. எனவேதான் இந்தக் கட்சிகளினால் ம க் க ளி ன் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. மேலும், இந்தக் கட்சிகளை மக்கள் திட்டுவதற்கும் கேலியாகப் பார்ப்பதற்கும் இதுவே அடிப்படைக் காரணமாகும்.

மக்களின் மனங்களுக்கு வெளியேயும் அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு வெளியேயும் இந்தக் கட்சிகளும் இவற்றின் தலைமைகளும் இருப்பதனால்தான் இவற்றை மக்கள் நிராகரித்து வந்துள்ளனர். அல்லது இந்தக் கட்சிகளில் நம்பிக்கை இழந்து வந்திருக்கின்றனர் என்றபடியால்தான் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஒரு காலகட்டத்திலும் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்னொரு காலகட்டத்திலும் அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி இன்னொரு காலச் சூழலிலும் என்று கட்சிகளின் பெயர் மாறியிருக்கிறது. இது பின்னர் வந்த காலத்தில் பல்வேறு போராளி இயக்கங்களும், இறுதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஓர் அமைப்பும் வந்திருக்கிறது.

ஆனால், கட்சிகளின் பெயர் மாறியிருக்கிறது. வடிவங்கள், அமைப்பு முறைகள், ஆட்கள் மாறியிருக்கின்றதே தவிர, சனங்களின் பிரச்சினைகள் அப்படியே தான் இருக்கின்றன. அத்துடன் மேலும் மேலும் புதுப் பிரச்சினைகள் எல்லாம் உருவாகியிருக்கின்றன. அதே பழைய கோரிக்கைகளுடனும் வாக்குறுதிகளுடனும் தேய்ந்துபோன சொற்களுடனும்தான் இந்தக் கட்சிகள் இயங்குகின்றன.

ஏறக்குறைய இதைப்போன்றதொரு நிலையில்தான் இடதுசாரிக்கட்சிகளும் இருக்கின்றன. அவை தீவிர விவாதங்கள், விமர்சனங்கள், ஆய்வுகள், கருத்துப் பகிர்வுகளில் ஈடுபடுகின்ற அளவுக்கு நடைமுறைப் பிரச்சினைகளுக்கான வழிமுறைகள் குறித்துச்

நிறைந்த அனுபவத்துடனும் கடந்த காலங்களில் சந்தித்த நெருக்கடியான வாழ்க்கையுடனும், அந்த வாழ்க்கையில் பட்டறிந்த சேதிகளுடனும் இருக்கின்றனர்.

புதிய முகத்துடன் யார் வந்தாலும், அவர்கள் கொண்டு வரும் பழைய புளித்த சரக்கை இலகுவில் இனம் கண்டு கொள்வார்கள். தங்களுக்கே நம்பிக்கையில்லாத கோரிக்கையுடன் வரும் இந்தக் கட்சிகளை

சிந்திப்பதில்லை.

எனவேதான், இந்தக்கட்சிகள் ஆரம்பத்தில் வைத்த அல்லது தமக்கு முன்னர் இருந்த கட்சிகள்வைத்த அதே கோரிக்கைகளுடன்தான் இன்னும் இருக்கின்றன. இதற்கு இடையில் பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. தலைமுறைகள் மாறிவிட்டன. உலகம் எங்கேயோ போய்விட்டது.

எண்ணங்களும் வாழ்க்கை முறையும் மாற்றம் கண்டுவிட்டன. ஆனால், மாறாத கொள்கைகளுடன், தீராத பிரச்சினைகளுடன், நிறைவேறாத கோரிக்கைகளுடன் இந்தக் கட்சிகள் இருக்கின்றன.

உலகில் அதிக மாற்றத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாதவை மதங்களே. ஆனால், இந்த மதங்களில் கூட ஏராளம் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அவற்றின் நம்பிக்கைகள், சடங்கு, சம்பிரதாயங்கள், கோட்பாட்டுக்கும் நடைமுறைக்குமிடையிலான இடைவெளிகள் கூட எவ்வளவோ மாறிவிட்டன.

ஆனால், பெரும் மதங்களை விடவும் இறுக்கமானவையாக எங்களுடைய தமிழ்க்கட்சிகள் இருக்கின்றன. அவ்வளவுக்குப் பிற்போக்கானவையாகவும் வளர்ச்சியற்றவையாகவும் இவை வளர்ச்சியடைந்துள்ளன.

இதேவேளை, மத அமைப்புகள் அல்லது மதநிறுவனங்கள் ஆற்றுகின்ற தொண்டு மற்றும் மனித நேயப்பணி, உள ஆற்றுகை அளவுக்கு இந்தக் கட்சிகளின் நடவடிக்கைகள் இல்லை என்பதும் இங்கே சுட்டிக் காட்டப்பட வேண்டியது. அதுமட்டுமல்ல, சரி, பிழைகளுக்கு அப்பால் மத அமைப்புகளின் பிரதிநிதிகள் எப்போதும் மக்களோடு-மக்களின் மனதோடும் பிரச்சினைகளோடும் இருக்கின்றனர். ஆனால், இந்தக் கட்சிகளின் தலைமைகள் மக்களுக்கு வெகுதொலைவிலேயே இருக்கின்றனர்.

தங்களுக்குத் தொலைவிலிருக்கும் தலைமைத்துவங்களை மக்கள் நிராகரிக்கும்போது, புதிய கட்சியுடன் புதிய வடிவத்துடன் மீண்டும் இதே குண இயல்புடைய கட்சிகள் உருவாகின்றன. இதுதான் கவலைக்கும் கண்டனத்துக்குமுரியது.

இதற்கு காரணம், மக்களின் மறதியும் விவேகக் குறைவும் தான். எனவே, இந்தக் கட்சிகள் புதிய பாடங்களைப் படிக்க வேண்டியுள்ள அதே வேளை, மக்களும் பாடங்களைப் படித்துக் கொள்ளுதல் அவசியம்.

இதுகாலவரையிலும் மக்களுக்குக் கதையளந்த அரசியல் தலைமைகள், இனியும் அவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில் மக்கள் இனியும் மக்கள் விட்டுவைக்கப் போவதில்லை.

மிகப்பெரும் படைபலத்துடனும், கட்டமைப்புடனும் இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சியே நம் கண்முன் நிகழ்ந்திருக்கிறது. அந்த அமைப்பின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொன்னாலும், அரசியல் அணுகுமுறையில் ஏற்பட்ட தவறு ஒரு முக்கிய காரணம் என்பதை சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏறக்குறைய இதே நிலைமை-இதே தவறைத்தான்


சிவநேசதுரை சந்திரகாந்தன்

இன்று தமிழ்க்கட்சிகள் பலவும் செய்கின்றன.

பரிசீலனைகள், மறுபார்வைகள், தவறுகளைத் திருத்திக்கொள்ளுதல்கள் என்பவை இல்லையென்றால், திரும்பத்திரும்ப பின்னடைவும் வீழ்ச்சியுமே ஏற்படும். இனியும் தமிழ்


இரா.சம்பந்தன்

மக்கள் தோற்கமுடியாது என்பது கட்டாயமானது.

***



# உயிர் வலிக்கும் கணங்கள்....!!

## பிரசவ வலி ஒரு புறம் கணவனின் இழப்பு மறுபுறம்

நாம் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்தவர்கள். நாமும் மக்களுடன் மக்களாக தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் வரை இடம்பெயர்ந்து சென்றோம். எனது அக்கா கர்ப்பிணியாக இருந்தாள். நாம் இறுதியாக உடையார்கட்டிலிருந்து இடம்பெயரும்போது அக்காவுக்கு அது பிரசவ மாதம். அத்தான் மிகவும் சிரமப்பட்டு அக்காவை சுதந்திரபுரம் வரை கொண்டு வந்து சேர்த்தார். அவளுக்கு இது தலைப்பிரசவம்.

ஒரு நாள் அத்தான் வீட்டில் இல்லாத சமயம் அக்காவுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. நாம் அக்காவை தற்காலிக வைத்திய சாலையாக இயங்கி வரும் சுதந்திரபுரம் வீட்டுத்திட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமான போது அத்தான் வந்தார். அம்மாவை நடந்து வரச் சொல்லி விட்டு நானும் அத்தானும் அக்காவை கரியல் சைக்கிளில் வைத்து உருட்டிச் சென்றோம். மிகச் சன நெருசலுக்கு மத்தியில் கொண்டு சென்றோம். எம்மைக் கண்டவர்கள் எல்லோரும் விலகி வழிவிட்டு உதவி செய்தார்கள். ஒருவாறு வைத்தியசாலையைச் சென்றடைந்தோம். அன்று உடையார்கட்டு வைத்திய சாலையில் ஷெல் விழுந்ததால் அங்கிருந்த காயப்பட்ட நோயாளிகளை எல்லாம் இந்த வைத்தியசாலைக்கு கொண்டு வந்தார்கள். எங்கு பார்த்தாலும் காயப்பட்டவர்களின் கதறல்கள், மரணஓலங்கள். எங்கும் இரத்தம் வழித்தோடிக் கொண்டிருந்தது. அங்கு நின்ற வைத்திய அதிகாரி அக்காவை பிரசவ அறைக்குக் கொண்டு செல்லும்படி கூறினார்.



அக்காவை அங்கு விட்டுவிட்டு அக்காவுக்கான உடுப்புகளை எடுப்பதற்காக வேகமாக உடையார்கட்டுக்கு வந்தோம். பின்னால் வருவதாக் கூறிய அம்மாவையும் காணவில்லை.

உடையார்கட்டுச் சந்திக்கு அருகாமையில் நாம் வந்தபோது எங்கிருந்தோ வந்த துப்பாக்கி ரவை அத்தானின் தலையில் பட்டது. அத்தான் உடனே கீழே விழுந்தார். நான் 'அத்தான்.... அத்தான்' என்று கத்தினேன். வீதியில் நின்று செல்லும் வாகனங்களை உதவி கேட்டேன் வீதியால் வந்த பிக்கப் ரக வாகனம் ஒன்று அத்தானையும் என்னையும் ஏற்றியது. அத்தர்னை வாகனத்தில் ஏற்றிய சிறு கணப்பொழுதின் பின்னர் அவர் இறந்துவிட்டார். அந்த வாகனத்தில் எம்மை சுதந்திரபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு போனார்கள். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கை கால்கள் எல்லாம் நடுங்கியது. தலை சுற்றியது. இதயம் படபடத்தது. அங்கு நின்றவர்கள் அத்தானின் உடலை இறக்கி, இறந்தவர்களை வைத்திருக்கும் ஓர் மரத்தின் கீழ் வைத்தார்கள்.

நான் அக்காவைக் காண ஓடிப் போனேன். அக்காவிடம் அத்தான் இறந்ததை எப்படிச் சொல்வது?... அக்கா பிரசவ வலியால் அழுது கொண்டிருந்தாள். அம்மா ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார். எனது உடம்பில் இரத்தக் கறையைக் கண்டதும் அம்மா குழறிக் கொண்டு ஓடி வந்தார். நான் நடந்தவற்றை அம்மாவிடம் கூறினேன். சோகம் தாங்காது அம்மாவும் அழுதுவிட்டார். இதைப் பார்த்த அக்கா என்ன என்று எங்களை கேட்டாள். அம்மா ஒன்று இல்லை என்று மறுத்தார். ஆனால் எம்மால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மீண்டும் அக்கா ஏன் அழுகிறீங்கள் என்று கேட்டாள். அத்தான் எங்கே என்று என்னிடம் கேட்டாள். அப்போது அக்காவின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அத்தான் எங்கே என்று அக்கா மீண்டும் சத்தமாகக் கேட்க, அம்மாவால் அடக்கமுடியாது சொல்லிவிட்டார். இப்போது அக்காவுடன் நாங்களும் சேர்ந்து அழுதோம். அக்கா எதற்கு அழுவது...? தன் பிரசவ வலிக்காக அழுவதா? தன் அன்புக் கணவன் இறந்ததை நினைத்து அழுவதா? கடவுளே.... இப்படிப்பட்ட சோதனை இனி எந்த இனத்துக்கும் வரக் கூடாது. தயவு செய்து இந்த அவலத்தை உங்கள் பத்திரிகையூடாக எழுதுவதன் மூலம் அத்தான் அகிலனின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.

க. மைதுரன்.

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

## தேங்காய் பிடுங்கச் சென்ற எங்கள் தந்தையை இழந்தோம்

எமது குடும்பம் மிகச் சிறியது. அப்பா, அம்மா, நான் மற்றும் இரு சகோதரங்கள்.

அப்பா பனை மரம் ஏறி கள்ளு விற்றுத்தான் எமது குடும்ப சீவியத்தைப் பார்த்தார். நாங்கள் கிளிநொச்சி ஜெயந்தி நகரைச் சேர்ந்தவர்கள். கடந்த வருடம் இடம்பெற்ற கொடிய யுத்தத்தால் இடம்பெயர்ந்து வலைஞர்மடம் வரை சென்றோம். அங்கு அப்பா கூலி வேலை செய்து வந்தார். கடும் ஷெல்லடி வேளையிலும் கூட அப்பாவின் முயற்சி காரணமாக, வாய்க்கு இதமாக இல்லாவிட்டாலும் வயிறு நிறைய சோறும் - சம்பலும், பருப்பும் சாப்பிட்டு வந்தோம். எமது கொட்டகைக்கு அருகில் உள்ளவர் கீர்த்தி மாமா. தேங்காய் பிடுங்கி விற்றால் ஒரு தேங்காய்க்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று கூறி அப்பாவையும் அழைத்துக் கொண்டு இரணைப்பாலை சென்றார். அன்று சென்றவர் தான் எங்கள் அப்பா இன்னும் வீடு திரும்பவில்லை. கீர்த்தி மாமா அன்று மாலை வீடு திரும்பிவிட்டார். அகோரமான ஷெல்லடி என்றபடியால், தான் திரும்பிவிட்டதாகச் சொன்னார்.

எங்கள் வீட்டின் வறுமை காரணத்தால் தான் எப்படியாவது தேங்காயுடன் வருவதாகக் கூறி அப்பா சென்றார் எனவும் அவர் கூறினார்.

அன்று தொடக்கம் இன்று வரை நாம் எமது அப்பாவை தேடாத இடமே இல்லை. வேண்டாத தெய்வம் இல்லை. அம்மா செல்லாத கோயில் இல்லை. சென்று பார்க்காத வைத்தியசாலை இல்லை. இன்று நாம் வலயம் - 4 முகாமில் இருக்கிறோம். எமது வீட்டு இலக்கம். F. 2-476. அப்பா போன நாளிலிருந்து இன்று வரைக்கும் நாம் மீன், இறைச்சி சாப்பிட்டதே கிடையாது. எமக்கு தரும் நிவாரணத்தை விற்றுத் தான் சீனி, தேயிலை, வாங்குவோம். என் தம்பி சில வேளைகளில் மீன் வேண்டும் என்று அழுவான். அந்த வேளைகளில் எமக்கு அப்பாவின் நினைவு வரும்.



பக்கத்து தறப்பாள் கொட்டகை அன்ரி மிகவும் நல்லவர். அவர்கள் மீன், இறைச்சி சமைத்தால் தம்பிக்கு கொஞ்சம் தந்துவிட்டுத் தான் சாப்பிடுவார்கள். எனது அப்பாவின் குடும்பத்தினரும், அம்மாவின் குடும்பத்தினரும் மிகவும் கஷ்ட்மான நிலையில் இருக்கிறார்கள். அதனால் எமக்கு உதவி இல்லை. எனக்கு படிக்க ஆசையாக இருக்கு. ஆனால் எனது கல்வி கேள்விக்குறியாகவுள்ளது. அம்மா முகாமிலிருந்து வெளியே சென்று எனக்கு எங்கேயாவது வீட்டு வேலை தேடுகின்றார். எனக்கு ஏதாவது வேலை கிடைத்தால் தான் எமது வீட்டில் சீராக உலை ஏறும். மிகவும் கண்ணீருடன் இந்த விடயத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் எமக்கு கொஞ்சமாவது ஆறுதல் கிடைக்கும் என நம்புகிறேன்.

அந்த குறுகிய நாட்களில் அங்கு நிலவிய பொருட்களின் விலை விபரம்.

குத்தரிசி கிலோ ரூ. 1000/=, சீனி கிலோ ரூ. 2000/=, செத்தல் மிளகாய் கிலோ ரூ.18,000/=, தேங்காய் ஒன்று ரூ.1000/=, கீரை ஒரு பிடி ரூ. 200/=, மிளகாய்த் தூள் 50 கிராம் ரூ. 200/=

ச. நித்தியா.

# தமிழ் மக்களின் தமிழ்க் கட்சிகளின் எதிர்காலமும்

-ஜோசப் தயாளன்-

"தமிழர்களுக்கும் அரசியலுக்கும் பொருத்தமேயில்லை. அவர்கள் வாய்கிழியக் கிழிய அரசியல் கதைப்பார்கள். மிகப் பெரிய அறிவிப்புகளையெல்லாம் செய்வார்கள். எதிர்த்தரப்பை 'இந்தா தோற்கடித்து விடுகிறோம் பாருங்கள்' என்ற மாதிரி அதிரடி அறிவிப்புகளை விடுவார்கள். நெஞ்சு நிரம்பிய பெருமிதங்களோடு திரிவார்கள். இறுதியில் ஒன்றுமே ஆகாமல் தோற்றுப்போவார்கள். ஆனால், இந்த அனுபவங்களிலிருந்து அவர்கள் எதையுமே படித்துக் கொள்வதில்லை. இல்லையென்றால் அறுபது ஆண்டுகாலப் போராட்டத்தில், இவ்வளவு இழப்புகளைச் சந்தித்தும் மிகப் பெரிய தியாகங்களையெல்லாம் செய்தும் எதற்காக அவர்கள் தோற்கவேண்டும்?"-என்று கேட்டார் இந்திய ஊடகவியலாளர் ஒருவர். இந்த ஊடகவியலாளர் எப்போதும் இலங்கையின் இனப் பிரச்சினை குறித்து எழுதி வருபவர். ஈழத் தமிழரின் ...


ரவுப்ஹக்கீம்

விடுதலைப் போராட்டம் குறித்த அக்கறை உடையவர். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்துப் பேசும் போது அவர் கேட்டார் "எதிர்த்தரப்பிடம் தோற்பது என்று இவர்கள் என்ன பந்தயம் வைத்துள்ளனரா?" என்று.

இந்த ஊடகவியலாளரின் கருத்துகளும் கேள்வியும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை. அத்துடன் தமிழ் மக்களினதும் தமிழ்க் கட்சிகளினதும் கவனத்துக்கும் உரியவை. அதிலும் விடுதலைப்புலிகளின் வீழ்ச்சி, அதன் பின்னரான அரசியல் நிகழ்வுகளில் ஏற்பட்டு வரும் தமிழர் தரப்பின் பின்னடைவுகள், தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள ஏராளம் பிரச்சினைகள், இந்தப் பிரச்சினைகளைத்தீர்க்க வழி தேடவேண்டிய அரசியல் கட்சிகள் என்றிருக்கும் முக்கிய விசயங்களில் இவை கூடிய கவனத்திற்குரியதே.

தமிழ் மக்கள் எப்போதும் ஒன்றுபட்டே நின்றிருக்கின்றனர். அவர்கள் தமது தலைமைகள் சொல்லும் நியாயப்பாடுகளை ஏற்றிருக்கின்றனர்; மதித்திருக்கின்றனர். இது வரையான அரசியல் வரலாறு இதுதான். ஆனால், அவர்களுக்கு வழிகாட்டிய தலைமைகள் தமிழ்மக்களை என்றும் கரைசேர்த்ததில்லை. "இலங்கைத் தமிழரின் சாதிப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, சீதனப்பிரச்சினை போலவே அவர்களுடைய இனப்பிரச்சினையும் தீராத பிரச்சியாக் தொடர்ந்து கொண்டிருக்கு" என்று ஓர் இடதுசாரி நண்பர் சொன்னது இங்கே நினைவுக்கு வருகின்றது.

இந்தத் தமிழ்த்தலைமைகளின் சிந்தனை எப்போதும் பலவீனமாக, தவறானதாகவே இருக்கின்றது. இல்லையெனில் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினை - தீர்வு - எதுவுமே இல்லாமல் இப்படியான பின்னடைவு நிலைக்குச் சென்றிருக்க முடியுமா? தமிழ் மக்களின் வாழ்க்கை நிலவரம் இத்தனை மோசமானதாக இருக்குமா?

இந்தத்தடவை நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இதுதான் நடந்திருக்கின்றது. தமிழ்க் கூட்டமைப்பின் தீர்மானத்தை கூட்டமைப்பினுள்ளிருந்த அரைவாசி உறுப்பினர்களே எதிர்த்து வந்தனர். பலத்த இழுப்பறிகளின் மத்தியில்தான் இறுதியில், விருப்பமின்றிய நிலையில் ஒரு பொது அறிவிப்பு விடுக்கப்பட்டது. எதிரணிகளின் பொதுவேட்பாள்ரான சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என்பது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு எத்தனைதூரம் பொருத்தமானது? என்ற கேள்வியே எழுப்பப்பட்டு வந்தது? இறுதியில் மஹிந்த ராஜபக்ஷவின் ஏகோபித்த வெற்றி என்பது சிறுபான்மை மக்களின் நிலைமையை மிகவும் மோசமாக தாக்கியுள்ளது.

ஆனால், இந்த நிலைமைபற்றிய எந்த மதிப்பீடும் இல்லாமல், மீண்டும் தவறாகச் சிந்திக்கும் விதமாக சம்மந்தன் கடந்த 27.02.2010 இரவு B.B.C தமிழோசைக்குத் தெரிவித்த கருத்துகள் அமைந்துள்ளன. எந்த நிலையிலும் தாம் எடுத்த தீர்மானம் தவறாக இல்லை எனவும், எதற்கும் தாம் அடிபணியப் போவதில்லை எனவும் அவர் கூறினார். இதை மேலோட்டமாகப் பார்க்கும்போது, இதில் என்ன தவறிருக்க முடியும்? என்றே தோன்றும். வெறுமனே இப்படி உணர்ச்சிகரமாகப் பேசுவதைக் கேட்க மகிழ்ச்சியாகத் தான் இருக்கும். அதுசரிபோலவும் படும். ஆனால், யதார்த்தம் அப்படி அல்ல. இப்போது தமிழ் மக்களின் ஆதரவில்லாமல் சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றியடைந்துள்ளார் மஹிந்த ராஜபக்ஷ. அவரை ஆதரிப்பதில் கூட்டமைப்புக்கு சில உணர்ச்சிகரமான பிரச்சினைகள் இருந்தனதான். ஆனால், நிலைமையின் தாற்பரியத்தை உணர்ந்திருந்தால் அது தீர்மானத்தை மக்களிடம் விட்டுவிட்டு ஒதுங்கியிருந்திருக்க முடியும். அப்படியான கருத்தும் கூட்டமைப்புக்கு நெருங்கிய சிலரால் வலியுறுத்தப்பட்டது என்றபோதும் அதை கூட்டமைப்பு புறக்கணித்து விட்டது.

இப்போது உருவாகியுள்ள அரசியல் நிலவரம் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி - என்பது முதலில் கூட்டமைப்பைச் சிதைக்கப்போகின்றது. ஏற்கனவே அந்தக் கட்சிக்குள்ளிருந்த உள்முரண்பாடுகள் வலுக்கப் போகின்றன. குறிப்பாக சம்மந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய இருவரின் மீதும் இருக்கின்ற அதிருப்திகள் இன்னும் அதிகரிக்கவுள்ளன. இது கட்சிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தப் போகின்றது.


மனோ கணேசன்

பொதுவாக கூட்டமைப்பின் மீது இரண்டு குற்றச்சாட்டுகள் சொல்லப் படுகின்றன. ஒன்று, அது அரசியலில் உறுதியும் தெளிவுமான முடிவுகளை எடுப்பதில்லை என்பது. புலிகளின் காலத்திலும் சரி, இப்போதும் சரி இதுதான் நிலைமை. இரண்டாவது, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில்லை, அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை என்பது. அதாவது, மக்களின் உரிமைப் பிரச்சினைகள் வேறு. அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகள் வேறு. அடிப்படையில் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ள போதும் இவற்றைக் கையாள்வதற்கான உபாயங்கள் வேறு வேறே.


கருணா

ஆனால், கூட்டமைப்போ இவை இரண்டையும் செய்வதேயில்லை. பதிலாக அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைப்பதையே தனது 'பிரதான பணியாக' அது கொண்டுள்ளது. இது மக்களுக்கு ஏமாற்றத்தையே அளிக்கும் செயலாகும்.

இதேவேளை, தமிழ்மக்களிடம் செல்வாக்குச் செலுத்தும் இன்னொரு கட்சியான ஈ.பி.டி.பிக்கும் இந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சினைக் குரிய ஒன்றாகவேயுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிகழ்ச்சி நிரலின்படியே நடந்து கொள்ள வேண்டிய ஒரு நிலைமை பொதுவாக தமிழ்க் கட்சிகள் அத்தனைக்கும் ஏற்பட்டுள்ளது. சுயாதீனமாகச் சிந்திப்பதற்கான அவகாசத்தை மஹிந்த ராஜபக்ஷ தமிழ்க்கட்சிகளுக்குக் கொடுக்கவில்லை. இதனால், இந்தக் கட்சிகள் நிதானமிழந்திருக்கின்றன. இதே நிலைமைதான் கிழக்கில் பிள்ளையான்- சிவனேசதுரை சந்திரகாசன், கருணா - வினாயக மூர்த்திமுரளிதரன் அணியினருக்கும் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வரும் இவர்கள் சில சேவைகளைச் செய்யக் கூடியதாக இருப்பதன் மூலம் மக்களின் தேவைகள் சிலவற்றை நிறைவேற்றக் கூடியதாக இருந்தாலும், தமிழ் மக்கள் எடுத்துள்ள இந்தத் தீர்மானம் - ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் - இந்தக் கட்சிகளின் மீதான ஜனாதிபதியின் ஆர்வத்தைக் குறைத்துள்ளது. அதேவேளை, கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானங்கள் இந்தக் கட்சிகளைப் பலவீனப்படுத்தப் போகின்றன.

உரிய வேளையில் சரியான தீர்மானத்தை எடுக்கத் தவறும்போது மிகப் பாதகமான விளைவுகளே ஏற்படும் என்பது ஒரு பொது விதியாகும். இன்று நடந்திருப்பது அதுதான். தமிழ்க்கட்சிகள் அனைத்தும் எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இப்போது இந்தத் தடைகளில் இருந்தும், இந்தப் பின்னடைவுகளில் இருந்தும் எல்லோரும் முன்வர வேண்டும். அதற்குப் புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

***



## அடுத்த நாயகன்

மே மாதம் 'எந்திரன்' படத்தை ரிலீஸ் செய்த பிறகு ஷங்கரின் புராஜெக்ட் முழு நீள மென் காதல் கதை. தமிழ், தெலுங்கு இரண்டிலும் தயாராகவிருக்கும் படத்தின் ஹீரோ 'பாய்ஸ்' சித்தார்த்.

## மீண்டும் வந்திட்டார்



எட்டு வருடங்கள் கழித்து மறுபடியும் நடிக்கவிருக்கிறார் மெல் கிப்ஸன். 'எட்ஜ் ஆப் டார்க்னெஸ்' என்ற படத்தில் நடிக்க ஓ.கே. சொல்லி இருக்கும் கிப்ஸன், ''இனி ரசிகர்களுக்கு என்னால் புதுசாக எதுவுமே தர முடியாதோ என்ற தயக்கத்தால்தான் 'சைன்ஸ்' படத்தோடு ஓய்வு அறிவித்தேன். இப்போது ரீ-சார்ஜ் ஆகி வந்திருக்கிறேன்!' என்கிறார்.

## ஆண்டனிக்கு...



அடுத்த ஹீரோ புரொமோஷன் இசையமைப்பாளர் விஜய் ஆண்டனிக்கு. தொடர்ந்து அவரை ஹீரோவாக நடிக்கச் சொன்ன வற்புறுத்தல்கள்தான் இந்த முடிவுக்குக் காரணமாம். அறிமுகமாகும் படத்தைச் சொந்த பேனரிலேயே தயாரிக்க உள்ளாராம். படத்தின் பெயர் 'நான்'.

## இளசுகளின் தெரிவு ஜீன்ஸ்





இளசுகளின் தெரிவு... ஜீன்ஸ்தான். ஸ்டைல் மற்றும் உடுக்க வசதி ஆகிய காரணங்களால் ஒவ்வொரு வருடமும் 14 ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்பனை ஆகிறது ஜீன்ஸ் பேன்டுகள். ஜீன்ஸின் வரலாறு ஆச்சரியமானது. 1950 களில் டீன் ஏஜ் கும்பல் அணிய ஆரம்பித்த பிறகுதான் இது அனைவருக்கும் பொதுவான பேஷன் டிரெஸ் ஆனது. அதற்கு முன் அது தொழிலாளிகளுக்கான ஆடை. ஜீன்ஸ் என்ற வார்த்தை 'ப்ளூ தி ஜீன்ஸ்' என்ற பிரெஞ்சு வாசகத்தில் இருந்து வந்தது. ஜெனோவாவின் நீல உடை என்று இதற்கு அர்த்தம். இத்தாலியின் ஜெனோவா பகுதியில் உள்ள துறைமுகத் தொழிலாளிகளுக்கு சுலபமாக கிழியாத, எல்லாக் காலங்களிலும் அணிவதற்கு ஒரு உடை தேவைப்பட்டது. அப்போது உருவானதுதான் ஜீன்ஸ்.

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் அமெரிக்காவில் சுரங்கத் தொழிலாளிகளுக்கு ஜீன்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜீன்ஸின் ஸ்டைலான வடிவமைப்பு தொழிலாளிகளைவிட அவர்களுடைய குழந்தைகளை ஈர்க்கவே, ஜீன்ஸ் பிரபல்யம் ஆனது. 'ரிபல் வித்தவுட் எ காஸ்' திரைப் படத்தில் ஜேம்ஸ் டீன் என்கிற நடிகர் ஜீன்ஸ் அணிந்து நடிக்க, டீன் ரசிகர்களிடம் பற்றிக் கொண்டது ஜீன்ஸ் மோகம்.

இப்போது அமெரிக்கக் கடற்படையின் யூனிபார்மே ஜீன்ஸ்தான். பாரம்பரிய மிலிட்டரி உடையை முக்கிய விழா நாட்களில் மட்டுமே அணிகிறார்கள். நாளாக ஆக மதிப்புக் கூடுவது வைனும் பணமும் மட்டுமல்ல... ஜீன்சும் தான். பழைய, கிழிந்த ஜீன்ஸ்களுக்கு இன்றைக்கு மார்க்கெட்டில் செம ரேட் தருகிறார்கள். நீங்க கிழிஞ்ச ஜீன்ஸ் வெச்சிருக்கீங்களா?

## பிளாஸ்டிக் அழகி



இது ஸ்டைலை உருவாக்கிக் கொண்டவர்களைப் பற்றிய கதை! சமீபத்தில் ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட்டில் 'மிஸ் பிளாஸ்டிக் ஹங்கேரி 2009' என்கிற பெயரில் அழகிப் போட்டி நடைபெற்றது. ஒரு தடவையாவது பிளாஸ்டிக் சர்ஜரி செய்திருக்க வேண்டும் என்பதுதான் போட்டி விதி. முகத்தை மாற்றியவர்கள், மூக்கைக் குறைத்தவர்கள், முன்னழகைக் கூட்டியவர்கள் என்று பல தகுதிகளோடு 18 பெண்கள் போட்டியில் கலந்து கொண்டார்கள். இறுதியில், கால் விரலைச் சீரமைத்திருந்த ஒரு பெண், பிளாஸ்டிக் அழகியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சரி... எதற்கு இந்தப் போட்டி? 'பிளாஸ்டிக் சர்ஜரி செய்து நீங்களும் ஸ்டைல் ஆகலாம்' என்று பெண்களிடம் பிரபலப்படுத்த பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர்கள் ஏற்பாடு செய்திருந்த போட்டிதான் இது!

## கஞ்சனின் நல்ல மனசு

நிமிடக்கதை

டீக்கடை பெஞ்சில் சோகமாகவும் சோர்வாகவும் அமர்ந்திருந்த வேணுவைக் கண்டு சைக்கிளை விட்டு இறங்கி வந்தார் சிவராஜன்.

''என்னடா.. வேணு... மிகவும் களைப்பா இருக்கிறாய்... என்னாச்சு?'' அக்கறையுடன் விசாரித்தார் சிவராஜன்.

''உடம்புக்குச் சரியில்ல. மழையில் நனைஞ்சிட்டன். ஜலதோஷம் பிடிச்சு ஒரு வாரமாச்சு.. இப்ப கடுமையான காய்ச்சலில் வந்து நிக்குது. ஆஸ்பத்திரிக்குப் போக வேணும். ஒரு வாரமா வேலைக்குப் போகவில்லை... கையில காசும் இல்ல''

பாக்கெட்டைத் தடவிப் பரிதாபமாகக் காண்பித்தான் வேணு.

''இப்பவெல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போக வேணும் என்றால் கையில் ஆயிரம் ரூபாயாவது இருக்க வேணும். 500 ரூபாதான் இருக்கு... தரட்டுமா?''

''வேண்டாம்... நீங்கள் தொழிலில் நஷ்டப்பட்டு சிரமத்தில இருக்கிறீங்கள். வேறு யார்கிட்டயாவது வாங்கிக் கொள்கிறேன்.''

''டேய்... வேணு. கஞ்சப் பயல் நந்தன்... அதோ வாறான். அவன் சைக்கிளில் வர்ற ஸ்டைல பாரு... பச்சத் தண்ணியைக் கூட கூழ் போல் உறிஞ்சிக் குடிக்கிறவன்... அவன் கிட்ட ஆயிரம் ரூபா கடனா கேட்டுப் பார்ப்போமா?

''அவனைப் பற்றித் தான் நமக்குத் தெரியுமே... கடன் கேட்டு அவன் இல்லை என்று சொல்லி.. நாம கேவலப்படுவதை விட, கேட்காம இருந்தா... நம்முடைய கௌரவத்தையாவது காப்பாற்றிக் கொள்ளலாம்''

சைக்கிளில் வந்த நந்தன் வேகத்தைக் குறைத்து வேணு அருகில் நின்றான்.

''என்னப்பா வேணு... வேலைக்குப் போகாம... டீக்கடை பெஞ்சை தேச்சுக்கிட்டு இருக்கே... ஏன்?''

''ஜலதோஷம்... காய்ச்சல்... அதுதான்''

''காய்ச்சலா... டாக்டர்கிட்ட காட்டி ஒரு ஊசி போட்டால் சரியாகிவிடும். நீ பிள்ள குட்டிக்காரன்.. வேலைக்குப் போகவில்லை என்றால் குடும்பம் என்னத்துக்கு ஆகும். காசைப் பற்றிக் கவலைப்படாத.. நான் கொடுக்கிறேன்... வா.. வந்து சைக்கிளில் ஏறு''

வேணு தயங்கியபடி சைக்கிளிலில் ஏறிக் கொண்டான். சிவராஜன் இது நிஜம் தானா என்று தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டிருந்த போது சைக்கிள் பறந்து கொண்டிருந்தது.







## அடுத்த மன்னன் வில்லியம்



பிரிட்டிஷ் அரசி எலிசபெத், தனது பேரன் வில்லியமை அரசனாக்க முயற்சிக்கிறாராம்.

பிரிட்டிஷ் அரசி எலிசபெத்துக்கு 83 வயதாகிறது. இவரது மகன் இளவரசர் சார்ள்ஸ், டையானவை விவாகரத்து செய்துவிட்டு ஏற்கனவே திருமணமான கமீலாவை மறுமணம் செய்துகொண்டதால், சார்ள்ஸுக்கு முடிசூட்டப்படவில்லை.

இந்த நிலையில் சார்ள்ஸ் - டயானா தம்பதியின் மூத்த மகன் வில்லியமுக்கு தற்போது 27 வயதாகிறது. பிரிட்டிஷ் இராணுவத்தில் இவர் ஹெலிக்கொப்டர் பைலட்டாக பயிற்சி பெற்றுவருகிறார்.

பிரித்தானிய அரசின் காலனி ஆதிக்கத்தில் இருந்த நாடுகளின் அழைப்பின் பேரில், எலிசபெத் மகாராணியார் அந்த நாடுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுற்றுப்பயணம் மேற்கொள்வார். வயோதிபத்தின் காரணமாக அவரால் நீண்ட தூரங்களுக்குப் பயணம் செய்ய முடியவில்லை.

இதன் காரணத்தால் தனக்குப் பதிலாக பேரன் வில்லியமை பிரிட்டிஷ் அரச குடும்பம் சார்பில் பயணம் செய்யும் படி அறிவுறுத்தியுள்ளார்.

இதன்மூலம் வில்லியமை மகாராணியார் அரசனாக்க விரும்புகிறார் என, லண்டன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.






சிறுகதை

# காதல் தேசம்

தமிழின் தோழி
நிரோஷா தியாகராசா

வெண்பஞ்சுப் பொதியாய்ப் பவனிவந்த வானமகளின் மேகங்களைக் கிழித்துக்கொண்டு பறந்து வந்த உலோகப் பறவை, தம் கைகளை அசைத்து வரவேற்கும் பயணிகளின் ஆரவாரத்துடன் வந்திறங்கியது. பிரான்ஸின் பிரமிப்பை பயணிகளின் விரிந்த விழிகள் காட்டிக்கொண்டிருந்தன. விண்ணை முத்தமிடும் கட்டடங்கள், இயந்திரத் தனத்தின் வானவேடிக்கை, கறுப்பு - வெள்ளை மனித முகங்களெனக் களைகட்டியிருந்தது பிரான்ஸ். தன் உடைமைகளைத் தூக்கியவாறு அறிமுகமற்ற அந்த இடத்தில் பௌர்ணமி இறங்கினாள். இளநீல நிறப்புடைவை, நேர்த்தியாய் வாரி எடுத்த கூந்தல், கனிவை அப்பிய விழிகள். இவைதான் அவளுக்குரிய அடையாளங்கள்.

விழிகளால் யாரையோ தேடிக்கொண்டிருந்தவளிடம் ''எக்ஸ்கியூமி மடம்'' என்றது ஓர் ஆண்குரல். மீண்டும் ''ராகுல் அன்பு இல்லமா...'' என்று கேட்க ''ம்... ம்... ம்...'' என்றவள் வந்தவரை அடையாளப்படுத்திக்கொண்டு, ஒழுங்கு செய்யப்பட்டிருந்த டாக்ஸியில் ஏறிக்கொண்டாள்.

வந்த அலுப்புத் தீர குளித்துவிட்டுத் தன் 'மொபைலை' எடுத்தவள், தன் குட்டீஸுக்கு ஒரு 'ஹாய்' சொல்லிவிட்டு, அடுத்த நாள் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடலில் இணைந்துகொண்டாள்.

அறிமுகமற்ற பல முகங்கள் அங்கு கூடியிருந்தன. இருந்தும் ஏதோவொன்று உறுத்த 'சே... சே... ரா... கு... லா... இருக்காது...' என அலட்சியம் செய்தாலும், இதயம் கனக்க கண்கள் பனித்தன. மழலைகளின் சிரிப்பொலிகள் நினைவுக்கு வர, அந்த எண்ணங்களுக்கு விடை கொடுத்தாள்.

அடுத்த நாள் விடியலின் சுகமான கீதங்களைச் சுவாசித்தவளாய், காலைக் சூரியனுக்கு 'மோர்னிங்' சொன்னவள், விரைவாகக் கிளம்பி நிகழ்வுக்குச் சென்றாள். அந்தப் பிரமாண்டமான அரங்கு முழுவதும் அல்ட்ரா மொடர்னாய் பல்லினப் பிரமுகர்கள் குழுமியிருந்தனர். நிகழ்ச்சித் தொகுப்பாளர் தனக்கான பணிக்குத் தாவினார். ''இந்த ஆண்டுக்கான சிறந்த சமூக சேவையாளருக்கான விருதை இரு தமிழர்கள் பெற்றுக்கொள்கின்றனர்'' என்றார். ''பௌர்ணமி அன்பு இல்லம் - அதன் கிளை இல்லங்களான சிறுவர் மற்றும் முதியோர், ஊனமுற்றோர், எயிட்ஸ், தொழுநோயாளர் இல்லங்களை நடத்தி வரும், மிஸ்டர் ஆர்.ராகுல். அடுத்து ராகுல் அன்பு இல்லத்துடன் தொடர்புடைய கிளை இல்லங்களை நடத்தி வரும் மிஸ்.பௌர்ணமி'' கூறி முடித்த தொகுப்பாளர் அரங்கை ஏறிட்டார். அங்கு பௌர்ணமி அதிர்ச்சியும், ஆச்சரியமும் சங்கமித்த குரலில் ''ரா... ரா... குலா...'' தொடராய் இழுத்தவள் தடுமாறினாள். இருவரும் ஒருசேர அரங்குக்கு விரைந்தனர். உடலளவில் நிறைய மாற்றங்கள், எட்டு வருடங்களுக்கு முன்பு கண்ட அதே விழிகள்.

அந்த விழிகளே அவனுக்கு மிகப்பெரிய அடையாளம். 'இ... து... ரா... கு... லே தான்' உறுதி செய்துகொண்டாள் பௌர்ணமி. வியப்புடன் விழிகள் அகல 'பௌ... மி...' என்றது ராகுலின் இதழ்கள். நான்கு விழிகளும் கரைந்தன. அங்குள்ள யாருக்குத்தான் இவர்களின் பிணைப்பும், தவிப்பும் புரியப்போகிறது. பிரதியுபகாரத்தை எதிர்பாராத சமூகசேவைக்கு விருதுகளையும், கௌரவிப்புகளையும் ஏற்பது முறையல்ல என மறுத்தார்கள். அங்கு குழுமியிருந்த அத்தனை மனிதர்களின் முன்னும் - இருவரும் உயர்ந்து நின்றார்கள். அவர்களின் பெருந்தன்மையைக் கண்டு, பாராட்டு மழைகள் பொழிந்தன. நிகழ்வை முடித்துக்கொண்டவர்கள், அந்தப் பூங்காவில் அமர்ந்து கொண்டார்கள். மௌன தேசத்தின் மையம் அங்கு குடிகொண்டிருந்தது. தாங்கள் யார்? எதற்காக இந்தத் தவிப்பு? இவற்றுக்கெல்லாம் விடை, அந்த இறுதிநாள் சந்திப்பு. எட்டு வருடங்களுக்கு முன் விரிந்தது.

***

அந்தக் கடலின் மடியில் அலைக் குழந்தைகள் கவிதை எழுதிக்கொண்டிருந்தன. சில்லென்ற கடற்காற்று மேனியைச் சிலிர்த்துக்கொண்டிருந்தது. எந்த உணர்வுகளுமின்றி, சிலையாக அமர்ந்திருந்தாள் பௌர்ணமி. அந்த நிலையில் அவளை யாராவது பார்த்திருந்தால், கல்லாகிப் போன அகலிகையோ என வியந்திருப்பார்கள். அத்தனை நிசப்தம் அங்கு. எதிரேயிருந்த அவளைப் பார்த்து இரங்கல் கவிதை எழுதிக்கொண்டிருந்தன ராகுலின் விழிகள். ''பௌர்ணமி ஏன்டா அழுகிறாய்? மருத்துவர்களுக்குப் பெரிய மனுஷி அட்வைஸ் பண்ணுவாய். பட் நீ சின்னப்பிள்ளை போல அழலாமா? பௌர்ணமி உனக்குப் பிடிக்கவில்லையெண்டால், வேண்டாம் நாம நண்பர்களாகவே வாழ்...'' வாக்கியத்தை முடிக்காமலே, ஏக்கமாய் விழித்தான்.

''இ... இல்ல ரா... ராகுல், நான்தான் உங்கள கஷ்டப்படுத்தி...'' தொண்டை அடைத்துக்கொள்ள வாடியவளை, ''நீ அழுதாத்தான் என் மனசு கஷ்டப்படும். ஓகேயா? இத்தனை வருஷமும் நாம நல்ல ப்ரன்ஸ். உன் ஒவ்வொரு அசைவையும் நித்தமும் அனுபவிக்கிறேன்டா. நீ என் லைஃப் ப்ரன்டா வந்தால் நம்ம லைஃப் சந்தோஷமா அமையும்டா.. பௌமி ஏதாவது பேசமாட்டியா?'' என்றான் மிருதுவாய்.

''ராகுல் உங்க அன்புக்குப் பாத்திரமானவளாய் இருக்கிறதை எண்ணிப் பெருமைப்படுறேன். ஆனால், நீங்க நினைக்கிறதுபோல என்னால் சந்தோஷத்தைத் தரமுடியாது ராகுல். பதினைஞ்சு நாளைக்கு ஒருமுறைதான் அமாவாசை வரும். இந்தப் பௌர்ணமி வாழ்க்கையில மாத்திரம், வருஷம் முழுக்க அமாவாசைதான். பேரில் மாத்திரம்தான் பௌர்ணமி. அதையும் விட உங்க அறிவுக்கும், அழகுக்கும் சமூகத்தில இருக்கிற மதிப்புக்கும் கொஞ்சமும் தகுதி இல்லாதவள் நான். சமூகசேவை செய்யணும், பிறருக்காக வாழணும் என்பது என் விருப்பம். இதுதான் ராகுல். காதல் மகத்தானது, அதை நான் மதிக்கிறன் ராகுல். அதையும் விட நம் நட்பையும், சமூக சேவையையும் சுவாசிக்கிறன். ப்ளீஸ் என்ன மறந்திடுங்க. நான் ஒரு காட்டுப்பூ, வாசமில்லாதவள். ப்ளீஸ்மா'' என்றவளின் குரல் தளர்ந்தது.

காவேரியும், கங்கையும் கண்களில் பெருக, பௌர்ணமி விம்மினாள். ''பௌர்ணமி எல்லாம் பேசி முடிஞ்சுதா? ஏதும் மீதமிருந்தால் அதையும் பேசிவிடேன்'' குரலில் கடுமை பரவ தொடர்ந்தான் ராகுல்.

''ம்... ம்... நான் அழகை ஆராதிக்கிறவன், அப்படித்தானே! பௌமி, மனங்கள் அழகில் இணைவதில்லை; அன்பில்தான் இணைகின்றன, புரிஞ்சுக்கோ. உனக்குள் இருக்கிற சமூக சேவைதான் எனக்குள்ளேயும் இருக்கு. காதல் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் தெரியுமா? அது அழகு, அறிவு, அந்தஸ்து எதையுமே எதிர்பார்க்காத அற்புத உணர்வம்மா. பௌமி, நான் உன் வெள்ளை உள்ளத்தை மட்டும்தான் நேசிக்கிறன்.''

அவன் சன்னக்குரலில் உறுதியும், காதலும் இருந்தன. அந்த வார்த்தைகள் பௌர்ணமியின் இதயத்தை இளக்கியது. கடினப்பட்டு கல்லாக்கினாள். ''ராகுல் ப்ளீஸ், என் நினைவுகளை அழிச்சிடுங்க. ஏதோ பிறந்தம் ஏதோ வாழ்ந்தம் என்றில்லாமல், வாழும் சொற்பகாலம் வரைக்கும் எல்லோர் இதயங்களிலும் வாழணும். என் இதயத்தில் என்றுமே உங்களுக்கு மட்டும்தான்...'' இதற்குமேல விவாதிக்கவோ, தர்க்கிக்கவோ என்னால் முடியாது. ராகுல் என்மேல் உங்களுக்கிருக்கிற அன்பு நிஜமாயிருந்தால், என்ன மறந்திடுங்க. என்னைப்பற்றிய தேடலே வேண்டாம். சந்திக்கணும் என்று விதி இருந்தால் மீண்டும் சந்திப்போம். அந்தநேரம் என் மறுப்புக்கான காரணத்தை நிச்சயம் சொல்லுவன். நீங்களும் குடும்பம், பந்தம் என்று வாழும்போதுதான் இலுகுவாகப் புரியும்.'' அவன் கண்கள் தன்னைச் சந்திக்க முன்பே பதிலை எதிர்பாராமல் விரைந்தாள் பௌர்ணமி.

அதன்பின் வாழ்க்கைப் பொக்கிஷத்தில் ஆயிரம் மாற்றங்கள். இறுதிச் சந்திப்பு நிகழ்ந்த அதேநாளே, பௌர்ணமி இந்தியா சென்றுவிட்டாள். அதன்பின் தன் சமூக சேவையில் மூழ்கிப்போனாள். அவனது நினைவுகள் வரும்போது இதயம் வலிக்கும், விழிகள் பனிக்கும். அவன் நலம் வேண்டிப் பிரார்த்திப்பதோடு சரி. தான் அழுதுகொண்டிருந்தால், அந்த மழலைகளைச் சிரிக்கவைக்க முடியாதே. அவர்களில் ராகுலின் முகத்தைக் கண்டாள்.

***

நீண்ட மௌனத்தைக் கலைத்தவன், ராகுல்தான். ''பௌமி என்னம்மா இது? இத்தனை பக்குவப்பட்ட பிறகும் கண்ணீரா? ஏதாவது பேசு பௌமி'' என்றான்.

''ராகுல் இப்போ என்ன பண்றீங்க? வெடிங் முடிஞ்சுதா?'' அழுகையை அடக்கி, ஆர்வத்தை வரவழைத்த குரலில் கேட்டாள். பெரிய புன்னகை ஒன்றை உதிர்த்தவன், ''எட்டு வருஷங்களுக்கு முதல் - ஏன், பௌமி சொல்லாமலே போன? உன் மனசையும், தூய எண்ணங்களையும் அறிய மாட்டேனா? நான் உன் நினைவுகளோட உனக்குப் பிரியமான சமூக சேவையுடனே வாழ்றண்டா. சேர்ந்தால்தான் காதலா? அம்பிகாவதி - அமராவதி, லைலா - மஜ்னு, ரோமியோ - ஜூலியட், சலீம் - அனார்கலி இவர்கள் எல்லாம் காவியக் காதலர்கள். இணைந்து வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லையே! உறுப்புக்களைக் கடந்த உண்மைக் காதல் அவர்களுடையது. நாங்களும் அப்படியே வாழ்ந்திடலாம் பௌர்ணமி'' என்றான் ராகுல்.

''தாங்ஸ் ராகுல் தாங்ஸ், நீங்க மனிதன் இல்லை தெய்வம். அதையும் விட ஒரு படி உயர்ந்து நிக்கிறீங்க. என் மறுப்புக்கான காரணம் சொல்றன் ராகுல். நாம் காதலிச்சுக் கரம் பிடிச்சதுக்குப் பிறகு சமூக சேவை செய்யணும் என்கிற மனசு இருந்தாலும் நமக்கென்று குழந்தை, பொறுப்பு என்று வந்ததுக்குப் பிறகு சுயநலம் ஊறிடும்மா. அது மனித இயல்பு. ஒரு குழந்தைக்குப் பெற்றோரா வாழ்வதை விட உலகத்துக்கே நல்ல அன்னையாகவும் - தந்தையாகவுமே வாழ்ந்திடுவம் ராகுல். மழலைகளுக்காகவும், முதியோர்களுக்காகவும், நலிந்தோர்களுக்காகவும் வாழுகின்ற அந்த வாழ்க்கைதான் உண்மை யான வாழ்க்கை ராகுல். ஆணும், பெண்ணும் நேசிச்சாதான் உண்மையான காதலா? நாம இருவருமே சேர்ந்து உலகத்தையே காதலிப்போமே. உறுப்புக்களைக் கடந்த காதல் செய்வோம். அது உண்மைக் காதலாகுமா என்று முயன்று பார்ப்போம்'' கூறியவள் கனிவாக ராகுலை நோக்கினாள்.

''இதுவே போதும் பௌமி, காதல் கனவுகள் இரகசியமானவை. நம் கருணையின் கனவுகள் இலட்சிய மானவை. எமக்கான அந்தத் தேசம் அதுதான் கருணைதேசம் - இல்லை... இல்லை... காதல் தேசம் நோக்கி எமது இலட்சியப் பயணம் தொடரட்டும். தொடர்வோம்... பௌமி'' என்ற ராகுலை பெருமையாய் நோக்கினாள்.

ஆமாம், இவர்களுக்கான கருணை தேசம் காதல் தேசமாய் விரிந்தது. இந்த விசித்திரமான காதல் பயணமும் நாளை காவியமாகலாம்.

***



# பர்தா ஏற்படுத்தும் கொந்தளிப்பு





பிரான்ஸில் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பொதுப் போக்கு வரத்து உள்ளிட்ட பொதுச் சேவைகளைப் பயன்படுத்தும் போது முஸ்லிம் பெண்கள் நிகாப் எனப்படுகின்ற முகத்தை மூடும் பர்தாவை அணிவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என அந்நாட்டின் நாடாளுமன்ற நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது. கடும் மதவாதத்தைப் பின்பற்றல் என்று தாங்கள் கூறும் விடயம் தொடர்பில் மதம் சார்பான சின்னங்களை அணிகிறவர்களுக்கு அல்லது பயன் படுத்துகிறவர்களுக்கு பிரான்ஸில் தங்குவதற்கான வதிவிட அட்டைகள், குடியுரிமை போன்றவற்றை வழங்கக் கூடாது என்று இக்குழு அறிவித்துள்ளது.

பெண்கள் பர்தா அணிய வேண்டும் என்று கூறுவது பிரெஞ்சுக் குடியரசின் விழுமியங்களில் ஒன்றான மதச்சார் பின்மை, சமத்துவம் போன்ற கொள் கைகளுக்கு முரணாக அமைந்துள்ளது என இந்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதே போல் சுவிட்சர் லாந்திலும் பல்கலைக் கழகம் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றிலும் பர்தா அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரான் ஸில் எதிர்வரும் ஜூலை மாதம் முஸ்லிம் பெண்கள் பாடசாலை களிலும் பல்கலைக் கழகங் களிலும் பர்தா அணியக் கூடாது என்ற சட்டம் கொண்டு வரப்படவுள்ள தால், இச் சட்டம் சம்பந்தமான பலதரப்பட்ட விவாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வேளையில் இச்சட்டத்தை எதிர்த்து ஈராக், ஈரான், கனடா, அமெரிக்கா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் பிரான்ஸிலும் முஸ்லிம் பெண்கள் தங்களது எதிர்ப்பை காட்டி வருகின்றனர். சீக்கிய, யூத, கிறிஸ்தவ இன மதத்தவர்களும் கூட தங்களது எதிர்ப்புக்களை காட்டி வருகின்றனர். இச் சட்டம் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு முள்ளது. இச் சட்டத்தின் வரைவுகளை ஆராய்வதற்காக 140 பிரெஞ்சு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து ஆராயவிருப்பதாகவும் கூறப்படுகிறது.



பிரான்ஸில் 5 மில்லியன் முஸ்லிம்கள் வசித்து வருகின்றனர். இங்கு அல்ஜீரிய நாட்டைச் சேர்ந்தவர் களும் துருக்கிய நாட்டைச் சேர்ந்தவர் களும் கூடுதலாக வாழ்கின்றனர்.

உலகில் அதிக சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வழங்கியுள்ள நாடுகளில் பிரான்ஸும் ஒன்று என தெரிவிக்கப்பட்டாலும், இவ்வகை ஜனநாயகமறுப்பு தனியே முஸ்லிம் இனத்தவரை மட்டும் பாதிக்கக்கூடிய தல்ல எனவும், இச் சட்டம் சீக்கிய இனத்தவரையும், யூத இனத்தவரையும் ஏன் கிறிஸ்தவ மதத்தவரையும் கூட பாதிக்கக்கூடியது எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. முஸ்லிம்கள் பர்தா அணிவதைப் போல் கிறிஸ்தவர்கள் சிலுவைச்சின்னத்தையும், யூத இனத்தவர்கள் தொப்பி தாடியையும்,; அதே போல் சீக்கிய இனத்தவர்கள் தலைப்பாகையையும் அணிவதற்கு இச்சட்டம் இடஞ்சலை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகிறது. அதனால் தான் இந்த மதங்களைச் சேர்ந்த மக்கள் தமது கடும் விசனத்தை ஆர்ப்பாட்டங்கள் மூலம் தெரிவித்து வருகின்றனர்.

பெண்களின் உரிமைபற்றி ஆர்வம்கொண்டிருக்கும் பெரும்பாலான பெண்ணிய அமைப்புக்கள், பெண்ணியலாளர்கள் பெண்கள் பர்தா அணிவதில் உடன்பாடு கொள்ளவில்லை என்றபோதும், ஜனநாயக உரிமை என்ற அடிப்படையில் இதை சட்டத்தை பிரயோகித்து நிறுத்துவதை எதிர்க்கின்றனர். முஸ்லிம் பெண்கள் தாங்களாகவே உணர்ந்து செயற்பட்டு அதனை அகற்றுவார்களேயானால் வரவேற்கத்தக்கது தான் என்கின்றனர்.

* * *

# திசை மாறும் தீர்வுத் திட்டம்.

தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரைக்கும் அதற்கான எந்தவிதமான ஆரம்பக்கட்ட நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இந்தநிலையில் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்குப் பின்னரே தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேலும் பெரும் பான்மையின மக்களும் அங்கீகரிக்கத்தக்க தீர்வுத்திட்டமே முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூற்றானது அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் தமிழர்கள் எதிர்பார்த்த தீர்வுத் திட்டத்துக்கு அண்மித்தாகவாவது காணப்படுமா என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவி வரும் இனப்பிரச்சினை தொடர்பில் அரசமைப்புக்கு உட்பட்ட தீர்வாக மாநில சுயாட்சி முறையே இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதற்கான எந்தவொரு அறிகுறியும் இதுவரை இல்லை. 'மாநில சுயாட்சி' முறையை சில இனவாதக்கட்சிகள் நாட்டைப் பிரிக்கும் செயலாகவே அடையாளப்படுத்த முனையும், இதன் காரணமாக மேற்படி தீர்வுத்திட்டத்தை அடைவதில் சிக்கல்நிலை உருவாகும். இதனை அரசும் சிந்தித்திருக்கும். ஆகவே, முன்வைக்கப்படப் போவதாகக் கூறப்படும் தீர்வுத்திட்டம் எத்தகையது என்ற கேள்வி எழுகின்றது.

'சுயாட்சி' என்பது தமிழர்களால் எப்போதோ முன் வைக்கப்பட்ட ஒரு தீர்வுத்திட்டம். இதற்குப் பெரும்பான்மை மக்களின் ஆதரவு இருந்திருக்குமானால் இந்நேரம் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். எனவே முன் வைக்கப்படப்போகும் தீர்வுத்திட்டமானது சுயாட்சி அல்லாத தீர்வுத்திட்டமாக அமையுமானால் தமிழ் மக்கள் மனநிறைவுடன் அதனை ஏற்றுக் கொள்வார்களா என்பதையும் அரசுத்தரப்பு சிந்திக்க வேண்டும். தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள மக்கள் மத்தியில் தனக்குள்ள செல்வாக்கைப் பாதிக்கும் வகையில் அரசு செயற்படமுன்வராது. மக்கள் செல்வாக்கா, தமிழர்களுக்கான தீர்வா என்ற கேள்வியை அரசிடம் வைத்தால் அரசு முன்னையதையே தெரிவு செய்யும். தமிழர்களுக்கு நல்லது செய்யப்போய் சிங்களவர்களின் விரோதத்தைத் தானாக தேடிக்கொள்ள அரசு விரும்பாது. ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் தன்னை ஒரு கதாநாயகத் தோற்றத்தில் நிலை நிறுத்திக்கொள்ள மகிந்த முயல்வார்.

சட்டங்களால் தமிழர்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட மாட்டாது. முழுமையான அரசமைப்பு மீதான திருத்தமே நன்மை தரும். அதாவது அரசமைப்பில் தமிழ் மக்களுக்குப் பாதகமான அம்சங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு, மக்கள் நலனை முன்னிறுத்திய சட்டங்கள் இயற்றப்படவேண்டும். மாநில சுயாட்சியே தமிழர்களுக்காக அரசியல் ரீதியாக, சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படத்தக்க உச்சபட்ச நியாயமான தீர்வாகும். இது தவிர்த்த தீர்வுத் திட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் தமிழர்களுக்கு ஏற்புடையதாகாது.

மேலும், இனப்பிரச்சினை என்பது தற்போது ஏதோ ஒரு புதிய விடயமாக அரசினால் நோக்கப்படுகின்றது. அதாவது கடந்தகால நிகழ்வுகள் யாவும் பயங்கரவாதப் பிரச்சினை என்பது தான் அரசின் நிலைப்பாடு. இனப் பிரச்சினைக்கான காரணங்கள் இனி மேல்தான் கண்டறியப்படவேண்டும் என்பது போன்று அரசின் செயல்பாடுகள் அமைகின்றன.



இனப்பிரச்சினைக்கான காரணங்களை வரலாற்றை அறிந்த எவரொருவராலும் இலகுவாக அடையாளப் படுத்த முடியும். தமிழர்களுக்கு உரிய தீர்வு முன்வைக்கப் படாததாலேயே விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றது.

இன்றைய சூழ்நிலையில் தகுந்த தீர்வு முன்வைக்கப்படவேண்டியது உடனடி தேவையாகிறது.

நாடாளுமன்ற ஒப்புதல், எதிர்க்கட்சிகளின் ஒப்புதல், சிங்கள மக்களின் ஒப்புதல் என்பவற்றுடன் தான் ஒரு தீர்வுத்திட்டம் அமையுமானால், அது நிச்சயம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய மாட்டாது. தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வு ஒன்றுக்கு சமீபமாகக் கூடச் செல்ல முடியாது.

இச் சந்தர்ப்பத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டணி ஒன்றின் அவசியத்தை எம்மால் உணர முடிகிறதல்லவா? இப்படி ஒரு கூட்டணி இருந்தால் மேற்படி தீர்வை இலகுவாக பெற்றெடுக்க முடியும். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல் தமிழர்களின் நிலை ஆகிவிட்டது. எமக்குள் ஒற்றுமையில்லாமல் போனதாலேயே எம்மைப் பிறரால் ஏமாற்ற முடிந்துள்ளது. ஆகவே, தீர்வுத் திட்டம் திசை மாறிப் போகாது காக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து உடன் செயலாற்றுவோம்.

* * *

காதலர் தின சிறப்புக் கவிதைகள்

# வன்னியில் காதலர் தினம்

உலகக் காதலர் தினமாம்
தமிழர் உலையில் கொதிக்கிறது
காதலர் தினம்!

புதுக்குடியிருப்பு காதல் ஜோடிகள்
புது மாத்தளன் புதைகுழிக்குள் உறங்குகின்ற
காதலர் தினம்!

புன்னகை மன்னனின் பூங்குழல்
புனர் வாழ்வில் வாழ்கின்ற
காதலர் தினம்!

கனக புர கண்மணிகளெல்லாம்
காதலனைக் கரம் பிடிக்க முடியாமல்
கம்பி வேலிக்குள் துடிக்கின்ற
காதலர் தினம்!

மங்கையின் தோளில் சாய்ந்து
செல்லமாய் கூந்தல் நுகர்ந்த மன்மதன்
மண்ணாய்ப் போனதால்
நங்கையவள் துடிக்கின்ற
காதலர் தினம்!



வற்றாப்பளை கண்ணகிகோயிலில்
வளையல் வாங்கி பையனொருவன்
தையவளின் கையில் அணிந்த
தையவளின் கையின்றில்லாத
காதலர் தினம்!

முகுந்தனவன் முத்தம் கொடுத்த
முத்தம்மாவின் கன்னங்கள்
ரத்தக் கறையில் சிவந்திருக்கின்ற
காதலர் தினம்!

காளையவன்
கன்னியில் கொண்ட காதலில்
கலையரசி நகைமாடத்தில்
கால் கொலுசுமணி வாங்கியணிந்த
கண்ணவளின் கால்கள் இல்லாத
காதலர் தினம்!

ம்........ காதலர் தினமாம்
கள்ளப்பாட்டுக் கடற்கரையிலும்
கனகாம்பிகைக் கோயில் தெருவிலும்
மாணிக்கப் பிள்ளையாரின் மருதமரத்தடியிலும்
மாத்தளன் மடுமாதா மணல் தரையிலும்
பூ நகரி புல்வெளியிலும்
இரணைமடு குளத்தரணிலும்
இனிக் காண்போமா காதல் ஜோடியை!

ம்........ பார்ப்போம் பார்ப்போம்
வன்னியர்கள் வடம் பிடிக்க
கன்னியர் அவர்கரம் பிடிக்கும்
காலம் இனி எப்போது வரும்._

அப்பன்
புதுக்குடியிருப்பு

## காதலை சுவாசியுங்கள்

ஒட்சிசனா
காபனீரொட்சைட்டா
கண்களால்
கண்டுபிடிக்கமுடியாத
காற்றைப் போல்
இதயங்களே
பிரிவின்றி
காதலையும் சுவாசியுங்கள்

அ.பிரியன்

# சச்சினின் வாழ்க்கையில் காதல்!

காதலுக்காக வாழ்வது, காதலிலேயே வீழ்வது, காதலாக வாழ்வது என்று இங்கு நிறையக் காதல்கள் உண்டு. கையில் கால்குலேட்டரை வைத்துக் கொண்டு எதிர்காலத்தைத் திட்டம் போடுகிற காதல், வேலைக்கு ஆள் எடுக்கிற மாதிரி அளந்து, யோசித்து நடக்கிற காதல், அரசாங்க வேலை, அப்பா - அம்மா தொந்தரவு இல்லை ஓ.கே. என்று முடிவெடுக்கிற காதல் எனப் பல காதல்கள் உண்டு. ஆனாலும், அதிக வெளிப்பாடுகள் இல்லாவிட்டாலும், உன்னை எவ்வளவு பிடிக்கும் தெரியுமா என்றெல்லாம் சொல்லாவிட்டாலும், ஆழமாக வேரூன்றுகிற வாழ்க்கைக் காதல் மிகவும் அழகானது.

சச்சின் டெண்டுல்கர் ஒவ்வொரு முறை செஞ்சுரி அடிக்கிறபோதும், அந்த வெற்றிக்குப் பின்னால் தன்னை அமைதியாக மறைத்துக்கொண்டு இருக்கிற அஞ்சலியின் காதல் எமக்கு நினைவு வராமல் போகலாம். சச்சினுக்கு நிச்சயம் அஞ்சலிதான் கண் முன்னால் வந்து போவார். எவ்வளவு அழகான வாழ்க்கைக் காதல் அது!



கிரிக்கெட் உலகின் ராஜாவாக வலம் வந்த சச்சின், இந்தியாவின் எந்தப் பணக்காரக் குடும்பத்திலும் பெண் எடுத்திருக்கலாம். விமானநிலையத்தில் ஒரு பெண்ணைப் பார்க்கிறார்... அவர் யார் என்பதெல்லாம் தெரியாது. பிடித்து விடுகிறது...புரிந்து கொள்கிறார்கள். திருமணம் செய்கிறார்கள்... தன்னைவிட மூத்தவர் என்பதெல்லாம் சச்சின் மனதில் அஞ்சலி பதிந்த பிறகு தெரிந்த விஷயம்!

உலகின் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் நேசிக்கிற ஒரு மனிதனை அவனது அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறது அஞ்சலியின் காதல்!

சச்சினின் புகழ் வெளிச்சத்தில் நின்று கொண்டு அனுபவிக்கவோ, அவரது வெற்றி விழாக்களில் பங்கேற்பதில் முனைப்பு காட்டவோ விழையாமல், நித்தமும் கிரிக்கெட்டோடு வாழ்ந்து கொண்டு இருக்கும் சச்சினுக்குத் தன் காதலால் ஆத்மார்த்தமான உணர்வைத் தந்துகொண்டே இருக்கிறது, அஞ்சலியின் வாழ்க்கைக் காதல்.

அந்த ஆழமான புரிதல்தான் சச்சினை ஒரு நல்ல கிரிக்கெட் வீரராக மட்டுமில்லாமல், கண்ணியமான, உலகம் மதிக்கிற மனிதராகவும் உயர்த்தி இருக்கிறது. கிரிக்கெட் அல்லாத நேரங்களில் குழந்தைகளோடும், குடும்பத்தோடும் செலவிடுகிற நல்ல அப்பாவாக்கி இருக்கிறது.

மீடியா வெளிச்சங்களில் விழாமல், விளையாட்டையும் குடும்பத்தையும் தனித் தனியே நிறைவாகக் கையாளுகிற பக்குவத்தை சச்சினின் காதல் அவருக்குத் தந்திருக்கிறது. சச்சினின் வாழ்க்கையில் அஞ்சலிதான் என்றைக்கும் 'வுமன் ஆப் தி சீரியஸ்'!


உங்கள் கவனத்தை ஈர்த்திடும்
சுசூக்கி மாருதி மற்றும் அல்டோ

NO.1 5 YEARS

» இலவச பரிட்சார்த்த ஓட்டம்

» செய்முறை விளக்கங்கள்




» குத்தகை வசதிகள் தொடர்பான தகவல்கள்

போன்ற உங்கள் அனைத்து விசாரணைகளுக்கும்
இன்றே அழையுங்கள்
விராஜ் 0772245719

SUZUKI MARUTI Count on us
RECOMMENDED OIL Castrol
பழையதுக்கு புதியது விரையுங்கள்
அசோசியேட்டட் மோட்டர் வேஸ் (பிரைவட்) லிமிட்டட்
Web : www.amwltd.com E mail : maruti@amwltd.lk

பெண்

தொகுப்பு:சாந்தி

# வாழ்வாதாரத்திற்காக போராடும் விதவைப் பெண்கள்!

கடந்த 30 வருட கால ஆயுத வன்முறைகளின் சாட்சிகளாக ஆயிரக் கணக்கான விதவைகள் மிஞ்சி நிற்கின்றார்கள். இந்தப் போர்கால விதவைகள் தம்மில் சார்ந்து வாழும் தமது பிள்ளைகளையும் மற்றும் உறவினர்களையும் தாங்கிப் பிடித்து குடும்பப் பாரத்தைச் சுமக்க நிர்பந்திக்கப் பட்ட ஒரு சமூகத்தினர் ஆவர்.

பொதுவாக கணவனை இழந்தவர்கள் என்ற வார்த்தைக்குள் இந்த விதவைகள் உள்ளடங்கினாலும் அவர்கள் பொறுப் பேற்றிருக்கும் பாத்திரம் வார்த்தை களினால் கூறி விட முடியாத அளவுக்குத் துயரம் நிறைந்ததாகும்.

ஆண்துணை இல்லாத வீடு என்றால் அங்கிருக்கும் பெண்களை பாலியல் வன்முறைக்கோ, துஷ்பிரயோகங்களுக் கோ ஆளாக்கக் கூடும். அவ்வாறான வாய்ப்புக்களை தேடி காத்தும் நிற்பர் ஆண்கள். ஆனால் அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து, போராட்டமான வாழ்க்கையை சவாலாக எதிர் நோக்கி



திருமதி. நிர்மலி டி.சில்வா

சாதனை படைத்திருக்கின் றனர் பெண்கள்.

யுத்தத்தினாலும் ,சுனாமியினாலும் தமது கணவன்மாரை பறிகொடுத்து வாழ்வாதாரத்தையும் இழந்த இவர் களை தான் விதவைகள் என்ற சொல் குறித்து நிற்கின்றது.

தங்களுக்கு நடந்த கதி எதுவென்றே தெரியாத பிஞ்சுகளைப் பார்த்து தத்தளித்துப் போய் நிற்கும் தாய்மார்கள்

**யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் கணவனை இழந்த பெண்கள் குடும்ப வறுமையை போக்க முயற்சிக்கும் வழிகள்...**

ஏராளம். தங்களது வயிற்றுப் பிழைப் புக்களையும், தங்களது பராமரிப்பிலுள்ள இளம் சிறார்களின் எதிர் காலக் கனவுக ளையும் சுமந்துக் கொண்டு, குடும்பச் சுமையையும், சமூதாயத்தின் இழி நிலைக் கண்ணோட்டங்களையும் சவாலாக ஏற்றுக்கொண்டு வாழும் ஆயிரக்கணக் கான விதவைகளின் நிலைமைகள் பற்றி கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய கடப்பாடு இந்த சமூகத்தில் உள்ள அனைவருக்கும் உண்டு.

அண்மையில் திருக்கோணமலை பிரதேசத்தில் விதவைப் பெண்கள் சிலரை சந்தித்து இவர்கள் தமது வாழ் வாதாரத்தை கொண்டு செல்ல எவ்வா றான நடவடிக்கைகளை எடுக்கின்றனர் என்பது பற்றி பார்த்தோம்

முதலாவதாக நாம் சந்தித்தோம் திருமதி. நிர்மலி டி.சில்வாவை. ''நான் 1999 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இராணுவத்தில் சேர்ந்தேன். எங்களுக்கு காலியில் பயிற்சிகள் வழங்கப்பட்டு நேரடியாக ஓமந்தைப் பகுதியில் சேவைக்கு அனுப்பபட்டேன். அங்கு நான் மூன்று மாதம் வேலை செய்யும் போது அங்கேயே இராணுவத்தில் என்னுடன் சேவையில் இருந்த ஒருவரை நேசித்தேன். இருவரும் விரும்பி பெற்றோருடைய சம்மதத்துடன் திருமணம் முடித்தோம். திருமணத்திற்கு பின்னர் என் கணவர் சொன்னார் 'நாங்கள் இருவரும் வேலைக்கு போக வேண்டாம். நீ வீட்டில் இரு' நான் போகி றேன் என்றார். அதன் படி நானும் வீட்டில் இருந்தேன். மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பத்து நாள் லீவு கிடைக்கும் என் கணவருக்கு.

அப்போது வீட்டுக்கு வருவார். அப்படியே ஒரு வருடம் சென் றது. அப்பொழுது நான் 7 மாதக் கர்ப்பிணியாக இருந்தேன். நான் என்னு டைய அம்மா வீட்டில் திருக்கோண மலையில் தான் இருந்தேன். அவர் மன்னாரில் சேவையில் இருந்தார். அதனால் பிரசவநேரம் கூட திருக்கோணமலையில் இருந்தால் மருத்துவமனை வசதி இருக்கும் என்பதால் நான் இங்கேயே இருந்தேன். நான் அம்மா வீட்டுக்கு வந்த பின் ஒரு தடவை அவர் என்னை வந்து பார்த்துச் சென்றார். அதன் பின்னர் சரியாக ஒரு கிழமையில் எனக்கொரு தகவல் வந்தது. 'உங்களுடைய கணவருக்கு வெளிக்காயம் (சூடுபட்டு) வவுனியா ஆஸ்பத்திரியில் இருக்கிறார்' வாருங்கள்

—சாந்தி—

அப்பொழுது அம்மா சொன்னா வேணாம் நீ நிறை மாதக் கர்ப்பிணி. உன்னால அவ்வளவு தூரம் வர முடியாது. நானும், உன் அண்ணனும் போய்ப் பார்க்கிறோம் என்று. ஆனால், வந்து சொன்னவர் முதலிலேயே அம்மா விடம் சொல்லி விட்டார் உங்கட மருமகன் பிரச்சினையில் இறந்து விட்டார் என்று. உங்கட மகளிடம் சொல்லாதீங்க. அவருக்கு சுகமில்லை என்று சொல்லி கூட்டி வாங்க என்று சொல்லி இருக்கிறார். ஆனால், அம்மா போகும் போது என்னி டம் உண்மையை சொல்லிட்டாங்க. என் மாமியுடைய வீடு அனுராதபுரம். அங்கேயே அவருடைய இறுதி கிரியைகள் நடந்தது. அதற்கு என்னை யும் கூட்டிட்டு போனாங்க. உடலை சீல் பண்ணிதான் கொண்டு வந்தார்கள். முகத்தை கடைசி வரைக்கும் எனக்கு பார்க்க கிடைக்கவில்லை.

எனக்கு அப்போது வயது 21. எனக்கு பெண் குழந்தை பிறந்தது. மகளுக்கு அகின்சாவி என்று பெயர் வைத்தேன். மூன்றாம் ஆண்டு படிக்கிறாள். கடற் படை அதிகாரிகளின் பாடசாலையில் தான் படிக்கிறாள். என்னுடைய கணவன் இறந்த பின்னர் அரசாங்கத்தில் இருந்து கிடைக்க வேண்டிய சம்பளம் எல்லாம் மாதா மாதம் வந்து கொண்டு தான் இருக்கிறது. அந்த உதவியுடன் தான் பிள்ளையை படிக்க வைக்கிறேன். நான் என்னுடைய பிள்ளைக்கு எப்பவும் சொல்வது நீ வளர்ந்து ஒரு டாக்டராக வரவேண்டும் என்று. எனக்கு என்ன ஆசை என்றால் தகப்பனை பார்க்காமல் பிறந்த பிள்ளை இந்த அரசாங்க உதவியுடன் படித்து வந்து வருங்காலத்தில் இந்த நாட்டுக்கு ஒரு பிரயோஜனம் உள்ள ஒரு பிரஜையாக வர வேண்டும் என்று சொல்லி வளர்க்கிறேன். எத்தனையோ பேர் என்னை மறுமணம் செய்யச் சொன்னார்கள். ஆனால், எனக்கு என்னுடைய பிள்ளையுடைய எதிர் காலம் முக்கியம். இந்த சமூதாயம் எங்களை போன்ற விதவைப் பெண்களை வாழ விடாது. இந்த சமூகத்திற்கு நல்லதொரு பிரஜையாக என் மகளை வளர்த்து காட்ட வேண்டும் என்று இருக்கிறேன்-என்றார். 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் என்னுடைய வீடு முற்றாக சேதம் ஆனது. ஆனால், எங்களுக்கு அதன் போது அரசினால் எந்த உதவியும் கிடைக்கவில்லை. பாதிக்கப் பட்ட என்னை போன்ற பலருக்கு உதவி கிடைக்கவில்லை. பின்னர் என் கையில் இருந்த காசை போட்டு சின்னதாக ஒரு வீடு வாங்கினேன். இப்போது நான் சின்னதாக ஒரு அழகியல் பொருட்கள் விற்கும் கடையை நடத்தி வருகிறேன். அதில் கிடைக்கும் வருமானம் மூலமும் எனது வாழ்க்கையை நடத்துகிறேன். அந்த கடையில் என்னைப் போலவே இரண்டு இளம் விதவைப் பெண்களுக்கு தொழில் வாய்ப்பும் கொடுத்திருக்கிறேன், என்றும் அவர் கூறினார்.

***

ஆயுத வன்முறையினால் கணவனை இழந்தவர்கள் மட்டுமல்ல, கடத்தல்களி லும் தமது கணவன்மாரை பறிகொடுத்த வர்கள் பலர். அதில் ஒருவர் தான் திருமதி. விஜயா செல்வராஜன்.(37).

எனக்கு ஒரு மகளும்,இரண்டு மகன்மாரும் உள்ளனர். வன்னியில் இருந்து நான் 1990 ஆம் ஆண்டு வந்தனான். முதலில் சிலாபத்தில் அகதியாக இருந்தம். அங்க நிறைய பேரை வைக்க ஏழாது என்று எங்களை திருக்கோணமலைக்கு அனுப்பிட்டாங்க. என்னுடைய கணவர் கூலி வேலைதான் செய்துக் கொண்டி ருந்தார். 1997 ஆம் ஆண்டு 6ஆம் மாதம் அவர் அவருடைய அம்மா, அப்பாவை பார்த்துவிட்டு வருவதாக கூறி வன்னிக் குச் சென்றார். இரண்டு, மூன்று கிழமை களில் திரும்ப வருவதாகக் கூறிச் சென்றார். ஆனால், இதுவரை வரவில்லை. நான் நான்கு வாரம் பார்த்து விட்டு வன்னிக்கு போனேன். அங்கு அவர் இல்லை. அந்த வீட்டிலும் யாரும் இல்லை. பக்கத்தில் உள்ளவர் களிடம் விசாரித்தபோது என்னுடைய மாமி, மாமா எல்லோரும் இந்தியாவுக்கு போய்விட்டதாக கூறினார்கள். அப்போது வன்னியில் சரியான பிரச்சினை நடந்து கொண்டிருந்தது. இன்று வரை அவரைப்பற்றிய தகவல் இல்லை. நான் வீட்டு வேலை செய்து தான் எனது மூன்று பிள்ளைகளையும் வளர்க்கிறேன். எங்களுக்கு நிரந்தர வீடு இல்லை. உணவு கூப்பனும் இல்லை. மிகுந்த கஷ்டத்திற்கு மத்தியிலேயே என் குடும்பத்துடைய தேவைகளை கவனிக்கிறேன்-என்றார்.

***

இவரைப் போலவே ஆயுத முனையில் கணவனை பறிகொடுத் தவர் தான் நாம் சந்தித்த மற்றப் பெண், திருமதி உம்மு பௌஸ்லா.

எனக்கு 18 வயதில் திருமணம் நடந்தது. இரண்டு பிள்ளைகள். கணவர் ஒரு மீனவர். 1991ஆம் ஆண்டு என் கணவரை இனம்தெரியாதவர்கள் வீட்டிற்கே வந்து அழைத்துச்சென்றார் கள். இரண்டு நாள் வரை எந்த தகவலும் இல்லை. மூன்றாம் நாள் எங்கள் தெருவில் இருப்பவர் ஒருவர் வந்து சொன்னார், இரத்தக்கறையோடு சாரம் ஒன்று கரையோரத்தில் உள்ள படகில் இருப்பதாக. வந்து பார்க்கும் படியும் கூறினார். நாங்கள் சென்று பார்த்தோம். அது என்னுடைய கணவன் அணிந்தி ருந்த சாரம். அதில் கிழிசல்களும், இரத்தக்கறையும் இருந்தன. அதன் பின்னர் என்னையும் என் பிள்ளைகளை யும் அப்பா



திருமதி. விஜயா செல்வராஜன்.

தான் பார்த்து வந்தார். அவரும் இரண்டு வருடங்களில் இறந்து விட்டார். பின்னர் மிக கஷ்டப்பட்டு நான் வீட்டில் கோழிப்பண்ணை வைத்துத் தான் குடும்ப செலவுகளை கவனித்தேன். அதுவும் 2004 ஆம் ஆண்டு வரை தான். சுனாமியின் பின் அதுவும் இல்லை. இப்பொழுது மிகவும் கஷ்டப்படுகிறேன்-என்றார்.

இவர்களைப் போலவே பல விதவைப் பெண்கள் தங்களுடைய வாழ்வாதரத்திற்காக பல போராட்டங் களை சந்திக்கிறார்கள். இவர்களுக்கு பெண்கள் அமைப்புக்களும்,தொண்டு நிறுவனங்களும் ஏதேனும் உதவிகளை வழங்கி ஊக்கப்படுத்தினால் இவர் களின் வாழ்க்கையும் வளம் பெறும்.

**வறுமையின் கொடுமையில் சிக்குண்டு தமது வாழ்வாதாரத் திற்காக போராடி வாழ்ந்து வரும் பெண்களின் வாழ்க்கை அனுபவ பகிர்வுகள் அடுத்த வாரம் தொடரும்...**

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும் **சகோதரிகளின் பார்வைக்கு** நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.

இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவை யாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.



படம்-குறுநிலமன்னன்



படம்-தைரியம்



படம்-சே

## குப்பத்து இளைஞனாக ஸ்ரீகா

'துரோகி'யில் குப்பத்து இளைஞனாக நடிக்கிறாராம் ஸ்ரீகாந்த். மணிர
சுதா இயக்கும் படம் துரோகி. வட சென்னையைச் சுற்றி நடக்கிற கதை
குப்பத்து இளைஞனாக நடிக்கிறார் ஸ்ரீகாந்த். இவரது நண்பனாக வி
அதேவேளை, ஸ்ரீகாந்தின் ஜோடியாக பூர்ணா நடிக்கிறார். விஷ்ணுவி
பஜ்வா நடிக்கிறார். பூஜாவுக்கு இதில் முக்கிய வேடம் உண்டாம். திய
சரண் ஆகியோரும் நடிக்கின்றனர். படப்பிடிப்பு அனைத்தும் முடிந்
இசை வெளியீடு நடைபெறவுள்ளது.

## ஐஸ்வர்யாக்கு ரூ.25 கோடி!

முன்னாள் உலக அழகியும், பொலிவூட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய் புதிய படமொன்றில் நடிப்பதற்காக 25 கோடி ரூபா சம்பளம் வாங்கப் போகிறாராம்.

பிரபல பொலிவூட் தயாரிப்பாளர் பொபி புஷ்கர்ணா 'பேஜ் 3' என்ற படத்தின் மூலம் புகழ்பெற்றவர். தேசிய விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றிருக்கும் பொபி, புதிதாக தயாரிக்கவுள்ள படத்தில் ஐஸ்வர்யா ராயை நாயகியாக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறார். இதற்காக ஐஸ்வர்யாவுக்கு 25 கோடி ரூபா வரை சம்பளம் வழங்க முன்வந்திருக்கிறாராம்.

இதுபற்றி அவர் கூறியவை வருமாறு:-

2008ஆம் ஆண்டு 'ஜோதா அக்பர்' படம் வெளியானது. அந்தப் படத்துக்கு பிறகு ஐஸ்வர்யா ராயின் படம் எதுவும் வெளியாகவில்லை. எனது அடுத்த படத்தில் நடிக்க ஐஸ்வர்யா ராயின் சம்மதத்தைக் கேட்டிருக்கிறேன். இதற்காக அவருக்கு 25 கோடி ரூபா கோடி வரை சம்பளம் பேசியிருக்கிறேன். அவர் எனக்கு இன்னமும் கால்ஷீட் தரவில்லை. அவரது கால்ஷீட் கிடைக்காவிட்டால் அந்தப் படத்தையே எடுக்க மாட்டேன் என்றார்.

## பாலாவைத் துரத்தும் பிரியாமணி!

தேசிய விருது வாங்கியும் பிரியாமணிக்கு தமிழில் சரியான வாய்ப்புகள் இல்லை. 'பில்லா' நயன்தாரா மாதிரி அவிழ்த்தும் பார்த்துவிட்டார். ம் ஹூம்... எந்த இளம் ஹீரோவும் அவர் பக்கம் திரும்புவதாக இல்லை. இந்நிலையில் இயக்குனர் பாலாவிடம் நேரடியாகவே வாய்ப்பு கேட்கவ இருக்கிறாராம். பாலாவின் 'அவன் இவன்' படத்தில் இரண்டு ஹீரோயின்கள். ஜனனி அய்யர் ஒரு ஹீரோயின். இன்னொருவர் வரலட்சுமி என்றனர். படத்தில் ஜனனிக்குதான் முக்கியத்துவம் என்பதால் வரலட்சுமி நடிக்கவில்லை. அந்தக் கேரக்டருக்குதான் கொக்கி போட்டிருக்கிறார் பிரியாமணி.

## சுவாதி! சுவாதி!! சுவாதி!!!

முன்னர் விஜய்-அஜித் ஆகியோருடன் நடித்த சுவாதி ஏற்கனவே சினமாவில் இருக்கிறார். சமீபத்தில் இவர்'யோகி' படத்திலும் நடித்திருந்தார். இவர் தவிர சுப்பிரமணியபுரத்தில் அறிமுகமான சுவாதியும் பிஸியாக நடித்துவருகிறார். செல்வராகவன் இயக்கும் படத்தில் விக்ரமுக்கு இந்த சுவாதிதான் ஜோடி. இந்த இருவரின் பெயரிலுள்ள குழப்பமே தலைவலியாக இருக்கும்போது மூன்றாவதாக ஒரு சுவாதியும் வந்திருக்கிறார். இவர் 'சத்திரம் பேருந்து நிலையம்' என்ற படத்தில் நடிகிகிறார். இப்படத்தை ரவிப்பிரியன் என்பவர் இயக்குகிறார். பசங்களா... சுவாதிக்கு மேக்கப் போடும் போது அப்படியே புதுப் பெயர் ஒன்றையும் போடுங்கப்பா... குழப்பமில்லாமல் இருக்கும்.



## இச்சில் ர

'யோகி' படத்தில் நாயகனாக நடித்த டைரக்டர் அமீர், அந்தப் படத்தைத் தொடர்ந்து 'கண்ணபிரான்' படத்தை இயக்கும் வேலைகளில் இறங்கிவிட்டார். படத்தின் நாயகனாக ஜெயம் ரவி நடிக்கிறார்.

'பேராண்மை'யின் வெற்றியால் திக்கு முக்காடிப் போயிருக்கும் ஜெயம் ரவிக்கு, அடுத்தடுத்து நிறையப் பட வாய்ப்புகள் வந்து வாசல் கதவைத் தட்டுகின்றன. அப்படிக் கிடைத்த வாய்ப்புகளில் முக்கியமானது பிரபுதேவா இயக்கத்தில் உருவாகவிருக்கும் 'இச்' பட வாய்ப்பு. ரவியின் கால்ஷீட் அமீருக்கா? பிரபுதேவாவுக்கா? என்ற கேள்வி சில பல வாரங்களாகவே எழுந்துவருகிறது. இந்நிலையில் தனது நிலைப்பாட்டை 'இச்' படத்திற்கு கால்ஷீட் கொடுத்து உறுதிபடுத்தியிருக்கிறார் ஜெயம் ரவி. அமீரின் 'கண்ணபிரான்' படத்தின் ஸ்கிரிப்ட் பணிகள்கூட இன்னமும் நிலுவையில் இருப்பதால் முதலில் 'இச்' படத்தில் நடிக்க திட்டமிட்டிருக்கிறாரார் ரவி. படத்தில் ஜெயம் ரவியின் ஜோடியாக நடிக்கப்போகிறவர் யார் தெரியுமா?

முத்தத்துக்கு பெயர் போன கமல்ஹாசனின் வாரிசு ஸ்ருதிஹாசன்தானாம். விரைவில் அதிகாரபூர்வ தகவல் வெளியாகுமாம்.



## கமலுடன் திரிஷா!

திரிஷாவிடம் தமிழ், தெலுங்கு, ஹிந்திப் படங்கள் கைவசம் உள்ளன. அவர் நடித்த 'நமோ வெங்கடேசா' என்ற தெலுங்குப் படம் சமீபத்தில் ரிலீசாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் சம்பளம் இரண்டரைக் கோடியாக உயர்ந்துள்ளது. புது தெலுங்கு படத்துக்கு ஒப்பந்தம் செய்யப்போன தயாரிப்பாளரிடம் இந்த தொகையை சொன்னாராம். 'டான்சீனு' என்ற தெலுங்குப் படத்தில் தற்போது நடித்துக்கொண்டிருக்கிறார். சிம்பு ஜோடியாக நடித்த 'விண்ணைத்தாண்டி வருவாயா'விலும் நடித்துள்ளார். 'காட்ட மீட்டா' என்ற படம் மூலம் ஹிந்தித் திரையுலகிலும் அறிமுகமாகியுள்ளார். இதன் படப்பிடிப்பு விறு விறுப்பாக நடக்கிறது. இந்த நிலையில் கமல் ஜோடியாக 'யாவரும் கேளிர்' என்ற படத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். முதல் தடவையாக கமலுடன் ஜோடி சேருகிறார்.



ம்-கோரிப்பாளையம்



படம்-அப்பாவி

# ...காந்த்!


...மணிரத்னத்தின் அசோசியேட்
...ற கதை இது. இதில்
...க விஷ்ணு நடிக்கிறார்.
...ணுவின் ஜோடியாக பூனம்
... திபாகராஜன், எஸ்.பி.
...முடிந்துவிட்டது. விரைவில்



படம்-வாடா செல்லம்

## கோவிலிருந்து விலகினார் சிம்பு! இணைந்தார் ஜீவா!!

'கோ' படத்திலிருந்து விலகி விட்டாராம் சிம்பு. இதற்கான பின்னணியில் என்ன நடந்தது? ஹீரோயினாக இருந்த தமன்னாவை மாற்றியதில் இருந்துதான் பிரச்சினையே என்கிறார்கள் 'கோ' யூனிட்டில். கார்த்திகாவை என்ன காரணத்தினாலோ ஒப்புக் கொள்ளவே இல்லையாம் சிம்பு. இதற்கிடையில் 'வாலிபன்' படத்தை உடனேயே தொடங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறாராம் அப்படத்தின் தயாரிப்பாளர் நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி. இந்தக் காரணத்தினாலும் 'கோ' படத்திலிருந்து அவர் விலகியிருக்கலாம் என்று கருத்து தெரிவிக்கிறார்கள். இப்ப சிம்புவின் இடத்திற்கு வந்திருப்பவர் ஜீவாவாம்!



# ...ரவி-ஸ்ருதி!



நடிகர்கள்: அஜித் (இரட்டை வேடம்), பாவனா, சமீரா ரெட்டி, சம்பத், பிரபு, ராஜீவ்கிருஷ்ணா, சுரேஷ்
ஒளிப்பதிவு: பிரசாந்த் டி மாஷாலே
இசை: பரத்வாஜ்
கதை, திரைக்கதை வசனம்: சரண், யூகி சேது, அஜித்
இணை இயக்கம்: அஜித்
இயக்கம்: சரண்
தயாரிப்பு: சிவாஜி பிலிம்ஸ் பிரபு, ராம்குமார்
பிஆர்ஓ: டைமண்ட் பாபு



# அசல் திரைவிமர்சனம்

பங்காளிச் சண்டை என்ற தலைமுறை தலைமுறையாக நாம் பார்த்துப் பழக்கப்பட்ட கதைக்கு ஆயுத வியாபாரம், பாதாள உலகக் கோஷ்டி, பிரான்ஸ் சூழல் என முடிந்த வரை பளபளப்பேற்றி அசலாகக் காட்ட முயற்சித்திருக்கிறார்கள்.

ஆயுத வியாபாரி, நிழல் உலக தாதா அஜித்துக்கு மூன்று மகன்கள்... சம்பத், ராஜீவ் கிருஷ்ணா இருவரும் சட்டபூர்வ மனைவிக்குப் பிறந்தவர்கள். இரண்டாம் தாரத்துக்குப் பிறந்தவர் அடுத்த அஜித். தனக்குப் பிறகு தனது வர்த்தக சாம்ராஜ்யத்துக்கு வாரிசாக 'அசல்' மனைவிக்குப் பிறந்தவர்களை விட்டுவிட்டு, இரண்டாம் தார மகன் அஜித்தை அறிவிக்கிறார்.

இதில் கோபமடைந்த 'அசல்' வாரிசுகள், தந்தை அஜித்தைக் கொன்று விடுகிறார்கள். இது தெரியாத மகன் அஜித் அவர்களுக்கே உதவப் போகிறார். அங்கே அவரையும் கொல்ல முயற்சிக்கிறார்கள். அதிலிருந்து தப்பி வரும் அஜித் எப்படி பங்காளிச் சண்டையிலிருந்து மீள்கிறார், தன்னைக் காதல் செய்யும் சமீரா-பாவனா ஆகிய இருவரில் யாரைக் கைப்பிடிக்கிறார் என்பது மீதிக் கதை.

இந்தப் படத்தின் முக்கிய அம்சம் சந்தேகமில்லாமல் அஜித்தான். அசத்தலான தோற்றம், அதைவிட அசத்தலாக சண்டைக் காட்சிகளில் ஜொலிக்கிறார் மனிதர். குறிப்பாக இடைவேளைக்கு முந்தைய அந்த இரு சண்டைக் காட்சிகளிலும் அப்படி ஒரு .........!.

வயதான அஜித் வரும் காட்சிகள் மிகக் குறைவு. அதில் பெரிதாக கவரும்படியாக ஒன்றும் இல்லை. இரண்டு அஜித்துக்கும் தோற்றத்தில், உடையில் கூட பெரிய மாற்றமில்லை. இருவரையும் வேறுபடுத்திப் பார்க்க ஒரு வித்தியாசம் இருக்கிறது. மூத்தவருக்கு நரைத்த முடி. இளையவருக்கு அது இல்லை!!.

பாவனா, சமீரா இருவருக்குமே அஜித்தைக் காதலிக்கும் வேலை. ஆனால், சமீராவைக் காட்டிய விதம் மகா சொதப்பல். மிகவும் வயதான மாதிரியான ஒரு தோற்றம். இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

வில்லன்களில் அசத்தலாய் வருகிறார் கெலி டோர்ஜி. ஷெட்டி என்ற பாத்திரத்தில் வரும் இவர் அலட்டிக் கொள்ளாமல் மிரட்டுகிறார்.சம்பத் மற்றும் ராஜீவ் கிருஷ்ணாவும் கொடுத்த பங்கை நிறைவாகச் செய்திருக்கிறார்கள். படம் முழுக்க கிரிமினல் காரியங்களுக்கு உடந்தையாக வந்து, கடைசிக் காட்சிக்கு முந்திய காட்சியில் திருந்தும் வில்லனாக வரும் பிரெஞ்ச் பொலிஸ் சுரேஷுக்கு இது மறுபிரவேச வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளார். பிரதீப் ராவத்தும் படத்தில் உண்டு.

இந்த நட்சத்திர கும்பலில் காணாமல் போயிருப்பவர் பிரபு. வயதான அஜித்தின் நண்பராக வருகிறார். அல்டிமேட் ஸ்டார் பட்டத்தை விட்டொழித்த அஜித்தை, படம் முழுக்க சதா தலை தலை என்று புகழ்ந்து கொண்டே இருக்கிறது ஒரு கூட்டம். அதேபோல பில்லாவில் ஆரம்பித்த 'கோட்-சூட்' இதிலும் தொடர்கிறது. இந்த இரண்டையும் தற்காலிகமாகவாவது தலைமுழுக முயற்சிக்கலாம் 'தல'!.ராஜீவை காப்பாற்றப் போகும் அஜித் சுடப்பட்டு ஆற்றில் விழுகிறார். அதன் பிறகு மீண்டும் பரிஸில் அதகளம் பண்ணுகிறார். லொஜிக்கெல்லாம் தேட முயற்சிக்கக் கூடாது!.

இடைவேளையின்போதே கதையின் போக்கு, அடுத்தடுத்த நகர்வுகள் தெரிந்து விடுவதால் ஒரு தொய்வு விழுகிறது. படத்தின் முக்கிய ப்ளஸ்... நீளம். 2 மணி 5 நிமிடம்தான் படம். காட்சிகளின் வேகமான நகர்வில் கதையில் உள்ள மைனஸ்கள் தெரிவதில்லை.

பரத்வாஜ் இசையில் டொட்டொடய்ங் பாட்டு கலகல... படம் முடிந்து வெளியில் வரும்போது எல்லார் வாயிலும் இந்தப் பாட்டு நீக்கமற நிறைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. மற்றப் பாடல்கள், பின்னணி இசை பெரிதாய்க் கவரவில்லை.

பிரசாந்தின் ஒளிப்பதிவு அசத்தல். படத்துக்குப் பொருத்தமான பின்னணியை அதன் நோக்கம் மாறாமல் தந்திருக்கிறார். ஆனால், மலேஷியாவில் மும்பையைக் காட்ட முயன்றதைத் தவிர்த்திருக்கலாம்.

காட்சிகளை பார்த்துப் பார்த்து இழைத்திருக்கிறார்கள் இயக்குநர்கள் சரணும் அஜித்தும். அதில் காட்டிய அக்கறையை ஒரு வெயிட்டான கதையைப் பிடிப்பதிலும் காட்டியிருக்கலாம். சில காட்சிகள், வட்டாரம் மற்றும் அட்டகாசத்தை நினைவூட்டுவதையும் தவிர்த்திருக்கலாம் சரண்.

அஜீத் ரசிகர்களுக்கு (மட்டும்!) இது 'அசல்' விருந்து...!!

# கவிதைப்புனல்

## மறுபடியும் வேதாளம்

வாக்குறுதி சத்தியங்கள் தேர்தல் கால
வழக்காறு என்றறிந்தும் ஏனோ தானோ
நோக்குடனே அளித்திட்டோம் எங்கள் வாக்கை
நேயமுடன் பல்லிளித்த எம்.பி மாரில்
மூக்குடைந்தோர் முடங்கிவிட வாகை கொண்டோர்
முறுக்குடனே தண்டெடுத்து வஞ்சம் தீரத்
தாக்குகின்றார் எதிரணியை குருதி வெள்ளம்
தரைமீது சகதியாக! தேவை தானா?

சிங்கப்பூர் சிறப்போடு தொகுதி யெல்லாம்
சிரிக்குமென மேடையிலே சொன்ன வார்த்தை
தங்கத்தைத் தலைமீது சொரிந்தாற் போல,
தந்ததடா தரித்திரர்க்கு மகிழ்ச்சி யேதான்
சிங்களமும் செந்தமிழும் பாந்த மாகி
சிறிலங்கா, தமிழீழ வார்த்தைக் கப்பால்
எங்களுமே ஒட்டுறவாய் வாழு மென்றால்
எம்நாடு சுவனந்தான்! குறையு முண்டோ?

பச்சோந்திப் பகட்டோடு நிறத்தை மாற்றி
பணத்துக்காய் அரங்கேறிக் கரணம் போட்ட
மச்சான்மார் மடிச்சரக்கு தீரும் மட்டும்
மனைமாட்சி சிறந்தோங்கும்! நாளை ஒருகால்
உச்சாரக் கொப்பிருந்து மாற்றுக் கட்சி
உலுப்புமென்றால் பணமூடை அடுத்த கணமே
பொச்சாப்பாய் குழைந்திடுவார்! கொள்கை மாறும்
பம்மாத்து அரசியலில் பகடை நாம்தான்!

நாட்டினிலே நல்லமைதி நிலவு மென்றார்
நலவாழ்வும் வளப்பாடும் குலவு மென்றார்!
ஏட்டினிலே புடம்போட்ட திட்டம் யாவும்
எளிதாக நிறைவேற வழியும் உண்டாம்!
வீட்டினிலே குடிகொண்ட துயரப் பாடு
விரைவினிலே நீங்கிவிட, விலைவா சிகள்தம்
பாட்டினிலே குறைந்திடுமாம்! பொறுத்தி ருந்தே
பார்த்திடலாம் புத்தாட்சிச் சிறப்பி னைதாம்!

அடிதடியும் ஆர்ப்பாட்டக் குண்டு வீச்சும்
அடுத்தடுத்துத் தெருவெங்கும் உயிரை வாங்க,
குடியாட்சித் தலைமைக்குப் போட்டி யிட்டோர்
குறைவில்லாச் சொகுசோடு வாழு கின்றார்!
கொடிதூக்கிக் கோஷமிட்ட குண்டர் தினமும்
கோமான்கள் வாசலிலே சழிந்து, தாளை
மடிநிறப்பிச் சென்றிடுவார்! பிறகு என்ன?
மறுபடியும் வேதாளம் முருங்கை தாவும்!

-ஏறாவூர் அனலக்தர்-

## என்னைக் காப்பாய்!

பக்தியால் நித்த முன்னைப்
பணிந்துமே வணங்கு மென்னை
வித்தகா காத்து வாழ்வை
வெளிச்சமாய் ஆக்கி வைப்பாய்!

பேதையர் என்னு மந்தப்
பேய்களின் வலையில் வீழ்ந்து
வாதைகள் பட்டி டாமல்
வள்ளலே என்னைக் காப்பாய்!

மதுவினை நிதமும் மாந்தி
மதியினை இழந்து வாடும்
புதுமையாம் வாழ்வி ருந்து
பூரணா என்னைக் காப்பாய்!

பணத்திலே இச்சைப் பட்டு
பழிகளைச் சூடு கின்ற
குணத்தினை முற்றாய் நீக்கி
குரிசிலே என்னைக் காப்பாய்!

நண்பராய் நடித்து என்னை
நடுத்தெரு தனிலே விட்ட
பண்பிலார் உறவை வெட்டி
பரமனே என்னைக் காப்பாய்!

கோள்புறம் கூறு கின்ற
கொள்கையை விட்டு மேலாய்
வாழ்ந்திடும் மனித னாக்கி
வைத்துநீ என்னைக் காப்பாய்!

சாதிகள் மதங்க ளென்னும்
சாக்கடை மனிதர் சாக,
நீதியாம் பாதை பற்ற
நிமலனே என்னைக் காப்பாய்!

-கவிஞர் அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு
கிண்ணியா.

## மலையக எழுச்சி

## எக்கரை...?

நாடற்றோர் மக்கள்; மன்றில்
நாவாட்ட நாதி யற்றோர்
வாக்கற்றோர்; ஒடுக்குந் தோட்ட
வேலையோ போனால் அந்தோ
வீடற்றோர்; ஓய்வு பெற்றால்
விதியற்றோர்; ஆண்டிக் கோலம்!
காடற்றோர் செத்தால்; தக்கக்
காடில்லை; என்ன வாழ்க்கை!

இக்கரை நகைப்பு; கிண்டல்
இடையூறு; ஒதுக்கல்; அந்தோ
எக்கரை என்று நின்று
ஏங்கியோர் நோக்கி யன்று
அக்கரை ஏகா விட்டால்
அனுப்புவோம் என்ற பேச்சு
சர்க்கரை வார்த்தை கூட
அக்கரை கொட்ட வில்லை!

அந்தர வாழ்க்கை; மக்கள்
அநாதைகள்; ஆட்சி யாளர்
தந்திர முடிவு; சமூகம்
தலைதூக்க மார்க்க மில்லை
சுந்தர நாடு கண்டோர்
சொல்லொணா விரக்தி; சங்க
மந்திர யோச னைகள்
மண்ணோடு; பலிக்க வில்லை!

துண்டிப்புப் பிடிப்பு; நெஞ்சு
துயரத்தால் துடிப்பு; சொந்தம்
அண்டாமல் தடுப்பு; பார்க்க
அணுகாமல் கெடுப்பு; ஆமாம்
மண்டபம் அடைப்பு; முன்னோர்
மண்ணினை மிதிக்க வேலி
தண்டனை குரூரம்; பேர்லின்
தடுப்புக்கோ குரூர மேது?

-கவிஞர் ஸி.எஸ். காந்தி
(தொடரும்).

## கடவுளின் தண்டனை!

வட்டி ஈட்ட விட்டு
வளமுங் கண்டாய் பணத்தால்
குட்டி போட்ட வகையில்
குதூக லித்தாய்; அந்தப்
பெட்டி நிரப்பி அதனால்
பெருமைப் பட்டாய்; அதனை
கெட்டித் தனமாய் நினைத்து
கேவலம் தனையே மறந்தாய்!

மயக்கும் மதுவைக் குடித்து
மாதின் மடியில் கிடந்தாய்
சுயநி னைவை இழந்து
சுகமே அதனில் கண்டாய்
தயக்கம் எதுவும் இன்றி
தகாத வார்த்தை சொன்னாய்
பயமே கொளாது இறையை
பற்றி நினைக்க மறந்தாய்!

அடுத்த வீட்டா ரோடு
அதர்ம சண்டை யிட்டாய்
எடுத்த தற்கு எல்லாம்
ஏச்சுப் பேச்சில் திளைத்தாய்
தடுக்க வந்தா ரோடும்
தர்க்கம் புரிந்து பகைத்தாய்
கொடுமை செய்து இறையின்
கோபத் திற்கா ளானாய்!

இழிந்த துர்செ யலுக்கு
இன்று பரிசு பெற்றாய்
அழிந்தது வட்டிப் பணமே
அதனால் பித்துப் பிடித்து
கிழிந்த கந்தல் தரித்து
கிண்டல் செய்வார் முன்னே
கழியுது உன்றன் காலம்
கடவுள் சினத்தை தணிப்பாய்!

வி.எம். அன்ஸார், கிண்ணியா.

## காணவில்லையே!

எழுதியென்ன படித்தென்ன
எல்லோர்க்கும் கொடுத்தென்ன?
புழுதியினால் மூடுண்டு
போகிறதே நூலெல்லாம்
அழுவதுவா சிரிப்பதுவா?
ஆரிடமும் சொல்வதுவா?
பழுதேதும் வாராதா
படக்காட்சிப் பெட்டியிலே!?

மூளையைப் போட்டுடைத்து
முழுநாளும் சிந்தித்து
ஆளையும் அரையாக்கி
அருந்தமிழ் மொழிபொறுக்கி
வேளைக்கு உணவின்றி
வெள்ளிசனி பாராமல்
நாளையுங் கரைத்தபடி
நன்னூல்பல் வரைந்தோமே!

ஆரியத்தால் மூடுண்ட
அப்பாவி மக்களெலாம்
பாரில்யாம் திராவிடராய்
பழம்வீரம் காதலுடன்
சேரும்படி யாகநின்று
சிந்தித்த வற்றையெலாம்
வாரித்தான் வரைந்தோமே
வாசிப்பைக் காணோமே?

நூலகங்கள் தூங்குவதும்
நூலளித்தார் ஏங்குவதும்
நாலறையில் சாமியறை
நல்லமணம் வீசுவதும்
ஒலப்படக் காட்சிதனை
உள்ளிருந்து பார்ப்பதுமாம்
கோலங்கள் மறையாதோ?
குழுகாயம் திருந்தாதோ?

-தாமரைத் தீவான்-

## ஒருமைப்படு!

வருந்தி அழுது
பயனில்லை-நாளை
வாழும் வழியை
எதிர்நோக்கு
திருந்து மென்ற
நிலையகற்றி-வாழ்வில்
தேடி டுவாய் புதுமாற்றம்!

பஞ்சம் பிணிகள்
பரிதவிப்பு-இந்தப்
பாரில் போக்கப் பாடுபடு
அஞ்சும் காலம் அகற்றிடவே-நாடி
அயரா தின்றே உழைத்துவிடு!

யுத்தம் மூண்ட
மண்மீது-வேண்டாம்
சத்தம் கொண்ட சண்டைகள்
கத்தும் துவேஷியை
ஒதுக்கிவிடு-உந்தன்
கனவு பலிக்க ஒருமைப்படு!

ஆளுமை கொண்ட
மனிதாநீ-ஏனோ
ஆறுதல் இன்றித் தவிக்கிறாய்?
நாளும் பொழுதும்
உனக்கன்றோ-நீயும்
நல்லவை செய்யப்
புறப்படுவாய்!

-பிரியா பரந்தாமன்-
வவுனியா.

# நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாவலாசிரியர் செ. கணேசலிங்கன்

ஈழத்தின் தமிழ் இலக்கியப் பரப்பில் மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் முன்னிலைப் படுத்தப்படும் அளவில், தாம் சார்ந்த மார்க்சிய வழிநின்று இலக்கியம் படைக்கும் ஒருவராக செ.கணேச லிங்கன் முகிழ்ந்து நிற்கின் றார். நாவல், சிறுகதை, கட்டுரை, மொழி பெயர்ப்பு, சிறுவர் இலக்கியம், இதழியல், நூலாக்கம், வெளியீடு எனப் பல துறை சார்ந்த பணிகளில் ஈடுபாடு கொண்டு உழைத்து வருபவராக இன்றும் விளங்குன்றார்.

மேலே கூறப்பட்ட பல துறைகளி லும் தடம் பதித்தவராகிய செ.கணேச லிங்கன் நாவல் படைப்பதிலேயே முதன்மையான பங்களிப்பை வழங்கி வருகின்றார். ஈழத்தில் மட்டுமல்லாது தமிழகத்திலும் நன்கு பிரபலம் பெற்ற ஒரு நாவலாசிரியராக செ.கணேசலிங்கன் மதிக்கப்படுகின்றார். 1950 களிலிருந்து இன்றுவரை இடைவிடாது எழுதிக் கொண்டிருக்கும் செ.கணேசலிங்கனின் ஆளுமை பல்பரிமாணம் கொண்டதாகும்.

யாழ்ப்பாணம் - உரும்பிராய் என்னும் விவசாயக் கிராமத்தில் 1928 ஆம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக் கல்வியை உரும்பி ராய் கிறிஸ்தவ பாடசாலையிலும் தொடர்ந்து சந்திரோதயா வித்தியாசாலை யிலும் கற்று இறுதியாக பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றபின் அரச சேவை யிலே இணைந்து கொண் டார். இளமைக் காலத்திலிருந்தே வாசிப்புப்பழக்கம் அவரது முன்னேற்றத் திற்குப் பெருந் துணையாக இருந்துள் ளது. இவருக்குக் கல்வி புகட்டிய ஆசான்களாக கொக்கு வில் குமாரசுவாமிப்புலவர், நவநீத கிருஷ்ண பாரதியார், வித்துவான் வேந் தன், வித்துவான் நடேசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் கள். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் வல்ல வரான செ.கணேச லிங்கன் மேலை நாட்டு இலக்கியங்களைப் பெரிதும் விரும்பிப் படித்துத் தமது அறிவை வளப்படுத்திக்கொண்டார்.

இந்திய எழுத்தாளர்களுடன் தொடர்பு களை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் தன்னையும் ஒரு சிறந்த எழுத் தாளராக உருவாக்கி சமுதாய அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டார். செ.கணேசலிங்கத் தின் ஆரம்பகால எழுத்துக்களுக்கு ஈழத்தில் வெளிவந்த செய்திப் பத்திரி கைகளான 'தினகரன்', 'சுதந்திரன்' ஆகியன களம் அமைத்துக் கொடுத்தன.

1950 இல் தினகரனில் எழுதிய 'மன்னிப்பு' என்னும் சிறுகதை மூலம் புனைகதை உலகில் காலடி எடுத்து வைத்தார். இந்தியச் சஞ்சிகையான 'சரஸ்வதி' யிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. 'தினபதி', 'சிந்தாமணி' ஆகிய பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் இடம் பெற்றன.

யாழ்ப்பாணத்தில் புரையோடிப் போயிருந்த சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களில் இவர் ஈடுபட் டிருந்தார். இளம் வயதிலிருந்தே அடக்கு முறைகளுக்கு எதிராகச் செயற்பட்டு வந்த செ.கணேசலிங்கன்,சமூகவிடுதலை குறித்த மனப்போக்குடன் நின்று தமது படைப்புகளை வெளிக் கொணர்ந்தார்.

இவரது முதல் நாவல் 'நீண்ட பயணம்'. ''யதார்த்தமான வாழ்க்கைச் சித்திரிப்பு, பாத்திர வார்ப்பு, உயிர்த்துடிப்பான உரையாடல் என்ற விதங்களில் முதல் ஈழத்து தமிழ்நாவல் என்ற பெருமை யைப் பெறுகின்றது'' என்று கலாநிதி செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார். ஈழத்து நாவல்துறையில் தொடர்ந்து ஈடுபட்டு, ஏறத்தாழ நாற்பது நாவல்க ளைத் தந்துள்ள செ.கணேசலிங்கன் தமிழ் நாவல் வரலாற்றில் முதன் முதலாகத் தாழ்த் தப்பட்ட மக்களின் வாழ்க்கையை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தி யுள்ளார்.




1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து யாழ்ப் பாண மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோ ரின் உரிமைக்குரல் வலுப்பெற்றதன் விளைவு காரணமாக பொதுவுடைமை அரசியற் கோட்பாடு இவர்களிடையே வர்க்க உணர்வை ஊட்டத் தொடங்கி யது. கிராமங்கள் தோறும் உரிமைப் போராட்ட உணர்வு கிளர்ந்தெழுந்து இத்தகைய சூழ்நிலையில் நாவல் எழுதப் புகுந்த செ.கணேசலிங்கன் தாம் சார்ந்திருந்த முற்போக்கு இலக்கியக் கோட்பாடுக ளுக்கு ஏற்ப சமகாலச் சமூக வரலாறு எனத் தக்கவகையில் சாதிப்பிரச்சினை தொடர்பாக 'நீண்ட பயணம்' (1965), 'சடங்கு' (1966), 'போர்க் கோலம்' (1969) ஆகிய நாவல்களை எழுதி வெளியிட்டார்.

'நீண்ட பயணம்' நாவலில் தாழ்த் தப் பட்டோர் எனப்படுவோ ரின் சமூக பொருளாதார நிலை, சமூக மதிப்பீடு கள், அவர்களின் வாழ்வியல் அவலங்கள் முதலியனவும் சித்திரிக் கப்பட்டுள்ளன. ஈழத்து நிலவுடைமைச் சமூகத்தின் வீழ்ச்சியை 'சடங்கு' நாவலில் கலாபூர் வமாகச் சித்திரித்துள்ளார். 'போர்க் கோலம்' நாவல் 'நீண்ட பயணம்' நாவலின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமா கவே அமைந்துள்ளது. 1966-1969 காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பிரதே சத்தில் நிகழ்ந்த ஆலயப் பிரவேச முயற்சிகளின் தொடர்பான போராட் டங்களும் துப்பாக்கிச் சூட்டு நிகழ்ச்சிக ளும் இந்நாவ லின் பகைப்புலமாக அமைந்துள்ளன. கதைப் போக்கிலே மாறிவரும் சமூக நிலையையும் ஆசிரியர் தொட்டுக் காட்டுகிறார். இந்நாவலில் சாதிப் போராட்டத்துடன் முதலாளித் துவத் திற்கெதிரான பொருளாதார, அரசியற் போராட்டக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

புனிதப் பிணைப்பான திருமணம், யாழ்ப்பாணத்து உயர்சாதியினரிடையே தனது புனிதத்துவத்தை இழந்து சடங்கு, சம்பிரதாயம் ஆகியவற்றுக் குட்பட்டுச் சீரழிகின்றது என்ற கருத்தை ஆசிரியர் இந்நாவலின் (சடங்கு) ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

இவரின் 'செவ்வானம்', 'தரையும் தாரகையும்' ஆகிய நாவல்கள், மத்திய தர முதலாளித்துவ வர்க்கத்தின ரின் வாழ்க்கையை முதன் முதலாக விமர் சனத்திற்குட்படுத்தும் வகையில் சித்தி ரிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியப் பிரச்சினையை மார்க்சிய நோக்கில் விமர்சனத்திற்கு உள்ளாகும் வகை யில் அமைந்த நாவல்களாக 'பொய்மையின் நிழலிலே', 'அயல வர்கள்' ஆகியன எழுதப்பட்டுள்ளன.

செ.கணேச லிங்கன் சாதி ஏற்றத் தாழ்வுக ளைப் பல்வேறு வகைப்பட்ட சுரண்டல்களுக்கும், பறிப்புக்கும், கொடுமைகளுக்கும் காரணமானதும் வர்க்கச் சார்புடையதுமான ஒரு பிரச்சினை என்பதை வற்புறுத்தினார். இவரின் அணுகுமுறையிலே மார்க்சிய அடிப்படை யிலான வர்க்கக் கண்ணோட்டமும் சமூகத்தின் உள் முரண்பாடுகளையும் ஊழல்களையும் விரிவாகச் சித்திரிக்கும் ஆர்வமும் இயக்க ரீதியான போராட்ட மூலம் தீர்வு காணும் உறுதியும் அமைந்தன.

இலங்கையின் அரசியல் வரலாற்றின் பகைப்புலத்தில் 1956 ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியில் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டு வந்த சமூக, பொரு ளாதாரச் சிந்தனை மாற்றங்களைச் சித்தி ரிக்க முயன்ற நாவலாசிரியர் செ.கணேச லிங்கன். தமிழரின் அரசியல் பொருளா தாரப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு 'செவ்வானம்' (1967), 'தரையும் தாரகை யும்' (1968), 'மண்ணும் மக்களும்' (1970) ஆகிய நாவல்களை ஆக்கினார். காதலையும் அரசியலையும் இணைத்து எழுதப்பட்ட 'செவ்வானம்' என்ற நாவ லில் காதல் ஒரு செவ்வானம் என்றும் அதன் அழகுத்தோற்றம் நிலை யற்ற தென்றும் பாத்திரங்கள் வாயிலாகப் புலப் படுத்த வந்த ஆசிரியர் தேசிய முதலாளித்துவக் கட்சியுடன் இடதுசாரிகள் இணைந்து அமைத்த கூட்டாட்சியும் தற் காலிக அழகு காட்டும் செவ்வானமே என் பதையும் கதையில் உணர்த்துகின்றார்.

கனடாமற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களது வாழ்க்கையின் கோலங்களை 'கோடை யும் பனியும்', 'இருட்டறை யில் உலகம்' ஆகிய நாவல் கள் மூலம் வெளிச்சத்துக் குக்கொண்டு வந்துள்ளார். தமிழகச் சூழ லில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்பைச் சுரண்டும் நிலையினை 'அடைப்புக்குள்' என்ற நாவல் மூலம் வெளிக் கொணர்ந்துள்ளார்.

கலை இலக்கியம், சினிமா உலகம் பற்றிய தமது பார்வையை 'கவர்ச்சிக்க லையின் மறுபக்கம்', 'கடவுளும் மனித னும்' ஆகிய நாவல்கள் மூலம் வெளிக் கொணர்ந்த செ.கணேச லிங்கன், உலக மயமாக்கலைப் பற்றியும் 'போட்டிச் சந்தையில்' என்ற நாவலில் கூறியுள் ளார். நாவலாசிரியர் தமிழகத் தில் நீண்ட காலம் வாழ்ந்தமையினால், தமிழகத்த வரின் புலம்பெயர்வு பற்றி 'குடும்பச் சிறையில்' என்னும் நாவலையும் எழுதியுள்ளார்.

ஈழத்துச் சூழலையும் தமிழகத்துச் சூழலையும் களமாகக் கொண்டு பெண் ணிலைவாத நோக்கில் பல நாவல்களைத் தந்துள்ளார். 'ஒரு பெண்ணின் கதை', 'நீ ஒரு பெண்', 'குடும்பச் சிறையில்', 'நான்கு சுவர்க ளுக்குள்' ஆகியவற்றைக் குறிப்பிட லாம். அனைத்தையும் விட சமகால வரலாறு என்பது பிரக்ஞை பூர்வமாகத் தமிழ் நாவலின் பொருளாக மாறுவது செ.கணேசலிங்கத்தின் நாவல் கள் ஊடாகவேயாகும். 'அந்நிய மனிதர் கள்', 'இளமையின் கீதம்', 'பொய்மையின் நிழலில்', 'சூரியன் கிழக்கில் உதிப்ப தில்லை', 'விலங்கில்லா அடிமைகள்', 'ஒரு குடும்பத்தின் கதை', 'இரண்டா வது சாதி', 'மரணத்தின் நிழலில்' ஆகிய நாவல்களைத் தந்த செ.கணேசலிங்கன், சுதேசியப் பண்பாட்டுக் கூறுகள் பலவற் றையும் துல்லியமாகச் சித்திரிக்கும் கதை விரிகளங்களை மையமாகக் கொண்டு நாவல்களைப் படைத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. 'ஒரு மண்ணின் கதை', 'வதையின் கதை', 'வன்முறை யின் வடுக்கள்', 'நரகமும் சொர்க்கமும்', 'தாய் வீடு', 'சிறையும் குடிசையும்' ஆகிய நாவல்களுடன் 'உலகச் சந்தை யில் ஒரு பெண்', 'ஈனத் தொழில்', 'ஒரு அரசியலின் கதை', 'இலட்சியக் கனவு கள்', 'செல்வி', 'கூட்டுக்கு வெளியே', 'தேன் பறிப்போர்', 'இரு நண்பர்கள்' என்று சுமார் நாற்பது நாவல்கள் வரை எழுதியுள்ளார். ஒட்டுமொத்த தமிழ் நாவல் வரலாற்றில் பல்வேறு விடயங் களையும் மார்க்சிய நோக்குத் தெளிவுடன் அணுகி அதிக நாவல்கள் எழுதியவர்- எழுதிவருபவர் என்ற வகையில் செ.கணேசலிங்கன் தமிழ் நாவல் இலக்கியத்தில் தன்னிகரில்லா சாதனையாளராக மதிக்கப்படுகின்றார்.✱

# குழந்தை பிறப்பைத் தள்ளிப்போடுகிறீர்களா?

இப்போதெல்லாம் திருமணம் செய்து கொள்ளும் இளம் ஜோடிகள், குழந்தை பெற்றுக்கொள்வதை சிறிது காலத்திற்கு தள்ளிப்போட்டுவிடுகிறார்கள்.

ஒன்றிரண்டு வருடத்திற்கு வாழ்க்கையை அனுபவித்துவிட்டும், எதிர்காலத்திற்கு தேவை யானதை சேர்த்துவிட்டும் குழந்தை பற்றி பார்த்துக்கொள்ளலாம் என்பது அவர்களது கணிப்பாக இருக்கிறது.

இப்படி தள்ளிப்போடுவதில் தவறில்லை. குறிப்பிட்ட வயதையும் மீறித் தள்ளிப்போடுவது குழந்தையின்மைக்கு காரணமாகிவிடலாம் என்று எச்சரிக்கிறார்கள் டாக்டர்கள்.

குழந்தையை தள்ளிப்போடுவது பற்றி யோசிப்பவர்களுக்கு டாக்டர்கள் கூறும் அறிவுரை :

முக்கியமான காரணம் என்றால் அதிகபட்சம் ஒரு வருடத்திற்கு மட்டும் குழந்தை பெற்றுக்கொள்வதை தள்ளிப்போடுங்கள். அதுவும் மருத்துவரின் ஆலோசனைப்படிதான் செய்ய வேண்டும். குழந்தையை தள்ளிப் போடுவதற்காக மருந்துகளையும், ஊசியினையும் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. உங்கள் கட்டுப்பாட்டையும் மீறி கர்ப்பம் தரித்துவிட்டால் கருக்கலைப்பு செய்ய வேண்டாம்.

அதிகப்பட்சம் 30-35 வயதுக்குள் குழந்தை பெற்றுக் கொள்வது நல்லது. இந்த வயதில்தான் பெண்களின் உடல் நிலை சீராக இருக்கும். கருமுட்டையின் வளர்ச்சியும் நன்றாக இருக்கும், இடுப்பு எலும்புகள் எல்லாம் நன்றாக வளைந்து கொடுத்து சுகப்பிரசவம் ஆகும் வாய்ப்புகளும் அதிகரிக்கும்.

காலம் தாழ்த்தி குழந்தை பெற்றுக்கொள்ளும் போது, அந்த குழந்தை வளர்ந்து ஆளாகும் போது, அதன் பெற்றோர் தாத்தா, பாட்டிபோல் ஆகிவிடு வார்கள். அந்த குழந்தைக்கு திருமணம் செய்து பேரன், பேத்தியை பார்ப்பது என்பது சாத்திய மற்றுப் போகலாம்.

35 அல்லது அந்த வயதுக்கு மேல் குழந்தை யைப் பெற்றுக்கொள்வது, அந்த தாய்க்கும், குழந்தைக்கும் உடல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. சிலருக்கு குழந்தை பிறப்பதிலேயே பிரச்சினைகள் வரலாம்.

குழந்தைப் பாக்கியம் என்பது மிகப்பெரிய கொடை. எல்லாவித வசதி வாய்ப்புகள் இருந்தும் அந்த கொடை கிடைக்காமல் ஏங்கும் தம்பதியர் பலரை பார்க்கலாம். அதனால், குறிப்பிட்ட வயதிற்குள் குழந்தை பெற்றுக்கொள்வதுதான் ஆனந்தமான வாழ்க்கைக்கு வழிகாட்டும். ✱


## யாழ்நகரில்
## அலுவலகம் / கல்லூரி வளாக இடம் தேவை

இலங்கையின் மிகப்பெரிய கல்வி நிறுவனத்திற்கு தனது சேவைகளை வடக்கில் வழங்குவதற்கு வசதியாக ஒரு அலுவலக இடவசதி யாழ்நகரின் மையப்பகுதியில் தேவை.

தொலைபேசி, மின்சாரம், நீர், வாகன நிறுத்தும் வசதிகளோடு யாழ் நகரின் கேந்திர முக்கியமான பகுதியில் அலுவலகம் அமைத்திருப்பது அவசியம்.

தனது கல்வி கற்கை நெறிகளை வடக்கு மாணவர்களுக்கு வழங்குவதற்கு வசதியாக வளாகமொன்றை அமைப்பதற்கு யாழ் புறநகர் பகுதியில் 2-3 ஏக்கர் காணியோடு கூடிய கட்டிடம் தேவை.

உரிமையாளர்கள் தமது சுய விபரங்களுடன் பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**ADINNOVATIONS (PVT) LTD**
No. 32, Deanstone Place. Colombo 03.
Tel : 0777 636280

www.adinnovationslk.com

மனதைக் கட்டுப்படுத்தி சரியான வழியில் முயல்பவனுக்கு வெற்றி நிச்சயம்

# “உள்ளத்தில் கரும்புள்ளி படிந்தால் வாழ்வு ஒளியற்று போகும்”

சென்ற வார எமது தொடரிலே நாம் மனநலத்தைப் பற்றியும் அதன் பெறு மானங்களைப் பற்றியும் கண்டோம். உள்ளம் என்பது நமது ஆயுள் காலம் வரை வாழ்கை எனும் நீண்ட பயணத் தில் ஒளி தருகின்ற பொருள் எனக் கொண்டால் அதன் சிறப்பை இன்னும் விளங்கிக் கொண்டு நாம் செயற்பட போதுமானதாக இருக்கும்.

பொதுவாகவே நமக்கும் நம்மைச் சார்ந்திருக்கின்ற அல்லது சாராமல் இருக்கின்ற அனைவருக்கும் ஒளி




வழங்குகின்ற ஒரு ஒப்பற்ற பொருளாக நாம் உள்ளத்தை நோக்கினால் அதனைச் சிறப்பாக பாதுகாத்துப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

உள்ளமேனும் நமக்குள்ளே இருக் கின்ற ஒளிர் பொருளில் பல்வேறு கறைகள் விழுந்து அதன் ஒளியை மங்கச் செய்வதற்கான சாத்திய கூறுகள் நிறையவே உண்டு. எனவே உள்ளத் தில் ஏற்படக் கூடிய இத்தகைய கறைகள் எவை என்பதை நாம் தெரிந்து கொள்ளல் அவசியம்.

பொதுவாகவே கோபம் அல்லது சினம் என்பது சாதாரணமாகவே நமக்கு ஏற்படுவடுதுண்டு. நமது உள்ளத்தின் மகிமையை இழக்கச் செய்து மதியை மயக்குகின்ற ஓர் உணர்ச்சிதான் கோபம். இந்தக் கோபம் அளவுகடந்ததாகவும், அறிவீனமானதாகவும் இருந்தால் அது நமது உள்ளமெனும் ஒளி விளக்கில் கரும்புள்ளியை ஏற்படுத்தி வாழ்வை ஒளியிழக்கச் செய்துவிடும்.

சினம் அல்லது கோபம் என்றால் என்ன என்பதை முதலில் காண்போம். கோபம் என்பது உள்ளத்திலிருந்து எல்லைமீறி பொங்கி வருகின்ற ஓர் உணர்ச்சிப் பெருக்காகவே நோக்கப்பட வேண்டும். சினம் நமது அற்புதமான உள்ளத்தின் ஒரு மூலையில் ஒழிந்து கிடக்கும் ஒரு உணர்ச்சியாகும். இந்த உணர்ச்சியை அனல் கங்குக்கு ஒப்பிடமுடியும். உள்ளத்தில் மறைந்து கிடக்கின்ற நெருப்பு தீக்குச்சி எனும் உறவுகளால் உரசப்பட்டதும் பொறி பொறியாக வெளியேறுகிறது.

மனிதர்களின் இழி குணம்தான் இத்தகைய அக்கினிச் சுவாலையை ஏற்படுத்தக்கூடிய தீப்பொறியாகும். கோபக் கினி ஒரு மனிதரிலிருந்து கொந்தனித்து வெளியேறும்போது அவர்களிடமிருக்கும் தீய குணங்கள் எல்லாம் கொப்பளிக்கின்றன.

இதன் காரணமாக ஆத்திரம் பொங்கி எழுந்து நிதானமிழந்து, நிலைத்தடுமாறி ஆவேசப்பட்டு பேசுவர், அடிப்பர், திட்டுவர், சபிப்பர்.

சினம் ஏற்படும் அந்தக் கணப்பொழுதில் ஒருவருக்குத் தானே சிறந்தவர் என்கின்ற பெருமிதமும் அகங்காரமும் தலைக்கிறுக்கும் ஏற்படுகிறது.

கோபம் என்கிற கட்டுக்கடங்காமல் போகும் இத்தகைய கொதிப்பு முதலில் நமது அங்கத்தின் ஒரு பகுதியைத்தான் தாக்குகினறது. அந்த அங்கம் சினத்தின் தாக்கதினால் பாதிக்கப்பட்டு விட்டால் நமது உடல் முழுவதும் அங்கம் அங்கமாகப் பாதிக்கப்பட தொடங்கிவிடும்.

உள்ள்தில் பகுதிபகுதியாகப் படரும் இந்த சினம் என்னும் கரும்புள்ளி பின்னர் உள்ளத்தை முழுமையாகவே ஆக்கிரமித்து விடும்.

கோபப்படும் ஒருவர் கூட தன் மீது வேறொருவர் சினம் கொள்வதை விரும்புவதில்லை. ஆம், சினம் கொள்வதைப் பொதுவாக எவருமே விரும்புவதில்லை. கோபம் கொள்வது ஒரு நன்மையான செயல் என்று எவருமே அதனைக் கருதுவதில்லை. கோபம் என்பது பொல்லாத ஓர் உணர்ச்சி.

கறையான் மரத்தை அறிப்பது போல கோபம் சிறுகச் சிறுக நமது உள் ளத்தை அரித்துவிடும். சினத்தால் உந்தப்பட்ட ஒருவருக்கு நல்லது கெட்டது புரிவதில்லை, எதைச் செய்வது எதனைச் செய்யாமல் விடுவது நல்லது என்று பகுத்துப் பார்க்க முடிவதில்லை.

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

ஒருவர் கோபத்தினால் உந்தித் தள்ளப்படுகின்ற போது அவரது நிலைமையே முற்றுமுழுதாக மாறிவிடுகிறது. நிதானமிழந்து நிலைதடுமாறி விடுகிறார்கள்.

கோபம் எனும் தீச்சுவாலையை நமது உள்ளத்தல் எறிய ஆரம்பித்து விட்டால் பகுத்தறிவு என்னும் வழிகாட்டியான சாரதி இயங்காமல் போய்விடுவார்.

சினம் என்பது பகுத்தறிவின் விரோதி யாகவும் அறியாமை என்னும் அந்த கார இருளின் நண்பனாகவும் இருக்கின்றது. கோபம் பொங்கி வரும் மூளையில் பகுத்தறிவு இயங்க முடியாது.

கோபம் கொள்வது என்பது பொல்லாத செயல். அது நம் மதிப்பை குறைத்து நம்மை இழிவுபடுத்தி விடும். கோபம் குறைய குறைய நமது பகுத்தறிவு விரிவதோடு நம் நன்மதிப்பு மேன்மையடையும்.

அப்படியானால் கோபத்திலிருந்து நம்மை எப்படி காப்பாற்றிக் கொள்வது?

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள்
தொடர்பான கேள்விகளுக்குப்
பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி
மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

கோபம் கொள்ளாதிருந்தாலே போதும். கோபத்தை அகற்ற முடியுமா? ஆம் கோபத்தை அழிக்க வேண்டுமாயின் கோபத்திற்குறிய காரணத்தை கண்டறிந்து அழிக்க வேண்டும்.

பொறுமையும், அன்பும், தயாள குணமும், அமைதியும் நம்மை ஆட் கொள்ள வேண்டும். இதற்காக நாம் அறிவுக்கு இடமளிக்க வேண்டும். விரோதம், வெறுப்பு, பொறாமை, வஞ்சகம், தற்பெருமை என்பவற்றை நீக்க வேண்டும்.

''யுத்த களத்தில் தனது எதிரியை வீழ்த்துபவர் வீரரல்லர். மாறாக தனகுள் ளே பொங்கி வரும் கோபத்தை அடக்கி யாள்பவனே உண்மை வீரராவார்'' என நபிகள் நாயகம் அவர்கள் அருளியுள்ளார்.

## கல்வியறிவு கிடைக்கப்பெறாத சமூகம் வாலறுந்த பட்டம் போன்று இலக்கு இல்லாமல் செல்லும்.

**கேள்வி:** நான் ஒரு சமூக சேவையாளர். நான் வெளிக்களப் பணி நிமித்தம் கிராமங்களுக்குச் செல்லும் போது கண்ட அனுபவங்கள் மிகுந்த வேதனையைத் தருகின்றது. பல்வேறு காரணங்களின் நிமித்தம் குடும்ப பிளவுகள் ஏற்பட்டு குடும்ப உறவுகள் சிதைவடைந்துள்ளன. இதனால் பிள்ளை கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள். இவர்களைப் பராமரித்து பாடசாலைக்கு அனுப்ப தாய் தகப்பன் அக்கறை செலுத்துதில்லை. காரணம் முரன்பாடு களால் தாய் வேறு தகப்பன் வேறு என்று பிரிந்து போயுள்ளார்கள். எனது கேள்வி என்னவெனில் இத்தகைய நிலைமை நீடித்தால் சமூகத்தில் பாதிப்பு ஏற்படாதா?



**பதில்:** நிச்சயமாக எதிர்கால சமூகத் தில் பாதிப்பு ஏற்படும். கட்டாயக் கல்வியை பெறுவது ஒவ்வொரு சிறுவரதும் உரிமையாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. கல்வியறிவு கிடைக்கப் பெறாத சமூகம் வாலறுந்த பட்டம் போன்று இலக்கு இல்லாமல் செல்லும். எதிர்கால சமூக நலன் கருதி இந்த விடயத்தில் ஒட்டு மொத்த சமூகமே அக்கறை எடுக்க வேண்டும். நாட்டில் நிலவிய வன்முறை சார்ந்த சூழல் காரணமாக பொது நலனில் அக்கறை யுள்ள பலர் தானுண்டு தன் பாடுண்டு என்று ஒதுங்கி வாழ தலைப்பட்டு விட்டார்கள். உங்களைப் போன்ற அக்கறையுள்ள பலர் இணைந்து சமூகம் சார்ந்த கூட்டு பொறுப்பை ஏற்படுத்திக் கொண்டு சமூகத்தை விழிப்பூட்டுவது இலேசானதாக இருக்கும். சிறார் நலன், குடும்ப நலன் போன்றவற்றில் அக்கறை யுள்ள நிறுவனங்களையும் தொடர்பு கொண்டு இத்தகைய நிலைமைகளுக்கு ஒரளவு தீர்வைப் பெறலாம்.

**கேள்வி:** நான் ஒரு பெண், வயது 23, நான் படித்துக் கொண்டிருக்கும் போது எனது படிப்புக்கு தடை ஏற்படுத்தப்பட்டதால் என்னால் சுமார் மூன்று வருடங்கள் கல்வியை மறக்க வேண்டியதாயிற்று. எம்மைப் பலாத்காரப்படுத்திக் கொண்டு சென்று வேறு திசையில் எமது கவனத்தைச் செலுத்துமாறு நிர்பந்தித்து விட்டார்கள். எனினும் மூன்று வருடங்கள் அந்த நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டேன். பின்னர் படிப்பைத் தொடர்ந்தேன். வெற்றிகராமாக முடித்தும் விட்டேன். எனது பிரச்சினை என்னவென்றால் இப்பொழுது எதற்கெடுத்தாலும் பயம் என்னை ஆடங்கொண்டுவிடுகிறது. யாரையும் நம்பவும் முடியவில்லை. இதிலிருந்து விடுபட என்ன செய்யலாம்.

**பதில்:** சாதாரண பயத்துக்கும் மிதமிஞ்சிய பயத்துக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. நாய் கடிக்கும் என்று எண்ணி எச்சரிக்கையாய் இருப்பது ஒரு வித முன்னெச்சரிக்கை கலந்த பாதுகாப்புடன் கூடிய ஏற்பாடு. நாயைக் கண்டாலோ, நாயைப்பற்றி கதைத்தாலோ விழுந்தடித்து ஓடுவது மிதமிஞ்சிய பயம். இது விபரீதமான ஒரு மனோநிலையைக் குறிக்கின்றது.

பொதுவாகவே மனதில் பயம் வந்தால் நா வறண்டு போகும், வியர்த்துக் கொட்டும், உடல் நடுங்கும், மயக்கம் வரும், இதயம் வழக்கத்தை விட வேகமாக துடிக்கும், நாத் தடுமாறி பேச்சுத் தடைப்படும்.

பயம் தோன்ற இரண்டு வகையான காரணங்கள் உண்டென்று கூறப்படுகிறது. அதிலொன்று அறிவுபூர்வமாக உருவாவது. மற்றையது உடற் கூறு சம்பந்தமாக தோன்றுவது.

இதில், அறிவுபூர்வமாக உருவாவது என்பது நம் சிறுவயதில் ஏற்பட்ட சம்பவங்கள், அவற்றைப்பற்றிய அதிர்ச்சிகராமான எண்ணத் தொடர்கள் மூலம் வெளிப்படுவது. மற்றையது உடலியல் சார்ந்தது. அது என்ன வென்றால் ரசாயன மாற்றத்தால் ஏற்படும் பயங்கள். மூளைக்கு அடியில் ஹைபோதாலமஸ் () என்ற சுரப்பி யிலிருந்து உருவாகும் அட்ரினல் சீரச் சத்துப் பயத்தை உண்டு பண்ணுகிறது இதனை மருந்து மாத்திரைகள் மூலம் கட்டுப்படுத்தினால் பயம் குறையும்.

உங்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருப்பது சிறுவயதில் உங்களுக்கேற்பட்ட பாதிப்பினால் உருவான பயமாகவே இருக்கும்.

அப்பொழுதிருந்தே பயங்கரமான, பலாத்காரமாக ஆட்களை பிடித்துச் சென்று பயிற்சியளிக்கும் சூழ்நிலை இப்போது இல்லை. எனவே நீங்கள் அப்போதைய சூழ்நிலை தொடர்ந்து மனதில் பதித்துக் கொண்டு பயப்பட வேண்டாம். படிப்பை வெற்றிகரமாக முடித்து விட்டதாகக் கூறும் நீங்கள் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடன் செயற்படுங்கள். உங்களைப் போன்று பாதிக்கப்பட்ட பலர் இருப்பார்கள் அவர்களுக்கு நம்பிக்கையூட்டுங்கள்.

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.

# மடியில் உறங்கினான்

**1995 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்த ஒருவர் தனது குடும்பத்துடன் கிளாலி அடைகிறார். அங்கு ஹெலிக்கொப்டர் தாக்குதலில் அவர் கொல்லப்பட அவரது மனைவியும் மகளும் கிளாலியைப் படகில் கடந்து விசுவமடுவை அடைகிறார்கள். பல கஷ்டங்களின் பின்னர் முள்ளியவளையில் குடியிருக்கிறார்கள். மகள் தீபா பாடசாலையில் படிக்கும் போது குயிலன் என்பவனுடன் நட்பாகிறாள். அதன் பின்னர் இவர்கள் படும் துன்பங்களையும் வன்னி யுத்தத்தில் அவர்கள் சிக்கிப் படும் அவலங்களையும் இந்த கதை விளக்குகிறது.**

**3**


எல்லோரும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது எல்லாம் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. நான் அவனின் காலில் இருந்த ஊத்தையை என் எச்சிலைப் போட்டு உரசிவிட்டு முள்ளை எடுக்கத் தொடங்கினேன். இரத்தம் பிரண்டு இருந்ததால் சரியாக முள் தெரியவில்லை. தண்ணீருக்குப் பதிலாக என் கண்ணீர் அந்த இரத்தத்தைத் துடைத்தது. இரத்தம்...... ஒரு மாதிரி முள்ளைத் தட்டி எடுத்துவிட்டேன். இதுவரைக்கும் அவன் எந்த அசுமாத்தமும் இல்லாமல் இருந்தான். அப்படியே காலைக் கட்டிவிட்டேன். அன்று எனக்கு அவன் சொன்னான், 'என் அம்மா எப்படிப் பாப்பாளோ, அதே மாதிரித்தான் நீயும் செய்தாய்' என்று. எப்பவும் எங்கள் நட்பு இப்படியே இருக்கவேண்டும் என்றான். இப்படியே பாடசாலைக் காலம் முடிய, பாடசாலையை விட்டுவெளியேறினோம். பல ஆண்டுகள் கழிந்தன. அவன் வெளிநிறுவனம் ஒன்றில் வேலை செய்தான், நானும் அப்படித்தான். அவன் என் வீட்டுக்கு வந்து போவான். அதேமாதிரி நானும் போய் வருவேன். ஒரு நாள் குயிலனின் அப்பா எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவிடம் கேட்டார். 'என் பையனுக்குக் கலியாணம் செய்து வைக்கப்போறன். நீங்கள் விரும்பினால் உங்கள் தீபாவைக் கட்டிவையுங்கள்' என்று. அம்மாவுக்கு விருப்பம். அவர்கள் எவ்வளவோ வசதியானவர்கள், ஆனாலும் எம் நிலைமை தெரிந்தும் கேட்டு வருகிறார் என்று சொல்லி சம்மதித்து விட்டார். என்னிடமும் கேட்டார். நான் என்ன செய்வது? எப்படியும் அவனின் நட்பை இழக்க முடியாது. எம் நிலைமையும் அதற்கு சரியெனப் பட்டதால் நானும் சம்மதித்து விட்டேன். எல்லோரினது விருப்பத்துக்கும் இணங்க எம் திருமணம் நடைபெற்றது. அப்படியே பல காலங்கள் கழிந்தன. எமக்கு ஒரு குழந்தையும் உருவானது. இப்படி இருக்கும் பொழுது தான் குயிலன் ஒருநாள் வீட்டுவாசலில் வந்து மயங்கி விழுந்துவிட்டான். என்ன செய்வது என எனக்குப் புரியவில்லை. ஒரு மாதிரி கொண்டு வந்து கட்டிலில் படுக்க வைத்தேன். தண்ணி எடுத்துத் தெளித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக சுயநினைவுக்கு வந்தான். ஆனால் இயலாமல் தான் இருந்தான். அப்பொழுது அவன் சொன்னான் 'ஒன்றும் பயப்படாதே அது இனி சரியாய் வந்திடும்...'

'ஏன் என்ன நடந்தது' என்று கேட்டேன். அவனும் பொய் சொல்லாமல் உண்மையைச் சொன்னான். 'ஒரு பெடியன் காயப்பட்டிட்டான் அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது. ஏற்றாவிட்டால் இறந்துவிடுவான் என்று சொல்லி, ஒரு தாய் அழுதாள். என்ன செய்வது என்ர இரத்தத்தை வைத்து என்ன செய்யமுடியும். ஒரு உயிரைக் காப்பாற்றுவம் என்று என் இரத்தத்தை கொடுத்து விட்டேன். அது தான் கொஞ்சம் ஏலாமல் இருக்குது' என்று சொல்லி முடித்தான். கோபம் தான் வந்தது, ஆனால் அந்த நிலமையில் எதுவுமே சொல்லவில்லை. தேனீரும் சாப்பாடும் கொடுத்து நித்திரை ஆக்கினேன். இரவும் ஆகியது, எனக்கு நித்திரையே வரவில்லை. அவனின் கையைப் பார்த்தேன். கையில் வீக்கம் இருந்தது. இரத்தக் கசிவும் இருந்தது. பார்க்க அழுகை தான் வந்தது, விடியும் வரை நித்திரை இல்லை. விடிந்ததும் அவன் எழுந்துவிட்டான், என் மனம் கேட்கவில்லை. நான் அழுதபடியே கேட்டேன் 'நீங்கள் இரத்தத்தை கொடுத்தீங்கள், உங்களுக்கு ஏதும் என்டால் ஆர் இரத்தம் தருவினம். உங்களில் நான் எந்தக் கீறலும் விழப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டன். இது உங்களுக்கு விளங்காதா?' அவன் அதுக்குச் சிரித்துக் கொண்டு 'கோபப்படாதேங்கோ என்ன செய்வது ஒரு உயிர் எல்லோ' என்றான்.

அவன் எனக்கு ஒருபோதும் சொல்லாமல் எதுவும் செய்யமாட்டான். நினைக்க நினைக்க கோபம் கோபமாக வந்தது. கடைசியில் நான் தான் கண்ட மாதிரி பேசிவிட்டேன். அவன் இதுவரைக்கும் எதுவுமே பேசாமல் நின்று சமாளித்தான். இப்பொழுது எனக்கு விளங்குது என்னில் தான் தப்பு என்று. ஆனால் அப்பொழுது நான் சொல்வது சரி என நினைத்தேன்.

கடைசியில் பிரச்சினையில் முடிந்து நான் என் வீட்டுக்குப் போய் விட்டேன். அம்மாவுடன் சேர்ந்து இருந்தேன். ஒரு உண்மை என்னவென்றால் என்னில் தான் பிழை. ஆனால் என்ன செய்வது என் கணவரில் ஒரு சிறு துளி இரத்தம் போவதையே நான் விரும்பவில்லை. எனக்கு எப்பவும் என் கணவர் தேவை. இப்படியான நிலைமையில் தான் நான் அங்கு இருந்தேன். அதுதான் என்னைப் பிரிய வைத் தது. பின்பு அம்மா வுடன் தான் இருந்தேன். எங்கள் வீடும் அம்மா இருந்த வீடும் ஒரு வேலிதான். குயிலன் வருவது இல்லை. அம்மா போய் வருவார். நானும் களவாக இரவில் போய் அவனைப் பார்ப்பேன். சில வேளை அவன் சாப்பிடும் பொழுது கண்டிருக் கிறேன். தனக்குப் போட்டு விட்டு இன்னும் ஒரு கோப்பையில் சாப்பாட்டைப் போட்டுவிட்டுப் பார்த்துப் பார்த்துச் சாப்பிடுவான். பார்க்க அழுகைதான் வரும். உள்ளுக்குள் போவம் என நினைப்பன், ஆனால் மனம் விடவில்லை. பின்னர் அவனுக்கு வேறு இடத்தில் வேலை கிடைத்தபடியால் அங்கு வருவது இல்லை.

பின்பு எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவனையே மாதிரித்தான் அவளும் இருந்தாள். அவளும் வளர்ந்து பாடசாலைக்குச் செல்ல வெளிக்கிட்டாள். ஆனால் அவனை மட்டும் காண்பது இல்லை. படம் மட்டும் இருந்தது. பிள்ளைக் குப் பொய்ச் சொன் னேன், அப்பா வெளிநாட்டுக்குப் போய் விட்டார். வருவார் என்று சொல்லிச் சமாளித்தேன். அப்படியிருக்கும் பொழுது என் அம்மாவும் வருத்தம் வந்து இறந்துவிட்டார். எனக்கு எண்டு இருந்த ஒரேயொரு உறவு அம்மாதான். அவரும் என்னைவிட்டுப் பிரிந்து விட்டார். என் அம்மாவின் ஆசை நாம் சேர்ந்து வாழ்வதுதான். ஆனால் நான் தானே பிரச்சினை. அப்படியிருந்தும் அம்மா இறந்தது கேட்டு குயிலன் உடனே வந்திருந்தான். ஆனால் உள்ளுக்குள் வரவில்லை. காசு கொடுத்து விட்டிருந்தான். அவன் வழமையாகக் காசு கொடுத்துவிடுவார், நானும் வாங்குவேன். ஏன் தெரியுமா? என்னில தானே பிழை என்று எனக்கு விளங்கியது. ஆனாலும் அவனுடன் கதைக்க என் மனம் விடமாட்டன் என்று விட்டது. இப்படியே நாட்கள் கழிந்தன. இதற்குள் இடப்பெயர்வும் - இல்லை இரத்தப் பெருக்கும் வந்தது. நடக்கத் தொடங்கினோம். மாத்தளன் வரை நடந்தோம். ஒரு தறப்பாளில் அமைக்கப்பட்ட கூடாரங்கள்தான் இருந்தன. ஒரு நாள் ஷெல்லடி கடுமையாக இருந்தது. ரவைகளும் சரமாரியாக வந்துகொண்டிருந்தன. எமது தரப்பினருக்குக் கிட்ட ஒரு மூடுபதுங்கு குழியிருந்தது. றோட்டால் போவபர்கள் கூட அதற்குள் தான் வந்து புகுந்து கொள்வார்கள். நாமும் அன்று அதற்குள் போய்ப் புகுந்தோம். அதற்குள் நிறைய ஆட்கள் இருந்தார்கள். ஒரே இருட்டாக இருந்தது. வெளிச்சம் இல்லை. ஒரு சின்னப் பிள்ளை அழுதுகொண்டிருந் தது. அப்பொழுது ஒருவர் மெழுகுதிரியைக் கொளுத்தினார்.



**க. தமிழ்மொழியன்**

(தொடரும்...)

---

# மோதலை காதல் ஆக்குவது எப்படி?



திருமணத்துக்கு பின்னர் ஜோடிகளுக்குள் இணக்குகளும், பிணக்குகளும் ஏற்படுவது சகஜம்தான் என்றாலும், அது முற்றிவிடாமல் இருக்க வேண்டும். அப்படி இருவருக்குள்ளும் ஏற்படும் மோதலை காதலாக்குவது எப்படி? என்பதை இங்கே பார்ப்போம்,

✱ இருவரும் தங்களுக்குள் இருக்கும் அன்பை வெளிப்படையாக, அடிக்கடி வெளிக்காட்ட வேண்டும்.

✱ இருவருக்குள் யார் பெரியவர் என்ற நினைப்போ.. அதற்குரிய வார்த்தையோ பரிமாறிக் கொள்ளவே கூடாது.

✱ இருவரும் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பாசத்தை... காதலை பகிர்ந்து கொண்டால் நல்லது.

✱ வேலையிலோ அல்லது தொழிலிலோ எவ்வளவு தான் பரபரப்பாக இருந்தாலும், இருவரும் தனிமையில் சந்தித்துக் கொள்ளும், பேசிக் கொள்ளும் நேரத்தை ஒதுக்குங்கள்.

✱ இருவரின் மனதுக்குள்ளும் ஏற்படும் சாதாரண ஈகோ... இறுதியில் பிரிவில் வந்து நிற்கும் என்பதை மறந்து விடாதீர்கள். இதனால் குடும்பஉறவும் பாதிக்கப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

✱ கணவனை மனைவியும், மனைவியை கணவனும் முழுமையாக நம்ப வேண்டும். இல்லாவிட்டால் சந்தேகப் பேய் உங்களை பிரித்துவிடும்.

✱ தெரியாமல் செய்யும் சின்ன சின்ன குற்றங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதே நல்லது. அவற்றை பெரிதாக நினைத்து பேச ஆரம்பித்தால் அதுவே பரச்சினையாகி விடும்.

✱ தெரிந்தோ... தெரியாமலோ தவறு செய்தால்... அதை அன்போடு திருத்தப் பாருங்கள். அதற்காக எந்த கடும் சொற்களையும் பயன்படுத்தி விடாதீர்கள்.

✱ எந்தப் பிரச்சினை வந்தாலும், எடுத்தெறிஞ்சு பேசி விடவேண்டாம். ஒருவர் மற்றவரின் குடும்பத்தைப் பற்றி தரக்குறைவாக பேசக்கூடாது.

✱ நீங்கள் ஏதேனும் தவறு செய்து விட்டால்... ஈகோ பார்க்காமல் உங்கள் துணையிடம் மன்னிப்புக் கேளுங்கள். நீங்கள் கேட்கும் மன்னிப்பே உங்களை அவர்களுடைய மனதுக்குள் பூஜிக்க வைத்துவிடும்.

✱ எப்போதும்... எங்கேயும்... எதற்காகவும் எதையும் மறைத்து பேச வேண்டாம். மற்றவர்களிடம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. உங்கள் ஜோடியிடம் திறந்த மனதுடன் பேசுங்கள்.

✱ வீட்டில் நடக்கும் நிகழ்ச்சி மற்றும் வேறு எதற்காவது உங்களுக்குள் வாக்கு வாதம் ஏற்பட்டால், ''நான் சொல்வதுதான் சரி'' என்று வாதாட வேண்டாம். இதனால் வார்த்தைகள் தடித்துவிடும்.

✱ தாம்பத்தியத்தின் போது உங்களிடம் இருக்கும் செக்ஸ் குறைபாடுகளை மனம் திறந்து சொல்லுங்கள். இதனால் பரஸ்பரம் இருவருக்குள்ளும் ஆறுதல் கிடைக்கும். உங்களுக்காக அவர்கள் விட்டுக் கொடுப்பார்கள்.

✱ இரண்டு குடும்பங்களைப் பற்றி தரக்குறைவாகவோ... அல்லது மூன்றும் மனிதர்கள் முன்பாகவோ எப்போதும் எதுவும் பேச வேண்டாம்.

✱ மற்றவர்கள் முன்னிலையில் உங்களுடைய துணையைப் பற்றி எந்தக் குறையையும் வெளிப்படுத்த வேண்டாம்.



✱ வீட்டில் எதாவது பிரச்சினை ஏற்பட்டால் அடுத்தவர் மீது பழி போடாமல் தீர்வுக்கான வழிகளை இருவரும் சேர்ந்தே தேடுங்கள்.

# அன்பு வழி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

முரளியின் அப்பா அவனிடம் சொன்னபடி சீக்கிரமே இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டார். மறுநாள் சித்தி பத்மா முரளியின் வீட்டுக்கு வந்துவிட்டாள். வந்த புதிதில் பத்மா முரளியிடம் அன்பாகத்தான் இருந்தாள். முரளியும் சந்தோஷமாகப் பள்ளிக்கூடம் போய்வந்தான். அவன் அப்பாவும் ஆபீஸுக்கு சௌகரியமாகப் போய்க்கொண்டிருந்தார்.

பக்கத்து வீட்டு மாமி கொஞ்சம் கொஞ்சமாகப் பத்மா மனதை மாற்றிக்கொண்டே வந்தாள். அதனால், இப்போதெல்லாம் அவளுக்கு முரளியைக் கண்டாலே பிடிப்பதில்லை. எதற்கெடுத்தாலும் அவன் மீது எரிந்து விழுந்தாள்.

தொட்டதற்கெல்லாம் அவன் மீது குற்றம் கூறினாள். கொடுமை செய்தாள். முரளி எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு வந்தான். அப்பாவின் எதிரில் சந்தோஷமாக இருப்பது போலவே இருந்து வந்தான். அவன் என்ன செய்வான்? அவனால்தானே அவனுடைய அப்பா இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொண்டார்? அதனால் சித்தி முரளியை என்ன கஷ்டப்படுத்தியும் கூட முரளி அவைகளைத் தன் அப்பாவுக்குத் தெரிந்துவிடாதபடி பார்த்துக் கொண்டான். இதனால், கொஞ்சங் கூடப் பயமில்லாமல் அவள் முரளியைக் கொடுமைப்படுத்தி வந்தாள்.

முரளி எவ்வளவுதான் ஜாக்கிரதையாக இருந்தும் கூடப் பத்மாவின் நடத்தை எப்படியோ அவனுடைய அப்பாவுக்குத் தெரிந்துவிட்டது. அவர் பத்மாவை மிகவும் கோபித்துக் கொண்டார். கண்டித்தார். ஒன்றும் பயனில்லை. பத்மா அவர் இல்லாதபோது முரளியை வட்டியும் முதலுமாகக் கொடுமைப் படுத்தினாள்

ஒரு நாள் முரளியின் அப்பா தம் முதலாளியின் வீட்டுக்காகப் பெரியதும், விலை உயர்ந்ததுமான முகம் பார்க்கும் நிலைக் கண்ணாடி ஒன்றை வாங்கி வந்திருந்தார். அதைக் காகிதம் போட்டுச் சுற்றிக் கட்டி, மேசையின் மேல் சாய்த்து வைத்திருந்தார், மறுநாள் தம் முதலாளியின் வீட்டுக்கு எடுத்துப் போவதற்காக.

முரளியின் சித்தி வீட்டைப் பெருக்கிக் கொண்டே வந்தாள். அறையின் ஓர் ஓரத்தில் இருந்த முரளியின் சிறிய மேசைப் பெட்டியை எடுத்துத் 'தொப்'பென்று மேசையின் மீது வைத்திருந்த கண்ணாடியின் மேல்-அது கண்ணாடி என்பதைக் கவனிக்காமல்-வைத்துவிட்டு, விறுவிறுவென்று பெருக்கிக் கொண்டே போய்விட்டாள்.

மறுநாள் காலையில் முரளியின் அப்பா, தம் முதலாளியின் வீட்டுக்குப் போகவேண்டியவராக இருந்தார். கண்ணாடியையும் எடுத்துப் போகலாம் என்று எண்ணியவராய் மேசையின் அருகில் போனார்; அங்கே கண்ணாடியின் மேல் வைத்திருந்த மேசைப் பெட்டியைப் பார்த்ததும் அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. கோபம் வந்தது.

"ஏய்.. பத்மா!" என்று கூச்சல் போட்டார். சமையலறையிலிருந்து பத்மா ஓடி வந்தாள். முரளியும் அங்கே ஓடினான்.

"யார் கண்ணாடியின் மேல் இந்த மேசைப் பெட்டியை வைத்தது?" என்று கோபமாகக் கேட்டார் அப்பா.

பத்மா வாயைத் திறக்கவே இல்லை. முரளியும் பேசாமலிருந்தான். அவன் அப்பா மேசைப் பெட்டியை எடுத்துக் கீழே வைத்துவிட்டுக் கண்ணாடியைத் தூக்கினார். மெள்ள அதை எடுத்து அதன் மேல் சுற்றியிருந்த காகிதத்தைப் பிரித்துப் பார்த்தார்.

அவருக்கு வந்த கோபத்துக்கு ஓர் அளவேயில்லை. ஆமாம், அவர் என்ன செய்வார்? அந்த விலை உயர்ந்த கண்ணாடி நர்ன் கைந்து துண்டுகளாகப் பிளந்து கிடந்தது. அதை எப்படி முதலாளியின் வீட்டுக்கு எடுத்துப்போக முடியும் முதலாளி பெரிய முன்கோபி.

"யாருடைய வேலை இது?" பத்மாவைப் பார்த்துச் சீறினார் முரளியின் அப்பா.



பத்மா மிரளமிரள விழித்துக் கொண்டு நின்றாள். அவள் உடல் பயத்தால் வெடவெடவென்று நடுங்கிக்கொண்டிருந்தது. முரளிக்குத் தெரிந்துவிட்டது, அவள்தான் மேசைப் பெட்டியை எடுத்து வைத்திருக்க வேண்டுமென்று. நன்றாக அப்பாவிடம் சித்தி திட்டும் அடியும் வாங்கட்டும் என்று தோன்றியது அவனுக்கு.

அநியாயமாக எனக்கு இப்படி ஒரு செலவு வைத்து விட்டு மரம் மாதிரி நிற்கிறாயே! உனக்கு இந்தக் குடும்பத்தில் கொஞ்சம் கூடப் பொறுப்புக் கிடையாதா?" என்று கோபமாகக் கேட்ட வண்ணம் முரளியின் சித்தியை அடிக்கப் போனார் அவன் அப்பா. நடுநடுங்கினாள் பத்மா. மறு கணம்-

"அப்பா!" என்று கூப்பிட்டான் முரளி. ஓங்கிய கை ஓங்கியபடி இருக்க அவன் அப்பா முரளி பக்கம் திரும்பினார்.

"என்னடா?" என்றார்

"வேலைக்காரி அறையைக் கழுவிவிட வந்தாள். நான் தான் அவசரத்தில் கவனிக்காமல் மேசைப் பெட்டியைத் தூக்கிக் கண்ணாடியின் மேல் வைத்துவிட்டேன்..." என்று கூறினான் முரளி.

"ஏன் வைத்தாய்? பார்த்து வைக்க வேண்டாம்? இனி அப்படிச் செய்வாயா? செய்வாயா..?" என்று ஆத்திரம் பொங்கக் கேட்ட முரளியின் அப்பா, அவன் முதுகில் 'பளார், பளார்' என்று அறைந்தார். முரளி புழுவாகத் துடித்தான்.

-கே.ஜயலட்சுமி-

பிறகு அந்த உடைந்த கண்ணாடியை எடுத்துக் கொண்டு வெளியே போனார். முரளி அழுது கொண்டே உட்கார்ந்திருந்தான்.

"முரளி..." என்று ஓடிவந்து அணைத்துக்கொண்டாள் பத்மா.

"முரளி... நீ ஏன், நான் செய்த தப்பை நீ செய்ததாகச் சொல்லி இப்படி அடிவாங்கினாய்...? என்று கேட்டாள் அன்பு ததும்ப.

"இல்லாவிட்டால் அப்பா உன்னை அடிப்பாரே! எதிலுமே அன்பு வழி தான் நல்லது என்று காந்தித் தாத்தா சொல்லியிருக்கிறாராமே... அப்படி நடந்தாலாவது உனக்கு என் மேலே ஆசை, அன்பு உண்டாகும் என்று பார்த்தேன்.." என்று கூறி விசும்பினான் முரளி.

"என் தங்கமே! .. என்னை மன்னித்துவிடடா கண்ணு. இனிமேல் உன்னை நான் கொடுமைப்படுத்தவே மாட்டேன். ஆசையாய் இருப்பேன். அன்பாய் இருப்பேன்!" என்று அவனை அன்பு மேலிட அணைத்து உச்சிமோந்தாள் சித்தி.

"இனி என்னை அப்பா அடித்தால் பரவாயில்லை சித்தி. அணைத்து ஆறுதல் சொல்ல நீ இருக்கிறாயே" என்றான் முரளி.

நன்றி : கண்ணன்

# 1 ஹாத்திம்தாய்

புத்தாக்கம் : கே. கான்







## மனதை மயக்கும் நயாகரா



அமெரிக்காவின் நயாகரா நீர்வீழ்ச்சி உலகின் எட்டாவது அதிசயமாகப் புகழப்படுகிறது.

உலகிலேயே மிக அதிகமான உயரத்திலிருந்து விழும் நீர்வீழ்ச்சியும் இதுதான். நியூயோர்க் நகரிலிருந்து சுமார் 450 மைல் தூரத்தில் நயாகரா நதியில் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது.

நயாகரா நீர்வீழ்ச்சியை இரவிலும் பகலிலும் பார்த்து ரசிக்கலாம்.

சிவப்பு, பச்சை நிற விளக்குகளாலான மின் ஒளி வசதி அங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நீர்வீழ்ச்சி அமெரிக்கா-கனடா எல்லையில் அமைந்துள்ளது. இதைக் கனடாவிலிருந்தும் கண்டு ரசிக்கலாம்.

அமெரிக்கப் பகுதியில் 55 மீட்டர் உயரத்தில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சி 330 மீட்டர் நீளமான கரையைக் கொண்டுள்ளது.

நயாகரா நீர்வீழ்ச்சிக்கு இரண்டு பெயர்கள் உள்ளன. அமெரிக்கப் பகுதியில் இருப்பதை 'அமெரிக்கன் போல்' என்றும், கனேடியப் பகுதியில் இருப்பதை 'ஹோஸ் ஷூ போல்' என்றும் குறிப்பிடுவர். நீர்வீழ்ச்சி குதிரைக்குளம்பு வடிவத்தில் அமைந்திருப்பதாலேயே இந்தப் பெயர் வந்தது. 'ஹோஸ் ஷூ போல்' 52 மீட்டர் உயரத்தையும், 750 மீட்டர் நீளமான கரையையும் கொண்டுள்ளது.

இந்த நீர்வீழ்ச்சியின் உயரம் 170 அடி போலவே இதன் ஆழமும் 170 அடி என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஒரு நொடிக்கு 20 ஆயிரம் கன அடி தண்ணீர் நீர்வீழ்ச்சியின் உச்சியில் பாய்ந்துகொண்டிருந்தது. ஆனால், இதில் பாதியளவு தண்ணீரை அமெரிக்காவும் கனடாவும் மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்துகின்றன. நீர் மின்சாரம் முதன்முதலில் இங்குதான் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த நீர்வீழ்ச்சி 7 மைல் தூரத்துக்கு நீண்டிருந்ததாம். ஆனால், காலப்போக்கில் இதன் கரை ஆண்டு ஒன்றுக்கு 6 அடி வீதம் குறுகிக் கொண்டே வருகிறது.

அமெரிக்காவில் இருந்து நயாகராவின் அழகைக் கண்டுகளிப்பதற்காக ஒரு பார்வை மாடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து படகு மூலம் நயாகரா நதிக்குச் செல்லலாம்.

# மந்திரத்தீவு மந்தாகினி


**-இராமசாமி ரமேஷ்-**

குறிஞ்சித்தீவு அமைதியும் அழகுமாய், காண்போரைக் கவரும் பவள நாட்டுக் கிராமம். நெடிதுயர்ந்த மருத மரங்களும், பூத்துச் சொரியும் கொன்றை மரங்களுமாகக் குறிஞ்சித்தீவின் அழகே தனிதான்.

அவ்வூர் மக்களின் தேவைகள் கருதி, பவளநாட்டு மன்னர் பாடசாலை, கோவில், பள்ளிவாசல் என்பனவற்றைக் கட்டிக் கொடுத்திருந்தார்.

இந்தத் தீவில் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும், இந்துக்களும் ஒற்றுமையாக வசிக்கிறார்கள்.

குறிச்சித் தீவிலிருந்து சில கடல்மைல் தொலைவிலே, பயங்கரமான மந்திரத் தீவென அழைக்கப்படும் தீவு இருந்தது. அத்தீவில் யார் இருக்கிறார்கள் என்றோ அல்லது என்ன நடக்கிறது என்றோ இதுவரை யாருக்குமே



தெரியவில்லை. ஏனெனில், அந்தத் தீவை நெருங்கும் படகுகள் கவிழ்ந்து விடுவதைக் கண்டு மக்கள் அஞ்சினர்.

அன்று ஒருநாள் -

மாலை நேர வகுப்புக்குச் சென்ற ஐந்து மாணவர்களை எங்குமே காணவில்லை. அவர்கள் நேரத்துக்கே போய்விட்டதாக ஒன்பதாம் ஆண்டு முஸ்தபா வாத்தியார் சொல்ல, குறிஞ்சித்தீவே கலங்கிப் போய்விட்டது.

அன்றைய பொழுது இரவை நெருங்கிக்கொண்டிருந்தது.

அப்போது, ஆண்டு ஒன்பது மாணவர்கள் ஒன்று கூடினார்கள். மாணவத் தலைவன் ஜேம்ஸ் பேசத் தொடங்கினான்: ''நண்பர்களே! நம்ம நண்பர்கள் ஐந்து பேரை நாம் இழந்துவிட்டோம்... அதனால் நாம் ஏதாவது செய்து அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்... அப்படி முடியாவிட்டால்... அவர்கள் எப்படிக் காணாமல் போனார்கள் என்றாவது கண்டுபிடிக்க வேண்டும்...'' என்று அவன் சொல்ல, அதுவரை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் ஆளுக்கு ஒரு காரணம் சொல்லத் தொடங்கினார்கள். அதற்கு ஜேம்ஸ், ''வேண்டாம் நண்பர்களே! நீங்கள் இப்போது வீட்டுக்குப் போங்கள்... நான் நாளைக் காலை என்ன செய்வதென்று சொல்கிறேன். கோபி, பாத்திமா, அன்ரனி, மேரி நில்லுங்கள் என்றான். பெயர் சொன்ன நால்வரும் அவ்விடத்திலே நிற்க, ஏனைய மாணவர்கள் கலைந்து போகத் தொடங்கினார்கள். ஜேம்ஸ் நால்வரையும் அருகில் வரும்படி அழைத்தான்.

''இதோ பாருங்கள்... எங்கள் வீட்டில் உள்ள பெரியவர்கள் பேசியது என் காதில் விழுந்தது... என்ன தெரியுமா? நம்ம நண்பர்களை, மந்திரத்தீவு மந்தாகினி என்கிற மந்திரக்காரி கடத்தியிருக்கலாம் என்று பேசிக் கொண்டார்கள். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் நண்பர்களே?'' ஜேம்ஸ் கேட்டான்.

இதைக் கேட்டதும், நால்வரும் திகைத்துத்தான் போனார்கள். பாத்திமா சொன்னாள்:

''ஜேம்ஸ்! நீ சொல்வது சிலவேளை உண்மையாக இருக்கலாம். நமது பக்கத்துத் தீவான... மருதத்தீவிலும் போனவாரம் இரண்டு பையன்களைக் காணவில்லையாம்... அதனால, இது மந்தாகினியின் வேலையாக இருக்கலாம்... இல்லையா ஜேம்ஸ்?''

''ஆமாம் பாத்திமா... இது மந்தாகினியாகத்தானிருக்கும்... அவள் மந்திரக்காரியாமே! நமது நண்பர்களை அவள்தான் கடத்தியிருப்பாள்...'' என கோபி சொல்ல, ''டேய் கோபி, மந்திரமும் தந்திரமும் இல்லையடா! அவள் செய்யும் அரக்கத்தனம்தான் இதெல்லாம்...'' அன்ரனி சத்தமாய்ப் பேசினான்.

''ஏய்! இப்ப வாதித்துக்கொண்டிருக்க நேரமில்லை! பெரும்பாலும் இது மந்தாகினியின் வேலைதான்!'' மேரியும் தன் பங்குக்குக் கூறினாள்.

ஜேம்ஸ் அனைவரையும் அழைத்து காதோரம் மெதுவாக தன் திட்டப்படி செயற்படவேண்டிய காரியங்களைத் தெளிவாகக் கூறி முடித்தான். அத்தோடு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருள் கொண்டு வரும்படியும் சொன்னான். ''நண்பர்களே! இன்று இரவு ஒன்பது மணிக்கு... உடுத்தொகுதியை அவதானிக்க கடற்கரைக்குச் செல்கிறோம் என்று சொல்லிவிட்டு வாருங்கள். கோபியும் நானும் படகோடு ஆயத்தமாய் கடற்கரையில் நிற்போம்...'' என்றான் அன்ரனி.

இருள் கவிந்து, நேரத்தை விழுங்கிக் கொண்டிருந்தது.

அப்போது கடற்கரையில் ஐந்து கரிய உருவங்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டன. ''கடைசியாக உங்கள் செயற்பாடு வேகமாகவும், அதேநேரம் விவேகமாகவும் இருக்க வேண்டும்... ஏனென்றால், விடியக்காலையில் நீங்கள் இங்கே இருந்தே தீரவேண்டும். அன்ரனி கவனம்! படகு உன் பொறுப்பு!'' ஜேம்ஸ் தெளிவாகக் கூறி முடித்தான்.

மறுகணம் படகைக் கடலினுள் தள்ளினார்கள். அன்ரனியும் கோபியும் துடுப்பு வலிக்க, மேரியும் பாத்திமாவும் நடுவிலே அமர்ந்து கொண்டார்கள்.

காற்றும் கடலும் அமைதி காத்தன. வானிலே விண்மீன்கள் ஜொலித்தன. இவர்களின் முயற்சியை வாழ்த்துவதைப் போன்று, அவை கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

இவர்களின் படகு, சிறிது சிறிதாக மந்திரத்தீவை நெருங்கிக்கொண்டிருந்தது. அப்போதுதான் அன்ரனிக்குப் பொறி தட்டியது. காரணம், தீவை அண்மித்த கடல் பகுதியில் படகை மந்திரசக்தி கவிழ்க்குமாமே! சிந்தனை ஓடி மறைய, ''கோபி! அந்த மிதவையை எடுத்து நீரிலே போடு...'' கோபி விரைந்து செயற்பட்டான். மிதவை நீரில் வீழ்ந்தவுடன் அமிழ்ந்து போனது. அன்ரனி வேகமாய்ப் படகை இடது பக்கம் திருப்பினான். ஏனெனில், அந்த இடத்தில் சுழி இருந்தது. இதன் காரணமாகவே, மிதவை அமிழ்ந்தது. படகுகள் கவிழக் காரணமும் இந்தச் சுழிதான். இப்போது படகு சுழியைத் தாண்டி தீவுக் கரையை அண்மித்துக்கொண்டிருந்தது.

''யாரும் சத்தமாய்ப் பேசக்கூடாது. இது அந்நிய பகுதி... சிலவேளை நம் உயிருக்கே ஆபத்தாய் முடியலாம்... எனவே, மிகக் கவனம்...'' பாத்திமா அனைவருக்கும் எச்சரிக்கை விடுத்தாள்.

அப்போது, படகு நிலத்தைத் தொட்டு விட்டதால் போக மறுத்தது. படகை இழுத்து, கரையில் நின்ற தாழை மர அடியோடு கட்டினான் அன்ரனி. கோபியும் மேரியுமாக படகை, அருகில் நின்ற செடிகளை ஒடித்து மூடினார்கள். பாத்திமா சுற்றும் முற்றும் அவதானித்துக் கொண்டிருந்தாள்.

''சரிசரி... வாருங்கள் போகலாம்.'' அன்ரனியின் வார்த்தைகளால் வேகமானார்கள். நீண்டு வளர்ந்திருந்த பலவகை மரங்களும் பற்றைக் காடுகளுமாகக் காணப்பட்டது அந்தத் தீவு. அச்சமில்லாப் பிள்ளைகள் நால்வரும் வரப்போகும் ஆபத்தையும் பொருட்படுத்தாது காட்டின் இருளில் மறைந்து போனார்கள்.

(தொடரும்...)

## இளஞ்சுடர்

தயாரிப்பு: தினா

### உயிர் காக்கும் நீர்

தினமும் உடல் ஆரோக்கியத்துக்கு 2½ முதல் 3 லீட்டர்வரை தண்ணீர் அருந்த வேண்டும். இதனால், உடல் நிறை குறையும். புற்றுநோய் உட்பட பல நோய்களை எளிதாகக் கட்டுப்படுத்த முடியும். நோய்களின் கடும் சோதனைகளைச் சந்திக்காமலேயே குணமாகிவிடலாம். இந்தத் தகவலைத் தருபவர் டாக்டர் பாட்மன் என்பவர்.

உங்கள் உடலுறுப்புகள் தண்ணீருக்காக அழுகின்றன என்று இவர் ஒரு நூல் எழுதினார். நெஞ்செரிச்சல், தலைவலி, மூட்டுவலி, முதுகுவலி, உடல் சோர்வு உண்மையில் நோய்கள் அல்ல; உடலில் நீர்க்கூறு அகன்றுவிட்டதால் ஏற்படும் பிரச்சினைகளே என இவர் எழுதுகிறார்.

இத்தகைய நோயாளிகள் பலருக்கு மோசமாக இருந்தாலொழிய நன்கு தண்ணீர் அருந்துங்கள். நீங்கள் நோயாளிகள் அல்லர். உங்களுக்கு மருந்து எதுவும் வேண்டாம் என்று திருப்பி அனுப்பி விடுகிறார். அவர்களும் அதிசயமாகக் குணமாகி விடுகின்றனர்.

நான்கு மாதங்கள் சிறைக் கைதிகளுக்கு மருந்து எதுவும் கொடுக்காமலே தண்ணீரையே கூடுதலாக அருந்தச் சொல்லி வயிற்றுப் புண், ஆஸ்துமா, ஒவ்வாமை, இரத்தக் கொதிப்பு, கொழுப்பு, கொலஸ்ட்ரோல் முதலிய பிரச்சினைகள் உள்ளவர்களை இவர் குணப்படுத்தி விட்டார்.

உடலுக்கான முதல் சிகிச்சையும் இறுதிச் சிகிச்சையும் நீர் (குளுக்கோஸ்) ஏற்றுவதாகும்.

உடலில் தண்ணீர்க்கூறு குறைந்தால் தலைவலி வர வாய்ப்பு உண்டு. அடிக்கடி தலைவலி வருகிறது என்பவர்கள் குறைந்தளவில் தண்ணீர் குடிப்பவர்களாகவே உள்ளனர். உடலில் சேர்ந்துள்ள நச்சுப் பொருள்கள் வெளியேறவும் தண்ணீர் தேவை. தினசரி 1½ லீட்டர் சிறுநீராவது வெளியேறவேண்டும். அதற்கு ஏற்ப தண்ணீர் அருந்துங்கள். ✱

### ஒரு கதைதிர்

1) தினந்தோறும் குடிக்காமல் கடிக்கும் பல்லழகன். அவனோடு பழகப்பழக அனைவருக்கும் தலைக்கனம் அடங்கும்.
2) நான் சிரித்தால் அவன் சிரிப்பான். நான் அழுதால் அவன் அழுவான். நாள்தோறும் அவன் உறவு எனக்கு இனிக்கும்.
3) பாம்புக்கு பகை ஆவான். மனிதரோ பிள்ளை என்றழைத்து அவனோடு பழகுவது உண்டு.
4) கொடும் வெயிலானாலும், கொட்டும் மழையானாலும் ஊர்தோறும் செய்திகளைச் சேகரித்து சேவை செய்யும் சிவந்த நிற சிப்பாய் அவன்.
5) நாள்தோறும் நீண்ட மூச்சு விட்டுப் பயணிக்கும் நெடுந்தூரப் பயணி. பயணத்தில் அடுத்தடுத்து நின்று அங்கங்கு ஓய்வெடுப்பான். அனைவருக்கும் தோழன் ஆவான்.
6) முரட்டுத் தோலில் முள் உடம்பு பெற்ற என்னை வெட்டிப் பிளந்தெடுத்தால், அனைவருக்கும் விருந்துதான்.
7) ஊர்பேர் தெரியாதவர்களுக்கு வீட்டுக்குள் வரவேற்பு. ஊரெல்லாம் சுமந்து பேர் சொல்ல வைக்கும் எனக்கோ வீட்டுக்குள் வர மறுப்பு.
8) கைப்பிடியில் அடங்கி காதோடு உறவாடும். உன்னோடு, என்னோடு உரையாடிக் களிக்கும் உறவுகளைப் பெருக்கும் உன்னத பேச்சாளி.

1) சீப்பு 2) கண்ணாடி 3) கீரிப்பிள்ளை 4) தபால்பெட்டி 5) புகைவண்டி 6) பலாப்பழம் 7) மிதியடி 8) செல்போன்.

### தகவல் துளி



உலகிலேயே முதன்முதலில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம் தட்சசீலப் பல்கலைக்கழகம். இது கி.மு. 700 இல் தொடங்கப்பட்டது.

### எனது அம்மா



பத்து மாதம் சுமந்து பெற்று
பாலை ஊட்டி வளர்த்து
சித்தம் குளிர மடியில் வைத்து
முத்தம் தந்த அம்மா

தொட்டி லுள்ளே தூங்கும் போதும்
கிட்ட வந்து நின்று
மட்டி லாத மகிழ்ச்சி கொண்டு
எட்டிப் பார்த்த அம்மா

தத்தி நடந்து செல்லும் போது
தயவு மிகக் கொண்டு
உத்தி பல கற்றுத் தந்து
உதவி செய்த அம்மா

உலா வரும் நிலா வினை
உவகை யுடன் காட்டி
குலா வியே உணவை யூட்டி
குதூ களித்த அம்மா.

-உ.நிசார்-

### வர்ணம் தீட்டுங்கள்





# முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும் 7

**முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.**

எல்லாவற்றையும் இழந்த நிலையில் எங்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வும் எவ்வளவு இருட்டாக இருக்கிறதோ அதுபோல் தான் எங்கள் கூடாரங்களும் இரவு நேரத்தில் வெளிச்சமின்றி இருட்டாக இருக்கின்றன.

முகாமுக்குக் குறுக்காகவும் முகாமைச் சுற்றியுள்ள வீதிகளிலும் மின்குமிழ்கள் எரியும். அந்த வெளிச்சத்தை இருளான கூடாரத்தில் இருந்தவாறு பார்த்து, 'நிலாச் சோறு' ஊட்டுவது போல் இரவு உணவை உட்கொள்ளுகிறோம். மெழுகுவர்த்திகள், குப்பி விளக்குகளை கூடாரத்துக்குள் பயன்படுத்துவது ஆபத்தானது என்பதனால் அவற்றை எவரும் பாவிப்பதில்லை. அரிக்கன் லாம்புக்குத் தேவையான எரிபொருள் இல்லை. சில இடங்களில் கிடைக்கும். ஆனால் அவற்றின் விலையோ ஒரு லீற்றர் 200 க்கு மேல். இவ்வளவு பணம் கொடுத்து எரிபொருள் வாங்கி விளக்கு எரிக்கும் வசதி எல்லோருக்கும் இல்லை. சிலரது கொட்டகைகள் மட்டும் வெளிச்சமாக இருக்கும். மாணவர்கள் இரவில் கல்வி கற்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். சில மாணவர்கள் மின் குமிழ் இருக்கும் இடங்களைத் தேடிச் சென்று கூட்டம் கூட்டமாக இருந்து படிக்கிறார்கள். பலதரப்பட்ட மாணவர்கள் ஒன்று கூடுவதால் அது ஒரு நல்ல சாதகமான கல்விச் சூழலைத் தோற்றுவிக்குமா என்று பெற்றோருக்கு ஐயம் ஏற்பட்டது. இருந்தும் வேறு வழியின்றி இன்றுவரை மாணவர்களது கல்வி தெருவெளிச்சத்தை நம்பித்தான் இருக்கிறது.

### உறக்கமும் ஓய்வும்

பகலில் வெக்கை. கூடாரத்தில் வசிப்பதென்பது பாண் போரணைக்குள் இருப்பதற்கு ஒப்பானது. வேறு வழியின்றி அந்தச் சிறிய கூடாரத்துக்குள்ளேயே பத்துப் பேரும் பகல் பொழுதைக் கழிக்கின்றோம். இரவுத் தூக்கம் ஒருவரோடொருவர் ஒட்டியபடிதான். வயோதிபர்கள், சிறுவர்கள், கைக் குழந்தைகள், கர்பிணித் தாய்மார், நோயாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களை அடக்குகிறது கூடாரம். பெரும் பாலானோர்கள் முற்றத்தில் தான் இரவுப் பொழுதைக் கழிக்கிறார்கள்.

கணவன் மனைவி வேறு வேறு இடங்களில் உறங்குவதால் பாதிக்கப்படும் உறவு நிலை, பாலியல் பிரச்சினைகள் தொடர்பாக பலவாறான ஆராய்ச்சிகள் செய்து அவர்களது உறவை மேம்படுத்தி குடும்ப ஒற்றுமையைப் பேணுதல் தொடர்பில் சமூக நலன் விரும்பிகள், குடும்ப நலக்காப்பகங்கள் என உலகலாவிய ரீதியில் செயற்படுகின்ற இந்த வேளையில் இங்கு கணவன் - மனைவியர் பிரிக்கப்பட்ட நிலையில் வாழ்வதை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. பலதரப்பட்ட சுமைகளை மனதில் சுமந்தவாறு வாழ்வதால் இது ஒரு பிரச்சினையாக அவர்கள் முன் தற்போது இல்லாதபோதும் இவ்வாறான ஒரு பிரிப்பு நிலை தொடர்ந்தால் அவர்களது வாழ்வு நிலை பாதிக்கும் என்பது திண்ணம்.

-டொமினிக்-

### அமைவிடம்

2 கி.மீற்றர் நீளமும் 1 கி.மீற்றர் அகலமும் கொண்டதாக மன்னார்-வவுனியா வீதிக்குச் சமாந்தரமாக பெரும் காட்டிடை அழித்து மேடு-பள்ளம் உடைய அந்தப் பிரதேசத்தில் கூடாரமிடப்பட்டு குடியமர்த்தப்பட்டிருக்கிறோம். இதில் 1000 தொடக்கம் 1500 வரையானவர்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் ஒரு கிராம அலுவலர் பிரிவாகப் பிரிவாக்கப்பட்டு பல கிராம அலுவலர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்ட நிலையில் ஒரு பெரிய முகாம் ஒரு பிரதான கச்சேரியை மையமாக வைத்து செயற்படுகிறது. இதற்கு இராணுவ அதிகாரிகளே பொறுப்பாக இருப்பதனால் சகல அறிவித்தல்களும் இராணுவ அதிகாரியை மேற்கோள்காட்டி விடப்படுவதை நாளாந்தம் அவதானிக்க முடிகிறது. இம் முகாமைச் சுற்றி முள்ளுக்கம்பி இடப்பட்டு அதனைச் சுற்றி ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் கடமையிலிருப்பர். குறிப்பிட்ட இந்த எல்லைகளுக்குள் தான் எங்களுடைய வாழ்க்கை.

இன்றைய நவீன உலகவாழ் மக்களுடன் ஒப்பிடுமிடத்து எமது வாழ்க்கை முறை நவீன காட்டுவாசிகள் போலிருக்கிறது.

எங்களிடம் நாய், பூனை உட்பட செல்லப்பிராணிகளான ஆடு, மாடு, கோழி இல்லை. வீடு இல்லை. பூப்பறித்து பூசை செய்ய சாமி படம், சிலை இல்லை, பூவுமில்லை. கட்டில் இல்லை. மெத்தை இல்லை. கணினி இல்லை. வாகனம் இல்லை. தொலைபேசியும் இல்லை. தொலைக்காட்சிப் பெட்டியும் இல்லை. ஏன் சொத்து என்று சொல்ல ஏதுமில்லை. ரயிலை அறியோம். இன்னும் எத்தனை எத்தனை இல்லாமலும், அறியாமலும் இருக்கிறோம்.

மரத்தின் கீழ் சமைக்கின்றோம். சூரிய ஒளி பார்த்து நேரம் கணிக்கிறோம். பரண் கட்டிப் படுக்கிறோம். நிலாச் சோறு உண்கிறோம். மிருக சத்தம் கேட்கிறோம். அச்சம் கொள்கிறோம். தடியில் தண்ணீர் காவுகிறோம். புதிய மனிதர்களைக் கண்டால் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறோம் என்ன தருவார்கள் என்று. நாலு பேர் முன் குளிக்கின்றோம். உடுப்பு மாற்றுகின்றோம். சுற்றியுள்ள காட்டின் மத்தியில் வாழ்கிறோம். வேட்டை மட்டும் ஆடவில்லை (அனுமதி இல்லை).


எனவே உங்கள் வாழ்வியலுடன் எங்கள் வாழ்வியலை ஒப்பிடும்போது நீங்களாகவே சொல்வீர்கள் நாங்கள் நவீன காட்டு வாசிகள் என்று. இவ்வாறுதான் எமது வாழ்வும் வாழ்கிற முகாமும் இருக்கிறது. சில முகாம்கள் ஒன்றோடொன்று வேலியால் மட்டுமே பிரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு முள் வேலியால் பிரிக்கப்பட்ட நிலையில்
ஆனந்தக்குமாரசாமி முகாம்
(வலயம் 1)
இராமநாதன் முகாம்
(வலயம் 2)
அருணாசலம் முகாம்
(வலயம் 3) அமைந்திருக்கின்றன.

ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமுக்கு உறவுகளைப் பார்த்து சுகநலன்களை விசாரிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இருந்தும் பலர் இராணுவத்தினருக்குத் தெரியாமல் வேலி பாய்ந்து பக்கத்து முகாம்களுக்கு நாளாந்தம் சென்று வந்தார்கள். காலப்போக்கில் இதுவும் முற்றாகத் தடைப்படுகிறது. மேலும் இன்னொரு முள்வேலி சமாந்தரமாக இடப்படுகிறது. எனவே இரண்டு முள்வேலிகளையும் அதில் காவல் நிற்கும் இராணுவத்தினரையும் தாண்டிப் போக முடியாத நிலையில் மக்கள் முயற்சிகளை மேற்கொள்ளும் போது இராணுவத்தினரால் தொடர்ச்சியாகத் தாக்கப்படுவதும், துப்பாக்கிச் சூட்டை இராணுவம் மேற்கொள்வதும் இடையிடையே நடைபெறும் சம்பவங்களாக இருக்கின்றன.

மற்றைய முகாமான கதிர்காம முகாம் இந்த முகாம்களிலிருந்து சில நூறு மீற்றர் தூரத்துக்கப்பாலும் பிரதான வீதிக்கு எதிர்ப்புறத்திலும் அமைந்துள்ளது. அடுத்த முகாம் வலயம் 4 - இந்த முகாம்களிலிருந்து ஆறு கி.மீற்றருக்கப்பாலும், வலயம் 5 முகாமானது முகாம் 4 இலிருந்து 500 மீற்றர் தூரத்திலுமாக காடுகளால் பிரிக்கப்பட்டிருந்ததனால் இந்த முகாம்களுக்கான தொடர்புகளை ஏற்படுத்த முடியாத நிலைமை. இவ்வாறு தான் வெவ்வேறு இடங்களில் பல முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப நாட்களின் தொடர்புகளையோ சந்திப்புக்களையோ மேற்கொள்ள முடியாத நிலைமை இருந்தபோதும் தற்போது கிராம அலுவலர் ஊடாக முகாமின் பொறுப்பதிகாரிக்கு விண்ணப்பம் செய்து அவர்களின் பரிசீலனையின் பின்னர் அவர்களால் குறிப்பிடப்படுகின்ற தினத்தில் அனுமதிக்கப்பட்ட சில முகாம்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவானோர் சென்று வர சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

## நவீன காட்டுவாசிகள் போன்ற வாழ்வும்; நம்மவர்களின் காட்டிக் கொடுப்புகளும்



### பாதுகாப்பு

எங்களோடு எங்களாக வேறு யாருமல்லர் அவர்கள்தான். அன்று தொடங்கிய காட்டிக் கொடுப்பு இன்றுவரை தொடர்கிறது. கூட இருந்து குழி பறித்தவன், நண்பனாயிருந்து துரோகியானவன், சில சொற்ப சலுகைகளுக்காக இனத்தைக் காட்டிக்கொடுத்தவன் இவர்களால்தான் எமது இனம் இவ்வளவு இழிநிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது. இங்கும் அவர்களது கழுகுக்கண்களின் பார்வை எம்மீது படுகிறது. அவர்கள் விரும்பியவர்கள் எல்லோரையும் காட்டிக்கொடுப்பர்: அவர்களும் வந்து பிடித்துக்கொண்டு போவர். நாளாந்தம் இடம் பெறும் சம்பவம். இதில் சிலர் திரும்பி வருவார்கள் சில ஆயிரங்களை இழந்து. இவ்வாறு பணத்துக்காகவும் ஒரு கூட்டம்.

(அவலங்கள் தொடரும்)

# மதுபானத்தை அளவோடு குடிப்பது என்றால் என்ன?

**கேள்வி:** ஆண், வயது 25. வார இறுதியில் கொஞ்சம் மதுபானம் உபயோகிப்பேன். அதுவும் அளவோடு தான் குடிப்பேன். இதனால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? ஏதாவது மருத்துவ பரிசோதனைகள் செய்து பார்க்கவேண்டுமா? அளவோடு குடிப்பதும் ஈரலைப் பாதிக்குமா?

**பதில்:** இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயங்களில் ஒன்று 'அளவோடு குடிப்பது' என்றால் என்ன என்பதே. மற்றது உங்கள் உடல் மதுபானத்தை எப்படி ஏற்றுக்கொள்கின்றது? அதே வேளையில் உங்கள் நாளாந்த வாழ்க்கை முறை (Life Style) எப்படிப்பட்டது? புகை பிடிப்பவரா? உங்கள் உணவு முறை எப்படியானது? உடற் பயிற்சி செய்பவரா? பரம்பரையில் - நீரிழிவு, அதி உயர் இரத்த அழுத்தம், ஈரல் மற்றும் இதயநோய்கள் உள்ளவரா? என்பவற்றையும் கவனத்தில் எடுக்க வேண்டும். மேற் கூறிய விஷயங்களோடு - கிரமமாக, தொடர்ந்து மதுபானத்தை அருந்திவந்தால் நிச்சயம் ஏதோ ஒரு வகை யில் உங்களுக்குப் பாதிப்பு ஏற்படும்.

நல்ல சுகதேகியானவர்கூட தினமும் அல்லது கிரமமாக - அளவோடு குடித்து வந்தாலும் - பாதிப்புகள் ஓரளவு ஏற்படுகின்றன என்று அறியப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்புகள் தொடர்ந்து ஏற்படுமாயின் - நிச்சயம் இறுதியில் - பாரிய விளைவுகள் ஏற்படும் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மதுபானத்தை அளவோடு குடிப்பது என்பது - மதுபானப்பிரியர்கள் தங்களுக்குள் உருவாக்கிக்கொள்ளும் ஒரு மாயை ('Illusion') என்பது மனநல வைத்தியர்களின் அபிப்பிராயம். மருத்துவத்தில் 60 மி.லீ. மதுசாரம் (Alcohol) உடலுக்குப் பிரச்சினை ஏற்படுத்தாது என்று கூறுகின்றார்கள். இது ஒவ்வொரு வகை மதுபானத்துக்கும் வேறுபடும். விஸ்கி போன்ற மதுபானங்களில் 60 மி.லீட்டர் விஸ்கியில் கிட்டத்தட்ட 60 மி.லீ. மதுசாரம் இருக்கும். ஆனால் பியர் - போன்றவற்றில் இரண்டு போத்தல் பியரில்தான் 50 மி.லீ. மதுசாரம் இருக்கும். இதனால் 'பியர்' அபாயமற்றது என்று கருத்தல்ல. பியரில் உள்ள மற்றப் பொருட்கள் (Additives) அளவு அதிகரிக்க அதிகரிக்க - தீட்டு விளைவிக்கும் என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த 60 மி.லீட்டர் என்பது 4 மேசைக்கரண்டி அளவு என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். எனவே நாலு மேசைக்கரண்டி மதுபானம் எந்தளவுக்கு உற்சாகம் அளிக்கும் என்பதைச் சிந்தியுங்கள். குடிக்கும் மதுசாரம் நாம் எதிர்பார்த்த 'Kick' எழுப்பத்தைத் தராவிடில் நாம் எமக்கு உற்சாகம் வரும்வரை தொடர்ந்து குடிப்போம். மேலும் நாளுக்கு நாள் இந்த அளவு அதிகரித்து - 'அளவுக்குக் குடிப்பது' என்பது அர்த்தம் இல்லாமல் போய்விடும். மதுபானம் இரத்தக்குழாய்களை முக்கியமாக இதயத் தசைகளை, இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்வதால் - இதயநோயாளருக்கு நல்லது என்று சொல்வதில் உண்மை இருந்தாலும், மதுபானத்தைவிட விலை குறைவான - இதேவேலையைச் செய்கின்ற மாத்திரைகள் இருக்கும்போது மதுபானம் தேவையா என்று இங்கு வினா எழும்புகிறது. அடுத்தது மதுபானம் - போதைக்கு அடிமைப்படுத்தும் தன்மையது. ஒரே நிலையில் மதுபானத்துக்கு அடிமையாகி - (Addicted) மதுபானம் இல்லாமல் வாழ முடியாது என்றாகி விடக்கூடாதல்லவா?

சிறுகக் குடித்தாலும் - ஈரல், மூளை, சிறுநீரகம், இரைப்பைக் கலன்களை - மதுபானம் அழித்து பழுதாக்குவதை மருத்துவ உலகம் நிரூபித்திருக்கின்றது. எனவே மதுபானம் எந்த அளவிலும், எந்த முறையிலும் உடலுக்குத் தீங்கானது. மேலும் மதுபானம் உங்கள் உடலை எவ்வளவு பாதித்திருக்கிறது என்பதை Liver Function Tests, Lipid Profile, Serum Creatinine, சர்க்கரைச் சத்து பரிசோதனைகள் செய்து அறிந்துகொள்ளலாம். மதுபானப்பிரியர்கள் இந்தப் பரிசோதனைகளை வருடத்துக்கு இரு தடவைகளாவது செய்து மருத்துவ ஆலோசனை பெறுதல் அவசியம்.



**கேள்வி:** வயது 30, திருமணமாகியுள்ளேன். கடந்த சில மாதங்களாக - எனக்குத் திருப்தியான முறையில் உடலுறவு கொள்ள முடிவதில்லை. அதாவது உடலுறவு கொள்ள - ஆண் உறுப்பு விறைத்து நிற்காது. வைத்தியரிடம் காட்டியபோது அவர் (Viagra) வயாகரா மாத்திரையை - உடலுறவுக்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் உபயோகிக்கச் சொன்னார். மாத்திரை எடுத்தும் உறுப்பு விறைப்படைவதில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** உறுப்பு விறைப்படையாமல் இருப்பதற்கு Erectile Dysfunction என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. உறுப்பின் - பஞ்சுத்தன்மை ஒத்த பகுதிக்குள் - காம உணர்வு ஏற்படும் வேளையில் - இரத்தக் குழாய்களால் இரத்தம் நிரப்பப்படுவதாலேயே உறுப்பு விறைப்படைகிறது. இந்த 'இரத்த நிரப்பு' விஷயம் - சிலவேளைகளில் நரம்பு பலவீனத்தால் பாதிக்கப்படுவதும் உண்டு. நீரிழிவு, இரத்த அழுத்தம் முதலிய நோய்களாலும், முதுகெலும்பில் ஏற்படும் பாதிப்பால் நரம்புகள் பாதிப்படைவதாலும், சில நோய்களுக்கு உபயோகிக்கப்படும் மருந்து - மாத்திரைகளின் பக்கவிளைவுகளாலும் கூட - இந்தக் கோளாறு ஏற்படலாம். எனவே உங்கள் விஷயத்தில் மேற்கூறியவற்றை முன்னிலைப்படுத்த மருத்துவ பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளுவது நலம். மேலும் மேற்கூறிய கோளாறுகள், காரணமாக இல்லாமலிருக்கும்போது ஏற்படக்கூடிய விறைப்பு ஏற்படாத பிரச்சினைக்குத்தான் 'வயாகரா' வகை மருந்துகள் உபயோகமாகின்றன. பலர், ஏன் நீங்கள் கூட 'வயாகரா' மாதிரியான மாத்திரைகளைப் பற்றி தவறான கருத்தைக் கொண்டிருந்து - இந்த மாத்திரைகள் பலனளிக்கவில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவததை, கொழும்பு - 14.

'வயாகரா' மாத்திரைகள் ஆண் உறுப்பை தாமாகவே விறைப்புக் காண வைக்கமாட்டா. அதாவது சாதாரண நேரத்தில் இந்த மாத்திரைகளை உபயோகித்தால் - ஆண் உறுப்பு விறைப்படையாது. சுவாசப்பை சம்பந்தமான, Pulmonary Hypertension போன்ற கோளாறுகளுக்கு - ஆண்களுக்கும் பெண்களுக்கும் 'வயாகரா' மாத்திரைகள் மருந்து என்ற ரீதியில் உபயோகமாகின்றன. அப்படியென்றால் - விறைப்பு ஏற்படாத கோளாறில் இந்த மாத்திரைகள் எவ்விதம் உதவுகின்றன என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

மனதில் - காம உணர்வுகள் கிளர்தெழும்போது - வயாகரா மாத்திரை - ஆண் உறுப்புக்கு நிறைய இரத்தோட்டத்தை அனுப்புவதற்காக ஆண் உறுப்பிலுள்ள இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்கிறது என்பதுதான் அடிப்படை - எனவே ஒரு சிலர் வயாகரா மாத்திரைகளை உபயோகித்த அடுத்த கணத்தில் - ஆண் உறுப்பு விறைப்படைந்து விடும் என்று தப்பாகக் கருதி - தோல்வி காண்கின்றனர். உண்மையில் - உடலுறவு கொள்வதற்கு முக்கியமாக காம உணர்வு அவசியம். காம உணர்வு ஏற்படாமல் - எத்தனை வயாகரா எடுத்தாலும் வெற்றி கிடையாது.

**கேள்வி:** வயது 28, பெண், திருமணமாகியுள்ளேன், எனக்கு Poly Cystic Ovary Syndrome என்ற கோளாறு உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனக்கு மாதவிலக்கு ஆவதேயில்லை. எனது நிறை 65 கி.கிராம், உயரம் 5 அடி 3 அங்குலம். எனக்குக் குழந்தை கிடைக்க வைத்தியம் உள்ளதா?

**பதில்!** மலட்டுத் தன்மைக்கு PCOS என்கின்ற நீர் நிறைந்த கட்டிகளைக் கொண்டுள்ள சூலகம் ஒரு காரணமாகக் கருதப்படுவது உண்மையே. ஏதோ ஒரு ஹோர்மோன் சுரப்பு பிரச்சினை காரணமாக சூலகத்தில் முதிர்ச்சியடையாத முட்டைகள் வெளியேறி- சூலகத்தின் மேற்பரப்பில் தங்கி நின்று நீர் நிறைந்த கட்டிகளாக மாறுவதுண்டு. இதுதான் கோளாறுக்கும் காரணம். இதனால் கர்ப்பம் அடையும் வாய்ப்புகள் குறைந்து போக நேரிடுகிறது. இந்தக் கோளாற்றின் காரணமாக எடை அதிகரிப்பு, முகத்தில் ஆண்கள் போல் உரோமம் வளர்தல், மாதவிலக்கு ஒழுங்கின்மை அல்லது உங்களுக்கு ஏற்பட்டது போல் முற்றாகவே வெளியேறாமல் நின்றுவிடும் பாதிப்பு போன்ற குணங்குறிகள் ஏற்படலாம். எடையைக் குறைக்க - நீரிழிவுக்கு உபயோகிக்கப்படும் Metformin மாத்திரைகள், மாதவிலக்கு வட்டத்தைச் சீர்படுத்த Progestrone ஹோர்மோன் மாத்திரைகள், கருமுட்டைகளை உற்பத்தியாக்க Clomiphene வகை மாத்திரைகள் என்பவை கிரமமாகவும், வைத்திய ஆலோசனை மற்றும் கண்காணிப்பின் கீழும் தொடர்ந்து - உபயோகிக்கப்படவேண்டும்.

கருமுட்டை உயோகிக்கும் மாத்திரைகளை - மாதவிலக்கு வட்டத்தின் - குறிப்பிட்ட காலங்களில் உபயோகப்படுத்தி -முட்டைகள் சூலகத்திலிருந்து வெளிவரும் காலப்பகுதியை - ஸ்கான் பரிசோதனை மூலம் கண்டறிந்து அந்தப் பொருத்தமான காலத்தில் உடலுறவு கொண்டால் - கர்ப்பம் தங்க பெருமளவு வாய்ப்புண்டு. மருத்துவப் புள்ளி விவரப்படி - இந்தச் சிகிச்சை முறையில் 80 வீதமானோர் கருவுறச் சாத்தியம் உண்டு என்பது கணக்கிடப்பட்டுள்ளது. அதே வேளையில் இந்தச் சிகிச்சை முறையில் இடையே கர்ப்பம் கலைவதற்கும் சந்தர்ப்பம் இருப்பதால், சிகிச்சை பெறும் காலத்தில் - போதிய அளவு ஓய்வு, பாரிய வேலைகளை தவிர்த்தல், உடலுறவைத் தவிர்த்தல் என்பவை பின்பற்றப்படவேண்டும். தவிர கர்ப்ப காலத்தில் PROGESTERONE வகை மருந்துகளையும் - உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். எனவே கவலை வேண்டாம்.

***

# மகத்தானது!

வெட்கச் சிரிப்பு வேண்டாம்
வெற்றி பெற்றால் போதும்

தலையணை நித்திரை வேண்டாம்
மடி அணை மந்திரம் போதும்

சிலையெ நிற்க வேண்டாம்
சிரித்திடும் சிலிர்ப்பு போதும்

விலையுயர் பொருட்கள் வேண்டாம்
விலையற்ற அன்பு போதும்

விடியலில் சூரியன் வேண்டாம்
விடியாமலே இருந்தாலே போதும்

# காதல் பல விதம்

இது ஒன்றும் புதுசு இல்லை. காதல் என்றது ஒன்றுதான்.. எங்கள் இளைஞர்கள் தான் காதலை வித்தியாசம் வித்தியாசமாக ஒவ்வொரு பெயர் வைத்து அழைக்கிறார்கள்! எங்கள் ஊரில் இருக்க கூடிய வெவ்வேறு காதல்கள் இவை ....

ஒருதலைக் காதல் :- இது பற்றிச் சொல்லவே தேவை இல்லை.இது எல்லாம் எங்கள் இளசுகளுக்கு நிறையே வரும். அதாவது, தாங்கள் மட்டுமே காதல் செய்வது....



இதுதான் அவர்களுக்குப் பாதுகாப்பானது. இதில் யாரை வேண்டும் என்றாலும் சுதந்திரமா காதலிக்கலாம். யாரும் கேட்க முடியாது.

இருதலைக் காதல் :- இதில் அதிகம் வெற்றி பெறுபவர்கள் குறைவு.. வெற்றி பெறுபவர்கள் நிலைத்து இருப்பது குறைவு. இதில் ஒருவர் மட்டுமல்ல. அவன் (அவள்) விரும்பும் நபரும் காதலிக்க வேண்டும்.

மூன்றுதலைக் காதல் (பாகம் 1) :- இந்த காதலை நீங்கள் சமீபத்தில்தான் பார்த்து இருப்பீங்கள்! குட்டிதிரைப்படம் இதற்கு உதாரணம்.

மூன்றுதலைக் காதல் (பாகம் 2) :- இருவர் ஒருவரைக் காதலிப்பது! அந்த நபர் அதில் ஒருவரைக் காதலிப்பார்.க்காதல் செய்யக் கிடைக்காத மற்றவர் தேவதாஸ் ஆகிவிடுவார்.

மூன்றுதலைக் காதல் (பாகம் 3) :- இது கொஞ்சம் வித்தியாசம் ... ஒருவன் ஒருத்தியைக் காதலிப்பான். கொஞ்ச காலத்துக்குப் பின் அந்த பெண் வேறு ஒருத்தனை காதலிப்பாள். இதில் இருந்து ஒன்று மட்டும் சொல்லலாம். இந்த உலகத்தில் எல்லாவற்றுக்கும் போட்டி அதிகம்.

பருவ காதல் :- இது காதலே இல்லை! பருவத்தில் எதிர்பாலரிடம் வர கூடிய ஈர்ப்பு அவ்வளவுதான்.

கல்லூரிக் காதல் :- இது ஈர்ப்பு என்று சொன்னாலும், கல்லூரியில் வரும் காதலும் சரியாகத்தான் அமைகின்றது.

உணர்ந்த காதல் :- இப்படி இருக்குதா என்று தெரியாது..... ஆனால் காதல் செய்து வாழ்கையில் நல்லா இருக்கிறவன்கள் காதலை இப்படி சொல்வாங்க!



பெண்களை விட ஆண்களுக்கு
இரு மடங்கு வியர்க்கிறது!

ஆமாம் ஆமாம்
உன்னிடம் காதலைச் சொல்வதற்குள்
என்னில் ஒரு வியர்வை நதியே
ஓட ஆரம்பித்துவிட்டதே




பெப்ரவரி 14 இல் காதலர்தினம் உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது. காதல் என்றால் ஒரு பெண்ணும்-ஆணும் விரும்புவது என்ற ஒன்றுதான் அர்த்தம் என்ற ரீதியில் அர்த்தம் செய்யப்படுகிறது. 'லவ்' என்ற இந்த வார்த்தைக்கு அன்பு, நேசம், காதல் என்ற அர்த்தங்கள் உண்டு. இந்த காதலர்தினம் எவ்வாறு உருவாக்கப்பட்டது.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மத 'வேலண்டைன்' என்னும் பெயர் கொண்ட ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் ரோம் அரசாங்கத்தின் தடை உத்தரவை மீறி ஏராளமான காதலர்களுக்கு ரகசியமான முறையில் திருமணம் செய்து வைத்து காதலை அங்கீகரித்த காரணத்தினால் அவர் பெயரால் 'காதலர் தினம்' என கொண்டாடப்படுகிறது.

காதலர் தினத்தை வலன்டைன் டே என அழைப்பதற்கான காரணங்கள் என்ன?

காதலர்தினம் 'வலன்டைன் டே' என அழைக்கப்படுவதற்கு மூன்று வெவ்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

ரோம் நகரில் 1500 வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்தவத்தை போதித்த இளம் பாதிரியார் வலன்டைன் சிறையில் அடைக்கப்பட்டார்.இங்கு அவர் பார்வை இழந்த சிறை அதிகாரியின் மகளுக்கு ஜெபத்தின் மூலம் பார்வை பெற செய்ததாகவும் இதனால், சிறை அதிகாரியின் மகள் பாதிரியார் மீது காதல் கொண்டதாகவும் எனினும் பாதிரியாரை மரண தண்டனையில் இருந்து காப்பாற்ற முடியவில்லை என்றும். இதன் அடிப்படையில்தான் காதலர் தினத்தை 'வலன்டைன் டே' என்று அழைப்பதாகவும் ஒரு கதை சொல்கிறது.

ரோம் நாட்டில் கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்த கிளாடியஸ் என்பவர் படை வீரர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று கட்டளை இட்டிருந்தாராம். இதற்காக கி.பி. 267 இல் போர்வீரர்களின் திறமையை திருமணம் பாதிக்கும் என சட்டம் இயற்றியிருந்தாராம். இருந்தபோதிலும் பாதிரியார் வலன்டைன் இரகசிய திருமணத்தை படைவீரர்களுக்கு செய்து வைத்தார். இதனால் பாதிரியாரின் தலை சீவப்பட்டது. இவ்வாறு தலை சீவப்பட்ட நாளையே காதலர்தினம் என்று கொண்டாடப்படுகின்றது என்று இரண்டாவது கதை சொல்கிறது..

# 'வெலன்டைன் டே' கொண்டாட காரணம் என்ன?



ரோம் நகரில் லூபர் கேலியா விழா பெப்ரவரி மாதத்தில் கொண்டாடப்பட்டது. வசந்த காலத்தை காதலர்கள் வரவேற்கும் விழாவாகத்தான் இந்த லூபர் கேலியா கொண்டாடப்பட்டதாம். இதுதான் வலன்டைன் டே இன் ஆரம்பம் என்று மூன்றாவது கதை சொல்கிறது.

வலன்டைன் டே பற்றி மூன்று வெவ்வேறு கதைகள் சொல்லப்பட்டாலும், இந்த கதைகளின் அடிப்படையில் வலன்டைன் டே என்பது ரோம் நகரத்திலையே தோற்றம் பெற்றது என்பதை புரிந்து கொள்ள முடியும். இதுதான் காதலர்தின வரலாறு.

தொகுப்பு:-
அஸ்வின்



ஒவ்வொரு துடிப்புக்கும் இடையே
கிடைக்கும்
மிகச் சிறிய இடைவெளியில்
இதயம்
ஓய்வெடுத்துக்கொள்கிறது,

ஆனால் என் இதயமோ,
அந்த இடைவெளியிலும்
உன்னைக் காதலித்துக்
கொண்டிருக்கிறது.

# ஹாய் அன்பே....

ஒரு காதலனும், ஒரு காதலியும் தொலைபேசியில் என்ன தான் கதைப்பார்கள் என்று மண்டையைப் போட்டு பிசைபவர்களுக்காக.... இதோ....

(காதலி மிஸ்ட் கோல் குடுக்கிறா..
உடனே இவன் பதறிவிழுந்து அழைப்பெடுக்கிறான்)

அவள்: ஹலோ...

இவன்: ஹாய்டா.... சொல்லு...

அவள்: இல்ல... சும்மா தான் கோல் பண்ணினன்...

இவன்: மனதுக்குள் (எப்படி நீ கோல் பண்ணினாய்... எப்பவுமே மிஸ்ட் கோல் தானே...) ஓ! என்ன பண்றாய்?

அவள்: இப்ப தான் சாப்பிட்டு முடித்தேன். சேர் என்ன பண்றீங்க?

இவன்: நானும் இப்ப தான் சாப்பிட்டு முடித்தேன்... இப்ப 'சுட்டும் விழிச்சுடரே' பாட்டுக் கேட்கிறன்...

அவள்: நல்ல பாட்டு...

(இப்படியே சொல்லிக் கொண்டு ''மழை அழகா வெயில் அழகா உன் கண்ணில் நான் கண்டேன்..'' எண்ட வரியை மெல்லிய குரலில பாடுறா...)

இவன்: மனதுக்குள் (அங்க என்ன எலி கத்துது?) ஹேய்... நீ இவ்வளவு நல்லாப் பாடுவியா?

அவள்: சீ... போடா....

இவன்: இன்னொரு தரம் பாடேன்....

அவள்: என் றூம் மேற்ஸ் எல்லாம் படுத்திட்டாங்க... எழும்பிடப் போறாங்க....

இவன்: மனதுக்குள் (உண்மைதான்.... பேய் கீய் வந்திற்றோ எண்டு பயந்திடுவாங்கள்...) கமோன் டா.... பிளீஸ்....

அவள்: போ.......டா...... நான் அந்தளவு நல்லாப் பாடமாட்டன்....

இவன்: மனதுக்குள் (அது ஊருக்கே தெரியுமே...) ஹேய்... நீ பாடினது நல்லா இருந்திச்சுடா.... பிளீஸ் பாடேன்

அவள்: எனக்கு ஒருமாதிரி இருக்குடா....

இவன்: இதில என்னம்மா இருக்கு.... நீ நல்லாத்தானே பாடுறாய்....?

அவள்: அத நீ தான் சொல்லணும்... எனக்கெப்படித் தெரியும்?

இவன்: மனதுக்குள் (ஏதோ வேற வழியில்ல... சொல்லிற்றன்...) இப்ப பாடுவியா மாட்டியா?

அவள்: ஏன்டா படுத்திறாய்....

இவன்: ஓகே... விடு.... (விருப்பமின்றி)

அவள்: எனக்கு அந்தளவுக்கு நல்ல குரல் இல்லடா.

இவன்: மனதுக்குள் (கழுதைக் குரல் எப்படி ஸ்ரைலா சொல்லுது பார்...) ம்... ம்...

அவள்: சரி.... இவ்வளவு கேக்கிறாய்.... உனக்காக ஒரே ஒரு பந்தி மட்டும் பாடுறன்....

இவன்: மனதுக்குள் (என் கஷ்ட காலம்....) கிரேட்...

அவள்: எந்தப் பாட்டுப் பாட?

இவன்: மனதுக்குள் (நீ எது பாடினாலும் இன்றைக்கு நித்திரை போச்சு.,.. பிறகென்ன எந்தப்பாட்டா இருந்தா என்ன....) ம்ம்ம்ம்ம்.... உன் பேரைச் சொல்லும் போதே'

அவள்: நைஸ் சோங்.... ஆனால் எனக்கு வரிகள் தெரியாதேடா....

இவன்: மனதுக்குள் (உனக்கு எழுதப்படிக்கவே தெரியாது.. பிறகு பாட்டுவரி என்னென்று ஞாபகம் இருக்கும்?) அப்ப 'சின்னச் சின்ன ஆசை'?

அவள்: இல்ல... உன் பேரைச் சொல்லும் போதேயே பாடுறேன்...

இவன்: மனதுக்குள் (எதக் கத்தினா எனக்கென்ன...)

(க்ம்ம்... எண்டு தொண்டையைச் செருகி குரலை சரியாக்கிறா... பிறகு ஒரு வரி பாடுறா.,, பிறகு...)

அவள்: இல்ல வேணாம்... எனக்கு பாட வருகுதில்லையடா....

இவன்: பாடு (காதலியின் பெயர்) நீ பாடு.... உன் இசை என்னும் இன்ப வெள்ளத்தில் நீந்த ஓடோடி வந்த என்னை ஏமாற்றி விடாதே.... பாடு பாடு...

அவள்: பாத்தியா... நக்கலடிக்கிறாய் பாத்தியா?

இவன்: மனதுக்குள் (தெரியுதெல்லே..., பிறகென்ன...) இல்லடா.... நீ நல்லா பாடுகிறாய் தானே... அதுதான் உன்ன....

அவள்: ம்... ம்...

இவன்: பிளீஸ் பாடேன்....

அவள்: நாளைக்கு பாடட்டுமா?

இவன்: மனசுக்குள் (அப்பாடா தப்பிச்சேன்...) சரிம்மா... உனக்கு எப்ப தோணுதோ அப்பவே பாடு....

அவள்: ம்.. ம்...

இவன்: குட் நைட் டா...

அவள்: குட் நைட் டா...

இவன்: ஸ்வீற் ட்றீம்ஸ்...

அவள்: ஸ்வீற் ட்றீம்ஸ்..... பாய்...

இவன்: மனதுக்குள் (தொல்லை தீர்ந்திச்சு...).

# பித்தன் பதில்கள்



மாதவன்,
பதுளை.

**கேள்வி:-** கமிஷன்கள், அறிக்கைகள் என்பன உண்மைகளை வெளிக்கொணருமா பித்தரே?

**பதில்:-** விஷயத்தை ஆறப்போடும் பம்மாத்துக்கள் அவை என்று இன்றைய சூழ்நிலையில் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

வாமன்,
சங்கானை.

**கேள்வி:-** கட்சித் தொண்டர்களின் பணி என்ன?

**பதில்:-** பொதுவாக போஸ்டர்களை ஒட்டுவது, கட் - அவுட்களை அமைப்பது அவர்களின் பணி. ஆனால், இப்போது மாற்றுக் கட்சிக்காரின் வீடுகளை எரிப்பது, ஆட்களைக் கடத்துவது, குண்டு வைப்பது, முடிந்தால் கொலை செய்வது என்று புதிய பணிப்பட்டியலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது போலும்...!

கண்ணன்,
கொழும்பு.

**கேள்வி:-** கண்களும் கவிபாடுமா பித்தரே?

**பதில்:-** ஒரு காலத்தில் பாடியிருக்கலாம். இப்போது, ஏன் இந்தப் பாவ உலகில் பிறந்தோம் என்று கண்ணீர் தான் வடித்துக் கொண்டிருக்கும்.

டேவிட்,
தெஹிவளை.

**கேள்வி:-** வீட்டு வேலைகளை எல்லாம் இயந்திரங்களே செய்ய ஆரம்பித்தால்...?

**பதில்:-** உடல் உழைப்பு இன்மையால் நோய்களின் தாக்கம் அதிகரிக்கும். உலகமே நோயாளிகளால் நிறைந்து போய்விடும்.

சேகர்,
இணுவில்.

**கேள்வி:-** பத்திரிகையில் வெளிவரும் தொடர்கதைகள், சரித்திர நாவல்கள் போன்றவற்றை வாசிப்போரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறையக் காரணம் என்ன?

**பதில்:-** டெலிவிஷனின் வருகையும், அதனுடைய நிகழ்ச்சிகளும்தான்.

ஜெயா,
அரியாலை.

**கேள்வி:-** குளிர்பானங்களுக்கு எதிராக அடிக்கடி பத்திரிகையில் செய்திகள் வருகின்றனவே...?

**பதில்:-** ஆமாம். பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் மற்றும் குளிர்பானங்களை அதிக அளவில் குடித்தால் ஞாபகசக்தி குறையும் என்று கடந்த ஆண்டு பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.




சின்னத்துரை,
அவிசாவளை.

**கேள்வி:-** நயவஞ்சகனுக்குரிய அடையாளம் என்ன பித்தரே...?

**பதில்:-** அவனுக்கு மூன்று அடையாளங்கள் இருக்கின்றன; ஒன்று பேசினால் பொய் தான் பேசுவான். இரண்டு, வாக்குக் கொடுத்துவிட்டு மாறுபாடாக நடப்பான். மூன்று, நம்பி ஒரு பொருளை ஒப்படைத்தால் அதற்கு மோசடி செய்வான்.

யதூஷன்,
வவுனியா.

**கேள்வி:-** இன்றைய நிலையில் அரசு முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டிய பணி என்ன?

**பதில்:-** அகதிகளை மீள்குடியமர்த்துவது தான்.

செந்தில்,
தம்பிலுவில்.

**கேள்வி:-** கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதனின் குருநாதர் யார் என்று சொல்ல முடியுமா?

**பதில்:-** மூத்த தமிழ் அறிஞர் உ.வே. சாமிநாதய்யரை.




பிரியா,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** திரையுலகில் 'கலைக் குடும்பங்கள்' இருக்கின்றனவா?

**பதில்:-** தமிழ்த்திரை உலகின் முதலாவது கலைக்குடும்பம் என்ற பெருமைக்குரியவர் இயக்குநரும், தயாரிப்பாளருமான கே. சுப்பிரமணியம் என்பவரைக் குறிப்பிடலாம். இதேபோல் ஹிந்தித் திரையுலகின் முதலாவது கலைகுடும்பம் என்று குறிப்பிட வேண்டுமானால், அது ராஜ்கபூரின் குடும்பம்தான்.

ஆதவன்,
மானிப்பாய்.

**கேள்வி:-** தமிழ் நாட்டில், சிந்தர்கள் பற்றி ஆராந்து நூல்கள் எழுதியவர் யார்?

**பதில்:-** பேராசிரியர் டி.என். கணபதி. இவரது நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சமீபத்தில் இவரால் எழுதப்பட்ட நூல் 'பத்ரகிரியாரின் மெய் ஞானப் புலம்பல்' என்பதாகும்.

சிவா,
வவுனியா.

**கேள்வி:-** கொடுங்கோலருக்கு அழிவு வராதா பித்தரே?

**பதில்:-** மன்னர் ஷா (ஈரான்), ஹிட்லர் (ஜேர்மன்), சதாம் ஹுசைன் (ஈராக்), முசோலினி (இத்தாலி) போன்றவர்களுக்கு ஏற்பட்ட கதியை நீர் அறியவில்லையா? நேரம் வரும் போது அவர்களை எவராலுமே காப்பாற்ற முடியாது. வினை விதைத்தவன் அதனை அறுவடை செய்யத் தானே வேண்டும்.

வானவன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** அரவாணிகள் அதிஷ்டசாலிகளா, துரதிஷ்டசாலிகளா?

**பதில்:-** தமிழகத்திலே அரவாணிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனால், குழந்தை பிறந்த வீட்டில் ஆடிப்பாடி ஆசீர்வதிக்க, கடைகளில் இலாபம் பெருக முதல் வியாபாரம் தொடங்கி வைக்க, புது வீடு மற்றும் வாகனங்களுக்குப் பூஜை போட இப்படி ஒவ்வொரு நல்ல காரியத்துக்கும் அரவாணிகள் வந்து கலந்து கொண்டால்தான் அதிஷ்டம் என்பது வட இந்தியர்களின் நம்பிக்கையாகும். இவர்களுக்குச் சுளை சுளையாகப் பணம் கிடைக்கிறது. சில அரவாணிகள் வருமான வரி கூடக் கட்டுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளும். இனி, அவர்கள் அதிர்ஷ்டகாரர்களா இல்லையா என்பதை நீரே தீர்மானித்துக் கொள்ளும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 405

சொற்சிலம்பம் 405 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் திணம் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச் 07 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 401 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.403

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ந் | 2 தா | 3 தி | ■ | 4 க | 5 த | வு |
| ஞ் | ■ | 6 வ | ன | வா | ச | ம் | ■ |
| 7 சா | 8 ம | ர | ம் | ■ | ரோ | ■ | 9 எ |
| 10 மை | ய | ம் | ■ | 11 அ | க | ரா | தி |
| ■ | ங் | ■ | 12 அ | ர | ம் | ■ | ர் |
| 13 ஏ | க | வா | ரி | சு | ■ | 14 ச | கா |
| 15 க | ல் | ■ | யா | ■ | 16 ச | க | ல |
| ல் | ■ | 17 ம | ன | த் | தி | ட | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 403

### பரிசு பெறுவோர்


1. திருமதி. இ. விமலாம்பிகை,
இல. B 16, 1/2,
மாளிகாவத்தை தொடர்மாடி,
கொழும்பு - 10.
2. கோ. சாமினி,
54/6, சீ வியூ ரோட்,
திருகோணமலை.
3. சி. இராஜேந்திரா,
33 - 5/1, 42 ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.

### சொற்சிலம்பம் போட்டி இல. 403

### பாராட்டுப் பெறுவோர்

01. இ. மிராளினி, செங்கலடி.
02. ஆர். வியாகரன், வவுனியா.
03. திருமதி. ம. கனகசேகரம், தெஹிவளை.
04. நெல்சன் ஜெபத்துரை, பண்டாரவளை.
05. ஜெயசோதி அபிஜித்தன், கொழும்பு - 06.
06. திருமதி. ரஞ்சினி ஜெயரத்தினம், வெள்ளவத்தை.
07. திருமதி. எஸ். பாக்கியநாதன், கூமாங்குளம்.
08. வி. தனபாலசிங்கம், சாவகச்சேரி.
09. அ. சியாம்சுந்தர், சாவகச்சேரி.
10. ஆர். குழந்தைவேலு, திருகோணமலை.
11. ரா. உஷாந்தினி, புத்தூர்.
12. நா. சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம்.
13. சி. சசிகுமார், வட்டுக்கோட்டை.
14. கௌ.மு. சார்ல்ஸ், வவுனியா.
15. ல. கதிர்நேசன், வல்வெட்டித்துறை.
16. எம்.எப்.எம். ரிம்ஸாத், கிண்ணியா - 03.

## சொற்சிலம்பம் போட்டி இல.405



## சொற்சிலம்பம் போட்டி இல. 405

**இடமிருந்து வலம்**

1. ஒருவரை ஒருவர் தெரிந்து பரிச்சயமாவது.
4. நல்ல.
6. உயிரின் தொடக்கம் இங்கே.
7. கூட.
8. சமனாக அனைத்தையும் பேணும் பண்பியல்பு.
11. கடுமையானது.
12. உணவுக் குழாயில் நடக்கும் தொழிற்பாடு.
14. மணம்.
16. வதந்தி.
17. இளைய சகோதரன்.
19. நிறப் பூச்சு.
20. நடக்கும் படி ஏவுதல்.
21. முற்கால ஆயுதம்.
22. அம்மா - அப்பா - பிள்ளைகள் ஒருங்கே சேர.

**மேலிருந்து கீழ்**

1. பதிப்பகம்.
2. கடலும் ஆறும் கலக்கும் இடம்.
3. எண்ணிக் கொள்.
4. சுருதி.
5. டாம்பீகம், வெளிப்படாடோபம்.
7. கடந்த தலைமுறையினர் காலத்து அடுப்படிக் கருவி இது. இப்போதெல்லாம் இந்துத் திருமணத்துக்கு மட்டும் தேடுவர்.
9. தாய், குழந்தையை வைத்துத் தாலாட்டுவது இதன் மீதுதான்.
10. கீழ் வருதல் / கைக்கொள்ளுதல் / கைப்பற்றுதல்.
13. கால்.
15. தடிமன் வந்தால் இதுவும் வரும்.
16. சூறாவளி.
17. சுவடு/ காலடி/ கண்ணி.
18. சவம்/ சடலம்.
19. திறப்பு.
20. மந்திரி.

# தி.மு.க பாய்ச்சல்!



**-எஸ். சுரேந்திரஜித்-**

இந்திய தேர்தல் ஆணையம் நடுநிலையான அமைப்பு என்ற தோற்றத்தை, தொண்ணூறுகளில் டி.என்.சேஷன் கொண்டுவந்தார். அன்றிலிருந்து சர்ச்சைக்கு அப்பாற்பட்ட நடுநிலை நிறுவனமாக தேர்தல் ஆணையம் மிளிர்ந்து வந்தது.

எனினும் 1999இல் பி.ஜே.பி ஆட்சிக்கு வந்தபின் தலைமை தேர்தல் ஆணையராக இருந்த கோபாலசாமி பிராமணர் என்பதால் பி.ஜே.பி பக்கம் சாய ஆரம்பித்தார். பதிலடியாக 2004 இல் பதவிக்கு வந்த காங்கிரஸ் கட்சி நவீன் சாவ்லா என்ற தனது ஆதரவாளரை தேர்தல் ஆணையர் பதவிக்கு தயார் படுத்தியது.

கோபாலசாமி இந்த ஆண்டு தொடக்கத்தில் பதவிவிலக முன் சாவ்லா மீது கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவரை பதவிவிலகக் கோரினார்.



ஜெயலலிதா

எனினும் ஒருவாறு சாவ்லா தப்பித்து தலைமை தேர்தல் ஆணையாளரானார். அவரே மே மாதம் நடந்த லோக்சபா தேர்தலை நடத்தினார். காங்கிரஸின் அடிவருடி என இவர் பி.ஜே.பியால் வெளிப்படையாக விமர்சிக்கப்பட்டு வந்தார். காங்கிரஸ் அரசின் செல்லப்பிள்ளையாக இருந்த இவருக்கு தி.மு.க வடிவில் எமன் முளைத்துள்ளான். கடந்த மாதம் டில்லியில் நடந்த தேர்தல் ஆணையத்தின் மணிவிழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள அ.தி.மு.க தலைவி ஜெயலலிதாவை வருந்தி அழைத்து அவரையும் சோனியாவையும் சந்திக்கவைத்தது சாவ்லா என்ற செய்தி வெளிவந்ததே இதற்குக் காரணம். ஓர் அரசியல் கட்சியின் தலைவி என்ற வகையில் மட்டுமே ஜெயலலிதா அழைக்கப்பட்டார் என்று பின்பு சமாதானம் கூறப்பட்டது. எனினும் இருதடவைகள் போயஸ் கார்டனுடன் நவீன் சாவ்லா தொடர்பு கொண்டு பேசிய விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது. இது குறித்து கோபமடைந்த தி.மு.க தலைமை, சாவ்லா மீது பாய்ச்சல் நடத்தியுள்ளது. ஆண்டு தொடக்கத்தில் சாவ்லாவை நீக்கும்படி கோபால்சாமி எழுதிய கடிதத்தை வெளியிடும்படி ஒருவர் வழக்குத் தொடர்ந்தார். இதற்கு ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்துவிட்டது. அதில் சாவ்லா ஆடிய திருக்கூத்துகள் விலாவாரியாக விளக்கப்பட்டுள்ளன.

கடிதத்தை எழுதிய கோபால்சாமி அதை ஊடகங்களுக்கு வெளியிட சட்டத்தில் இடமில்லை என்பதால் இந்த விவரங்கள் வெளிவர இயலாத நிலை இருந்தது. இப்போது ஜனாதிபதி செயலகம் வெளியிடமறுத்த கடித விவரத்தை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ளது. சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி தமிழக அரசுக்கு நெருக்கமானவர் என்பதால் அவர் தி.மு.க நெருக்குதலில் இதை வெளியிட்டாரா, சோனியா காந்தியும் பச்சைக் கொடி காட்டினாரா என குழப்பங்கள் எழுந்துள்ளன. எவ்வாறாயினும் ஜெயலலிதாவுடன் சாவ்லாவுக்கு பலதரப்பட்ட நெருக்கம் இருந்தது என்பது மட்டும் தெளிவாகி உள்ளது. காங்கிரஸ்-அ.தி.மு.க கூட்டணியை ஏற்படுத்துவது மூலம் ஜெயலலிதாவிடம் பணம் கறக்க முயன்றாரா என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன. இதனை அறிந்த சோனியா காந்தி சாவ்லாவை வெளியேற்ற ஒப்புதல் கொடுத்தார் என்றும் சில வட்டாரங்கள் கூறுகின்றன. டி.என். சேஷன் வகித்த புகழ் மிக்க பதவிக்கு களங்கம் வரும்படி சாவ்லா நடந்து கொண்டார் என்பது பலதரப்பினரதும் குற்றச்சாட்டாகும். அது உண்மையானால் அவர் விலக வேண்டியது தவிர்க்க முடியாது போகும்.



முலாயம் சிங் யாதவ்

தி.மு.கவை பொறுத்தவரை காங்கிரஸால் இனிமேலும் வாலாட்ட முடியாது என்றாலும் காங்கிரஸுடனான கூட்டணியை தொடர்வதில் தி.மு.கவுக்கு பல நன்மைகள் உள்ளன. வரும் சட்டசபைத் தேர்தலில் பா.ம.கவையும் அ.தி.மு.கவையும் உச்சுவதற்கு பலமான கூட்டணிக் கட்சி தி.மு.கவுக்கு தேவையாக உள்ளது. எனவே இந்தத் தருணத்தில் தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி உடைந்தால் அதில் தி.மு.கவுக்கு பெரும் பாதிப்பு உண்டாவதோடு அ.தி.மு.க மீண்டும் தலையெடுக்க அது உதவும். இன்றைய வீழ்ச்சியில் இருந்து அ.தி.மு.க மீள உள்ள ஒரே மார்க்கம் காங்கிரஸுடனான கூட்டணியை மீண்டும் ஏற்படுத்துவதே என்பதை யாவரும் அறிவர். எனவே தனது கூட்டணியில் இருந்து காங்கிரஸ் வெளியேறினாலும் அ.தி.மு.க வுடன் சேரவிடக் கூடாது என்பதில் தி.மு.க தலைமை உறுதியாக உள்ளது.

இது தவிர காங்கிரஸில் சிதம்பரம் கோஷ்டி தி.மு.க வுடன் நெருக்கமான கோஷ்டியாகும். சிதம்பரத்துக்கும் ஜெயலலிதாவுக்கும் எட்டாப் பொருத்தம் என்பது கவனிக்கத்தக்கது. ஜெயலலிதாவுடன் சாவ்லா நெருக்கமானது குறித்து சிதம்பரம்தான் சோனியா காந்திக்குப் போட்டுக் கொடுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. சிதம்பரம் சொல்வதை சோனியா காந்தி தட்டவே மாட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணைய விவகாரம் இவ்வாறிருக்க உத்தரப்பிரதேச மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான சமாஜவாதக் கட்சி பிளவுபடும் நிலைக்கு வந்துள்ளது. அக்கட்சியில் இரண்டாம் இடத்தில் இருந்துவருபவரும் தொழிலதிபருமான அமர்சிங் கட்சியைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். யாதவர் சமூகத்தின் கட்சியான முலாயம் சிங் யாதவ் தலைவரான கட்சியில் வர்த்தக பிரபல்யங்களையும் பொலிவூட் நட்சத்திரங்களையும் இழுத்து வந்து அக்கட்சிக்கு ஒரு புதுப் பொலிவையே தந்த பிரமுகர் அமர்சிங் ஆவார்.

கடந்த லோக்சபா தேர்தலிலும் அதனை அடுத்து வந்த இடைத் தேர்தலிலும் முலாயம் சிங் யாதவின் கட்சி படுதோல்வி கண்டு காங்கிரஸ் கட்சி புதிய வெற்றி பெற்றதால் அக்கட்சியில் பிளவுகள் வெளிப்படையாகத் தெரியலாயின.



நவீன் சாவ்லா

முலாயமின் கட்சி யாதவர், முஸ்லிம்கள், தாகூர் என பலசாதியினரின் ஆதரவுடன் விளங்கியது. பி.ஜே.பி யை ஒழிக்க காங்கிரஸே தேவை என முஸ்லிம்கள் மீண்டும் சிந்திக்க தலைப்பட்டதால் முலாயம் கட்சிக்கு முஸ்லிம் ஆதரவு முற்றாக இல்லாது போனது. அக்கட்சி அடுத்தடுத்து தோல்வி காணவே வேறுவழியின்றி மூத்த தலைகள் சிலவற்றை உருட்டும் நிர்ப்பந்தம் முலாயமுக்கு ஏற்பட்டது. முலாயம் கட்சி உடைந்தது காங்கிரஸ் கட்சிக்கே மிகுந்த நன்மை தருவதாகும். அமர்சிங்குடன் அவரது சினிமாப்பரிவாரமும் முலாயம் கட்சியை விட்டு வெளியேறிவிட்டது. ஜெயப்ரதா, அமிதாப் பச்சன், சஞ்சய் தத் என அவரது ஹிந்தி நடிகர் பட்டாளம் அமர்சிங்குடன் சேர்ந்து புதிய கட்சி தொடங்கவுள்ளதாக கூறப்படுகிறது. 1996க்குப் பின் காங்கிரஸ் கட்சி உடைந்து சிதறத் தொடங்கிய காலத்தில் தான் முலாயம் சிங்கின் கட்சி உத்வேகம் பெற்று வந்தது. காங்கிரஸில் இருந்து பலர் அக்கட்சியில் சேர்ந்தனர். உத்தரபிரதேச ஆளும் கட்சியாக அக்கட்சி வீறுநடைபோட்டது. முலாயம் சிங்குக்கும் வயதாகி விட்ட நிலையில் அவரது மகன் அகிலேஷ் யாதவ் கட்சியை கொண்டுநடத்த முடியாது திண்டாடுவது தெளிவாகியுள்ளது.

இந்த நேரத்தில் கட்சியின் இரண்டாம் தலைவரான அமர்சிங்கும் வெளியேறி இருப்பது அக்கட்சிக்கு பெரும் பின்னடைவே. ஆளும் கட்சியான மாயாவதியின் பி.எஸ்.பி. கட்சிக்கும் இது நல்ல செய்தியாகும். 2012 சட்டசபைத் தேர்தலில் ஆட்சியைப்பிடிக்க வேண்டிய கட்சி முலாயமின் கட்சியே. ஆனால், இந்தப் பிளவுகளால் மீண்டும் மாயாவதி கட்சி ஆட்சிபீடமேறவும், காங்கிரஸ் மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியாகவும் மாறும் வாய்ப்பு இதனால் எழுந்துள்ளது.

***

# வளைந்து போனதொரு...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

இருப்பதாகக் கூறப்படுகிறது. இது குறித்து விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு புகழ் பெற்ற சட்டத்தரணியான நிலாம் காரியப்பரைத் தொடர்பு கொண்டோம். அவர் விளக்கினார்.

'அதாவது, ராணுவ நீதிமன்றமொன்றில் சாதாரண நீதிபதிகள் இருப்பதில்லை. உயரதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவின்தான் அங்கு நீதிபதி ஸ்தானத்தை வகித்து வழக்கை விசாரிப்பார்கள். அந்தக் குழுவினருக்கு உயர் தரத்தைக் கொண்ட அதிகாரியொருவர் தலைமை வகிப்பார்.

இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், ராணுவ நீதிமன்றத்தில் ஒருவர் விசாரிக்கப்படும் போது, குறித்த விசாரணைக்குழுவுக்குத் தலைமை தாங்குபவர், விசாரணைக்குட்படுத்தப்படுபவரை விடவும் தரத்தில் கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஜெனரல் சரத் பொன்சேகாவைப் பொறுத்தவரை, அவர் நான்கு நட்சத்திர அந்தஸ்து அல்லது தராதரத்தினைக் கொண்ட ஒருவராவார்! இலங்கைப் படைகளில் இவ்வாறான தரத்தில் வேறு எவருமே இல்லை. இப்போது, நமது நாட்டில் இப்படியானதோர் உச்ச தரத்தினைப் பெற்றுள்ள ஒரேயொருவர் ஜெனரல் பொன்சேகா மட்டும்தான்.

அந்தவகையில் பார்த்தால், ஜெனரல் பொன்சேகவை ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கும் குழுவொன்றுக்கு - இப்போதுள்ள படை உயர் அதிகாரிகளில் எவருமே தலைமை தாங்க முடியாது. ஆக, இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்க வேண்டுமாயின், யாராவதொரு படை அதிகாரியை ஜெனரல் பொன்சேகாவின் தரத்தை விடவும், உயர்த்துதல் வேண்டும். பின்னர், அவ்வாறு தரமுயர்த்தப்பட்டவரை விசாரணைக் குழுவுக்குத் தலைமை தாங்கச் செய்யலாம்' - என்கிறார் சட்டத்தரணி நிலாம் காரியப்பர்!

இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க, ஜெனரல் பொன்சேகாவை ஏன் கைது செய்தார்கள் என்பதற்கு அரசாங்கம் - இரண்டுபட்ட காரணங்களைக் கூறிக் கொண்டிருக்கிறது. அதாவது, சேவையிலிருந்து விடுபட்ட பிறகு பொன்சேகா ராணுவ ரகசியங்களை வெளியிட்டார், ஜனாதிபதியைக் கொலை செய்யத் திட்டமிட்டார், ராணுவத்துக்குள் பிளவினை உண்டு பண்ண முயற்சித்தார் என்றும், அதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார் எனவும் ஒரு தரப்பார் கூறுகின்றார்கள். ஆனால், சேவைக் காலத்தில் இருந்த போது செய்த குற்றங்களுக்காகத்தான் பொன்சேகாவைக் கைது செய்துள்ளோம் என்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க!

ஒரு கைதுக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்! ஆனால், இரண்டுபட்ட காரணங்கள் இருக்கக் கூடாதல்லவா?

***

# கண்ணதாசன் 25

'**கா**ட்டுக்கு ராஜா, சிங்கம். கவிதைக்கு ராஜா, கண்ணதாசன்!' பெருந்தலைவர் காமராஜரின் வாக்கு இது. 'நான் நிரந்தரமானவன், அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்று கண்ணதாசனே அறிவித்தார். கவிரசத்தின் சில துளிகள்...

✱ கண்ணதாசன் என்றால் கண்ணனுக்கு தாசன் என்று அர்த்தம் அல்ல. 'அழகான கண்களைப்பற்றி வர்ணிப்பதிலும், வர்ணிக்கப்பட்டதைப் படிப்பதிலும் ஆசை அதிகம். அதனால் இந்தப் பெயரை வைத்துக்கொண்டேன்' என்பது அவரே அளித்த விளக்கம். பெற்றோர் வைத்த பெயர் முத்தையா.

✱ சிறு வயதில் இன்னொரு குடும்பத்துக்கு 7,000 ரூபாய்க்குத் தத்துக் கொடுக்கப்பட்டவர் கண்ணதாசன். அந்த வீட்டில்



அவர் பெயர், நாராயணன்.

✱ 'கலங்காதிரு மனமே, உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே' என்று 'கன்னியின் காதலி'யில் எழுதியது முதல் பாட்டு. 'மூன்றாம் பிறை'யில் வந்த, 'கண்ணே கலைமானே' கவிஞரின் கடைசிப் பாட்டு.

✱ எப்போதும் மஞ்சள் பட்டுச் சட்டை, வேட்டி அணிந்திருப்பார். திடீரென்று கழுத்து, கைகளில் நகைகள் மின்னும். திடீரென்று காணாமல் போய்விடும். 'பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கு' என்று அவை அடகுவைக்கப்பட்டு இருப்பதைச் சொல்வார்.

✱ மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஹோட்டல், அபிராமபுரம் கவிதா ஹோட்டல் இரண்டும்தான் கவிஞருக்குப் பிடித்த இடங்கள். பெரும்பாலான பாடல்கள் பிறந்தது இங்குதான். வெளியூர் என்றால் பெங்களூர் உட்லண்ட்ஸ்.

✱ வேட்டியின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டு அறைக்குள் நடந்தபடி பாடல்களின் வரிகளைச் சொல்வார். நடந்துகொண்டே இருந்தால்தான் சிந்தனை துளிர்க்கும். கவிதைவரிகள் சொல்லும்போது செருப்பு அணிய மாட்டார்!

✱ 'கொஞ்சம் மது அருந்திவிட்டால், என் சிந்தனைகள் சுறுசுறுப்படைவது வழக்கம். அதைப்போல் இன்ப விளையாட்டில் எனக்கு ஆசை உண்டென்றாலும், சிந்திக்கிற நேரத்தில் ரதியே வந்தாலும் திரும்பிப் பார்க்க மாட்டேன்' என்பது கவிஞரின் வாக்குமூலம்.

✱ 'முத்தான முத்தல்லவோ' பாட்டைத்தான் மிகக் குறைவான நேரத்துக்குள் (10 நிமிடங்கள்) எழுதி முடித்தார். அதிக நாட்களுக்கு அவரால் முடிக்க முடியாமல் இழுத்தது, 'நெஞ்சம் மறப்பதில்லை... அது நினைவை இழப்பதில்லை!'

✱ கண்ணதாசன் அடிக்கடி கேட்கும் பாடல், 'திருப்பாற்கடலில் பள்ளிகொண்டாயே ஸ்ரீமன் நாராயணா.' தனக்குப் பிடித்த பாடல்களாக, 'என்னடா பொல்லாத வாழ்க்கை', 'சம்சாரம் என்பது வீணை' ஆகிய இரண்டையும் சொல்லியிருக்கிறார். கண்ணதாசனுக்குப் பிடித்த இலக்கியம் கம்பராமாயணம். 'நான் பாடல் இயற்றும் சக்தியைப் பெற்றதே அதில் இருந்துதான்' என்பார்.

✱ காமராசர் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க விரும்பினார். சில காட்சிகளையும் எடுத்தார். ஆனால், முற்றுப்பெறவில்லை!

✱ ஆரம்ப காலத்தில் வேலை எதுவும் கிடைக்காததால், சந்திரமோகன் என்று பெயர் மாற்றிக்கொண்டு சினிமாவில் நடிக்க வாய்ப்பு கேட்டிருக்கிறார். பிற்காலத்தில் 'பராசக்தி', 'ரத்தத்திலகம்', 'கறுப்புப்பணம்', 'சூரியகாந்தி' உள்ளிட்ட படங்களில் நடித்தும் இருக்கிறார்.

✱ முதல் மனைவி பெயர் பொன்னம்மா. அடுத்த ஆண்டே பார்வதி என்பவரை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்குத் தலா ஏழு குழந்தைகள். 50-வது வயதில் வள்ளியம்மையைத் திருமணம் செய்தார். இவர்களுக்குப் பிறந்தவர்தான் விசாலி. மொத்தம் 15 பிள்ளைகள்!

✱ படுக்கை அறையில் வைத்திருந்த ஒரே படம் கிருஷ்ணர். வெளிநாடு போவதாக இருந்தால், சாண்டோ சின்னப்பா தேவர் வீட்டுக்குப் போய், அவர் பூஜை அறையில் இருக்கும் முருகனை வணங்கிவிட்டுத்தான் செல்வார்!

✱ 'கண்ணதாசன் இறந்துவிட்டார்' என்று இவரே பலருக்கும் போன் போட்டு வதந்தியைக் கிளப்பி, வீடு தேடிப் பலரும் அழுது கூடிவிட, பிறகு இவரே முன்னால் தோன்றிச் சிரித்த சம்பவம் நடந்திருக்கிறது!

✱ 'உங்கள் புத்தகங்கள் அனைத்தையும் படிக்கும் ஒருவனுக்கு உங்களது புத்திமதி என்ன?' என்று கேட்டபோது, அவர் சொன்ன பதில்... 'புத்தகங்களைப் பின் பற்றுங்கள். அதன் ஆசிரியரைப் பின்பற்றாதீர்கள்!'

✱ தன்னுடைய பலவீனங்களை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு சுயவரலாறு எழுதியவர். 'வனவாசம், மனவாசம் இரண்டும் ஒருவன் எப்படி வாழக்கூடாது என்பதற்கான உதாரணங்கள்' என்றார்.

✱ காமராசர், அண்ணா, எம்.ஜி.ஆர், கருணாநிதி ஆகிய நான்கு பேரையும் அதிகமாகப் பாராட்டியவரும், திட்டியவரும் இவரே! ஈ.வெ.கி.சம்பத், ஜெயகாந்தன், சோ, பழ.நெடுமாறன் ஆகிய நான்கு பேரும் அரசியல்ரீதியாக நெருக்கமான நண்பர்கள். 'கவிஞரின் தோரணையைவிட அரசனின் தோரணைதான் கவிஞரிடம் இருக்கும்' என்பார் ஜெயகாந்தன்.

✱ திருமகள், திரையலி, மேதாவி, சண்டமாருதம் ஆகியவை இவர் வேலை பார்த்த பத்திரிகைகள். தென்றல், தென்றல் திரை, முல்லை, கடிதம், கண்ணதாசன் ஆகியவை இவரே நடத்தியவை.

✱ திருக்கோஷ்டியூர் தொகுதியில் முதல் தடவை நின்றார். தோற்றார். அதன் பிறகு தேர்தலில் நிற்கவே இல்லை. 'இது எனக்குச் சரிவராது' என்றார்.

✱ 'குடிப்பதும், தவறுக்கென்றே தங்களை ஒப்புக்கொடுத்துவிட்ட பெண்களுடன் ஈடுபடுவதும்' ஒரு தனி மனிதன் தன் உடல்நிலைக்கும் வசதிக்கும் ஏற்ப செய்யும் தவறுகளே தவிர, அதனால் சமுதாயத்தின் எந்த அங்கமும் பாதிக்கப்படுவதில்லை' என்று தனது தவறுகளுக்கு வெளிப் படையான விளக்கம் அளித்து உள்ளார்.

✱ 'பிர்லாவைப்போலச் சம்பாதித்து ஊதாரியைப்போலச் செலவழித்து, பல நேரங்களில் பிச்சைக்காரனைப்போல ஏங்கி நிற்கும் வாழ்க்கைதான் என்னுடையது' என்பது அவர் அளித்த வாக்கு மூலம்.

✱ தான் வழக்கமாகப் படுத்துறங்கும் கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட கட்டிலுடன் தன்னை எரிக்க வேண்டும் என்பது கண்ணதாசனின் கடைசி விருப்பம்!

✱ 'அச்சம் என்பது மடமையடா', 'சரவணப் பொய்கையில் நீராடி', 'மலர்ந்தும் மலராத...', 'போனால் போகட்டும் போடா...', 'கொடி அசைந்ததும்', 'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை', 'கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்', 'எங்கிருந்தாலும் வாழ்க', 'அதோ அந்தப் பறவைபோல வாழ வேண்டும்', 'சட்டி சுட்டதடா கை விட்டதடா...' ஆகிய 10 பாடல்களும் தமிழ் வாழும் காலம் முழுதும் இருக்கும் காவியங்கள்.

✱ இறப்புக்கு 11 ஆண்டுகளுக்கு முன்பே தனக்குத்தானே இரங்கற்பா எழுதிவைத்துக்கொண்டார். அதன் கடைசி வரி இப்படி முடியும்...

✱ 'ஏற்றிய செந்தீயே நீ எரிவதிலும் அவன் பாட்டை எழுந்து பாடு!'

✱✱✱

# ராசி பலன்

**15-02-2010 முதல் 21-02-2010 வரை**

## மேஷம்



அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம்.நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசிரிடம் 1,2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம், தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

## மிதுனம்



மிருக சீரிஷம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகியிருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்கும்.

## கடகம்



புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய்நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஸ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.

## கன்னி



உத்திரம் 2,3,4-ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## துலாம்



சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்கும்.

## விருட்ஷிகம்



விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.

## தனுசு



மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ள கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம்.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். மன அமைதி இருக்காது.

## மகரம்



உத்திராடம் 2,3,4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதங்கள்

காரியத் தடை இரு கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு.முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஸ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.

## கும்பம்



அவிட்டம் 3,4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதங்கள்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாகுறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

## மீனம்



பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.மன அமைதி இருக்காது.

# இசைமணியின் பவள விழாவும் பல மொழி அகராதி வெளியீடும்

சென்னை இசைக்கழகத்தில் இசைமணி டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனின் அவர்களது 75 ஆவது பவளவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கலந்து கொண்டு





சிறப்புரை ஆற்றினார். இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஜி.கே. வாசன் தலைமையில் விழா நடைபெற்றது.
இவ்விழாவில் கைத் தொலைபேசிக்காக உருவாக்கப்பட்ட பல மொழி அகராதி மென்பொருள் வெளியிடப்பட்டது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இதனை வெளியிட்டு வைக்க மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் பெற்றுக் கொண்டார்.
இது தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளுடன் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து, சுவீடன், இங்கிலாந்து ஆகிய நாட்டு மொழிகள் சேர்ந்து மொத்தம் 10 மொழிக ளைக் கொண்ட ஒரு பல மொழி அகராதி ஆகும். இதனைக் கைத் தொலைபேசியில் பதிந்து எங்கும் எடுத்துச் செல்ல முடியும். தமிழில் எழுதித் தேடி ஏனைய மொழிகளில் பார்க்கலாம். ஏனைய மொழிகளில் தேடித் தமிழில் பார்க்கலாம்.
ஒரே சமயத்தில் 3 மொழிகளைப் பார்வையிடும் வசதி உள்ளதால் த்மிழில் தேடி மற்றைய நாட்டவர் களுக்குக் காட்டிப் புரிய வைக்க உதவியாக இருக்கக்கூடியதாக இது சுவிஸ் தமிழ்க்கடை நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டுள்ளது. மொழி படிப்பவர்களுக்கும் பல நாடுகளுக்குச் சுற்றுலா செல்பவர்களுக்கும் இது ஓர் வரப்பிரசாதம் எனலாம்.
தமிழ் ஜேர்மன் மொழிகளில் இருமொழிப் புத்தகங்களாக சுவிஸ் ஓம் திட்டத்தால் வெளியிடப்பட்ட திருக்குறள் மற்றும் நாலடியார் ஆகிய புத்தகங்களுடன் ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் ஒரே புத்தகமாக எப்பக்ஸ் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரப் பயிற்சிப் புத்தகத்தையும் சுவிற்சர்லாந்தில் வசிக்கும் திரு. உருத்திரமூர்த்தி தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அதே மேடையில் வைத்துப் பரிசளிப்புச் செய்தார்.
சீர்காழி கோவிந்தராஜனின் இசைத் தொண்டை புகழ்ந்து நினைவுகூர்ந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, தமிழர் நெஞ்சம் எல்லாம் என்றும் நிறைந்து வாழும் கலைஞர் அவர் எனப் போற்றினார்.
வரவேற்புரையை டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் வழங்கினார். தலைமையுரையை மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஜி.கே. வாசன் நிகழ்த்த ஆசி உரையை குன்றக்குடி அடிகளார் ஆற்றினார்.
இசைத் துறை விற்பன்னர்கள், தமிழக அமைச்சர்கள், இசைமணியின் ரசிகர்கள் என விழா மண்டபம் நிரம்பி வழிந்தது.



பன்னாட்டு மொழிபெயர்ப்பு மென்பொருளை கலைஞர் வெளியிட அமைச்சர் ஜி.கே. வாசன் பெற்றுக் கொண்டார். அருகில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சீர்காழி சிவசிதம்பரம், திருமதி சாந்தி மீனாட்சி, திருமதி. தேச. மங்கையர்க் கரசி, டாக்டர் பிரதாபன், திரு. உருத்திரமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

# அரங்கேற்றம்





நாட்டிய கலாமந்திர் இயக்குனர் கலாசூரி ஸ்ரீமதி. வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் ஸ்ரீ. ஸ்ரீமதி. இரவீந்திரமூர்த்தியின் புதல்வியுமான செல்வி. பூரணி இரவீந்திரமூர்த்தியின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45 மணிக்கு பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா மற்றும் கௌரவ விருந்தினர் கம்பவாரிதி ஜெயராஜ் முன்னிலையில் வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# பழங்களை இப்படித்தான் சாப்பிட வேண்டும்



காலையில் படுக்கையில் இருந்து எழுந்ததும் வெறும் வயிற்றில் பழங்கள் சாப்பிட்டால் உடலில் சேர்ந்திருக்கும் நச்சுப்பொருட்களை மலமாக வெளியேற்றும். இதனால், உடலுக்கு புத்துணர்ச்சியும், தெம்பும் கிடைக்கும்.
சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிட்டால் முதலில் பழம் தான் ஜீரணமாகும். உணவுகள் செரிக்க கூடுதல் நேரமாகும்.
உட்கொண்ட உணவுகள் செரிக்காத நிலையில், உடனே பழங்கள் சாப்பிடுவதால் வயிற்றுக்குள்ளே செரிமானமாகிக் கொண்டிருக்கும் உணவு கெட்டுப் போகும்.
அதனால், சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவோ அல்லது பின்னரோ பழங்கள் சாப்பிடுவதுதான் உடலுக்கு ஆரோக்கியம் தரும்.
பழங்களை தனியாக சாப்பிடாமல், அதனுடன் இனிப்பு சேர்த்து மிக்சியில் போட்டு அடித்து ஜூஸாக சாப்பிடும் வழக்கம் பலரிடம் உள்ளது. இது தவறு.
பழங்களை ஜூஸாக சாப்பிடுவதைவிட பழமாக அப்படியே சாப்பிடுவதுதான் நல்லது.
அவ்வாறு சாப்பிடுவதால் நார்ச்சத்து நிறைய கிடைக்கும். சத்தும் முழுமையாக கிடைக்கும்.


SONDERVERKAUF!!



1290.-
statt 1650.-
Polstergruppe Sigfried
inkl. Bettsofa
Textil-leder rot



590.-
statt 1650.-

Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl
www.moebel-ferrari.ch
HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40
Täglich offen von 9.00 bis 20.00 Uhr
Täglich offen von 9.00 bis 20.00 Uhr
Direkt-Kedit
- 6 Monate ohne Zins